www.padippakam.com

# கைலாசபதியின் சமூக நோக்கும் பங்களிப்பும்

சி. கா. செந்திவேல்



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# கைலாசபதியின் சமூக நோக்கும் பங்களிப்பும்

Parthipan
Uhlandstr. 40
44147 Dortmund
Germany

சி. கா. செந்திவேல்

SOUTH ASIAN BOOKS
S. 44, 3rd FLOOR,
C. C. S. M. COMPLEX
COLOMBO - 11.
SHRI LANKA.

SAB

சவுத் ஏசியன் புக்ஸ்
&
தேசிய கலை இலக்கியப் பேரவை

படிப்பகம்

www.padippakam.com

Kailasapathiyin Samooga Nokum Pangalippum
Si. Ka. Senthivel
First Edition : Nov. 1992
Printed at : Suriya Achagam, Madras-17.
Published in Association with
National Art & Literary Association
by
South Asian Books
6/1, Thayar Sahib II Lane,
Madras-600 002.
Rs. 12-00

கைலாசபதியின் சமூக நோக்கும் பங்களிப்பும்
சி. கா. செந்திவேல்
முதற்பதிப்பு : நவம்பர் 1992
அச்சு : சூர்யா அச்சகம், சென்னை-17
வெளியீடு : தேசிய கலை இலக்கியப் பேரவையுடன்
இணைந்து
சவுத் ஏசியன் புக்ஸ்
6/1, தாயார் சாகிப் 2ஆவது சந்து,
சென்னை-600 002.
ரு. 12-00

51/95

படிப்பகம்

www.padippakam.com



**பேராசிரியர் க. கைலாசபதி**
**மறைவின்**
**பத்தாவது ஆண்டு நினைவாக**

படிப்பகம்

www.padippakam.com

# முன்னுரை

தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியராகவும், பல்கலைக்கழக விரிவுரையாளராகவும், பேராசிரியராகவும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகவளாகத் தலைவராகவும் கலைப்பீடாதிபதியாகவும் பணியாற்றியதுடனமையாது, கலை இலக்கியம் பற்றிய தெளிவான ஒரு கண்ணோட்டத்துடன் தமிழ்த் திறனாய்வுத் துறையிலே காத்திரமான பங்களிப்பினை வழங்கியவரும் ஈழத்து இலக்கியத்தின் தனித்துவத்தை நிலைநாட்ட அரும்பாடுபட்டவருமான பேராசிரியர் கைலாசபதி மறைந்து பத்து ஆண்டுகள் கடந்துவிட்டபோதும் பல்வேறு துறைகளில் அவர் ஆற்றிய பணிகள் பற்றிய விரிவான ஆய்வு நூல்கள் இதுவரை வெளிவரவில்லை. ஆங்காங்கே சில கட்டுரைகளும் சிறுநூல்களும் முன்னோடி முயற்சிகளாக வெளிவந்துள்ளன.

அந்த வகையிலே சி. கா. செந்திவேல் எழுதியுள்ள "கைலாசபதியின் சமூக நோக்கும் பங்களிப்பும்" என்னும் இந்நூல், கைலாசின் கலை இலக்கிய, சமூக நோக்கினையும் அவரது அரசியல் நிலைப்பாட்டையும் பல துறை சார்ந்த அவரது பங்களிப்புக்களையும் தெளிவாக அறிமுகம் செய்வதாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கைலாசின் வாழ்வையும் பணிகளையும் எழுத்துகளையும் நன்கு அறிந்தவரான இந்நூலாசிரியர், கைலாஸ் எழுதியுள்ள நூல்கள், கட்டுரைகள், கையெழுத்துப் பிரதிகள் கடிதங்கள், உரையாடல்களின்போது பெற்றுக் கொண்ட தகவல்கள், ஆய்வு நூல்களுக்கும் ஆக்க இலக்கியங்களுக்கும் அவர் எழுதியுள்ள நீண்ட முன்னுரைகள்,

படிப்பகம்

www.padippakam.com

சிறப்பு மலர்கள், நினைவேடு முதலியவற்றையும் கைலாசின் பணிகள் பற்றி அவரது ஆதரவாளர்கள், நடுநிலையினர், எதிரணியினர் எனப் பல திறத்தாரும் தெரிவித்துள்ள கருத்துகளையும் சீர்தூக்கி ஆராய்ந்து இந்நூலை எழுதியுள்ளார்.

நூலின் ஆரம்பத்திலுருந்து இறுதிவரை கைலாசின் பலதுறைப்பங்களிப்போடு அவரது அரசியல் நிலைப் பாட்டையும் தெளிவுபடுத்த நூலாசிரியர் விழைந்துள்ளார்.

"பேராசிரியர் கைலாசபதியின் சமூகப் பங்களிப்பினை மதிப்பீடு செய்யும் போது அவரது சாதனைகள் — அணுகு முறையும் ஆய்வுத்திறனும் முடிவுகளும் நூற்றுக்கு நூறு என்ற விதத்தில் முற்றிலும் சரியானவை என்றோ தவறுகள் குறைபாடுகளுக்கு அப்பாற்பட்டவையென்றோ வாதிட வேண்டியதில்லை. இதனைக் கைலாசபதியோ அன்றி அவரைப் போன்ற சமூக விஞ்ஞானச் சிந்தனையாளர்களோ என்றும் ஏற்றுக் கொண்டதுமில்லை. உலகில் எந்தவொரு மாமேதைத் தன்மை வாய்ந்த மனிதனும் முற்று முழுதாகச் சரியாகவும் குறைபாடுகள் எதுவும் அற்றும் சாதனைகளை மட்டுமே புரிந்தார்கள் என்று கூறுவது உண்மைக்கு நேர் எதிரானதாகும்" என நூலாசிரியரே குறிப்பிட்டுள்ளமை அவரது நிதானமான நோக்கினைப் புலப்படுத்துகின்றது.

கைலாஸ் நவீன தமிழ் இலக்கியங்கள் பற்றி விரிவான முறையிலே ஆய்வுகள் நிகழ்த்துவதற்கு முன்பே பழந் தமிழ் இலக்கியங்கள் பலவற்றைச் சமூகவியல் அடிப்படை யிலே விரிவாக ஆராய்ந்துள்ளமையையும், அவற்றின் சிறப்பியல்புகளையும் பழமைக்கும் புதுமைக்குமிடையிலான உள்ளார்ந்த தொடர்பினையும் வளர்ச்சியினையும் எவ்வாறு அணுகி நின்றார் என்பதனையும் சுருக்கமாக நூலின் முற்பகுதியிலே சுட்டிக்காட்டியுள்ள ஆசிரியர், ஈழத்தின் நவீன தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குக் கைலாஸ் ஆற்றியுள்ள பெரும்பங்கினை விரிவாக நோக்கி மதிப் பிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

படிப்பகம்

www.padippakam.com

ஈழத்து இலக்கியத்தின் சிறப்பியல்புகளைப் புரிந்து கொண்டு ஈழத்து இலக்கிய செல்நெறியைச் செம்மைப் படுத்த முனைந்த வேளையில் ஈழத்திலும் தமிழகத்திலு மிருந்து எழுந்த சவால்கள், சுமத்தப்பட்ட குற்றச சாட்டுகள், அவதூறுகள் முதலியவற்றையெல்லாம் அவர் எவ்வாறு புறங்கண்டார் என்பதும், "ஈழத்துத் தேசிய இலக்கியக் கோட்பாடு" வளர்வதற்கு எவ்வெவ் வகையிலே பங்களிப்புக்களைச் செய்துள்ளார் என்பதும் சற்று விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

தமிழகத்தின் கீழ்த்தரமான புனைகதைகளையும் சஞ்சிகைகளையும் இனங்கண்டு அவை இலங்கையிலே இறக்குமதி செய்யப்படுவதனால் ஈழத்து இலக்கியத் தினதும் மக்களினதும் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு ஏற்படக்கூடிய இடையூறுகளைச் சுட்டிக்காட்டியதுடன்மை யாது, நவீன தமிழ் இலக்கிய உலகில் ஒரு சாராரால் போற்றப்பட்டுவந்த மேற்கத்திய இலக்கியங்களின் உள்ளார்ந்த குறைபாடுகளை அம்பலப்படுத்துவதிலும் "கலை கலைக்காகவே" என்னும் கோட்பாட்டை அழுந்தி நின்றவர்களால் நவீன தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சிக்கு ஏற்பட்ட இடர்களைப் புறங்காண்பதிலும் கைலாஸ் எவ்வாறு முனைப்புடன் செயற்பட்டு வந்தார் என்பதை ஆசிரியர் ஆதாரங்களுடன் விளக்கியுள்ளார்.

"விளையும் பயிரை முளையிலே தெரியும்" என்பதற் கிணங்க இடைநிலைக் கல்வி மாணவனாக யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் றோயல் கல்லூரியிலும் பயின்று கொண்டிருக்கும்போதே, பரீட்சைத் தேவைகளுக்கான படிப்புடன் மட்டும் நின்றுவிடாது, பரந்து விரிந்த முறை யில் பலதுறை நூல்களையும், மார்க்சியத் தத்துவ நூல் களையும் கற்ற கைலாஸ் இடைவிடாத தேடலில் ஈடுபட்டுத் தமது பிற்காலச் சாதனைகளுக்கு வேண்டிய அடித்தளத்தை எவ்வாறு இட்டுக் கொண்டார் என்பதை யும் கல்லூரி ஆசிரியர் கார்த்திகேசன், கலாநிதிப்பட்ட ஆய்வு வழிகாட்டியான பேராசிரியர் ஜோர்ஜ் தொம்சன் முதலானோர் உறுதிமிக்க மார்க்சியவாதியாக கைலாசபதி

www.padippakam.com

பரிணமிப்பதற்கு எவ்வாறு அடிகோலி வழிகாட்டினர் என்பதையும், கைலாசபதி எத்தகைய மார்க்சியவாதி என்பதையும் தயக்க மயக்கங்களுக்கு இடமளிக்காது ஆசிரியர் எடுத்துக் காட்டியுள்ளமை கைலாசபதியைச் செவ்வனே புரிந்து கொள்ள முயல்வோருக்குப் பயன் தருவதொன்றாகும்.

கைலாசபதி மிகமுனைப்புடன் செயற்பட்ட 1952-1982 காலப் பகுதியினதும் அதற்குச் சற்று முற்பட்ட காலப் பகுதியினதும் சர்வதேசச் சூழ்நிலைகளையும் இலங்கை இந்திய நிலைகளையும் வேண்டிய இடங்களிலே பொருத்தமான முறையில் விளக்கிச் செல்லும் நூலாசிரியர் அந் நிலைமைகள் கைலாசின் முயற்சிகளுக்கு எவ்வெவ்வகையிற் சாதக பாதகமாக அமைந்தன என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளமை குறிப்பிட்டுக் கூறக்கூடியதொன்றாகும்.

இந்நூலிற் காணத்தக்க இன்னொரு சிறப்பு: கைலாஸ் தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் எவ்வெப் புனைபெயர்களில், எவ்வெப் பத்திரிகைகளில் எத்தகைய கட்டுரைகளை எழுதியுள்ளார் என்ற தகவல்களைத் தருவது, அம்பலத்தான், அம்பலத்தாடி, அபேதன், ஜனமகன், உதயன் முதலான பெயர்களில் அவர் எழுதியுள்ள கட்டுரைகளுள் பெரும்பாலனவை தேசிய, சர்வதேசிய அரசியல் விவகாரங்கள் சம்பந்தமானவையாக அமைந்தன.

கைலாசைப் பலரும் பொதுவாக ஒரு தமிழ்ப் பேராசிரியராகவும், கலை இலக்கியத் திறனாய்வாளராகவுமே அறிவர். ஆனால், அவர் சிறந்த பல அரசியல் விமர்சனக் கட்டுரைகளையும் தமிழில் எழுதியுள்ளார். பலரும் அறிந்திராத, நூல் வடிவம் பெறாத அவரது முக்கியமான அரசியல் விமர்சனக் கட்டுரைகளின் சிறப்பம்சங்கள் எவை என்பதையும் நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

கைலாசின் பணிகள், பங்களிப்புகள் பற்றி இதுவரை வெளிவந்த கட்டுரைகளிலும் நூல்களிலும் நோக்கப்படாத அளவிற்கு விரிவாக அவரது அரசியல் நிலைப்பாட்டினை

படிப்பகம்

www.padippakam.com

யும் கலை, இலக்கியம், சமூகம், அரசியல் ஆகியவற்றுக்கிடையிலான நெருங்கிய தொடர்பு குறித்த கருத்துக்களையும் இந்நூலாசிரியர் நோக்கியுள்ளார். நூலின் கணிசமான பகுதி மேற்கண்ட விடயங்கள் பற்றியதாகவே அமைந்துள்ளமையினைக் குறிப்பிட வேண்டும்.

கைலாசின் ஆழ்ந்தகன்ற அரசியற் அறிவு, இலங்கையினதும் அனைத்துலகினதும் அரசியல் நிகழ்வுகளையும் போக்குகளையும் உடனுக்குடன் கூர்ந்து நோக்கி அலசிய விதம், இலங்கைத் தமிழரின் தேசியப் போராட்டம் தொடர்பாக அவ்வப்போது அவர் தெரிவித்தவை— இன்னோரன்ன பலவற்றை நூலாசிரியர் சுட்டிக் காட்டியுள்ளார்.

'தினகரன்' பத்திரிகையில் மெச்சத்தக்க வகையிலே செயலாற்றிய கைலாஸ் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தோற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் காத்திரமான பங்களிப்பினை நல்கும்வரை பல்வேறு துறைகளில் ஆற்றிய பணிகளை நூலாசிரியர் மதிப்பிட்டுக் காட்டியுள்ளார்.

இந்நூலாசிரியரான சி. கா. செந்திவேல் கைலாசிடம் அன்பும் மதிப்பும் கொண்டவராக மட்டுமன்றிக் கைலாசையும் அவர் மீது தாம் கொண்ட மதிப்புக்கான காரணங்களையும் புத்திபூர்வமாக உணர்ந்தவராகவும் விளங்குவதற்கு இந்நூல் சான்றாக அமைகிறது. கைலாசின் நோக்கினையும் நிலைப்பாட்டினையும் ஆளுமையினையும் விழுமியங்களினையும் சரியான பங்கப்புலத்தில் விளங்கிக் கொள்வதற்குப் பலவகைகளில் இந்நூல் உதவும் எனத் துணிந்து கூறலாம்.

**சி. தில்லைநாதன்**
தமிழ்ப் பேராசிரியர்

பேராதனைப் பல்கலைக்கழகம்,
பேராதனை,
இலங்கை.
1992-8-21

படிப்பகம்

www.padippakam.com

# பதிப்புரை

பேராசிரியர் கைலாசபதி அவர்கள் நம் காலத்தில் வாழ்ந்து மறைந்த மனிதநேயம் கொண்ட நல்லறிஞர். அவர் சமூகப் பொறுப்புணர்வோடு தமிழ் இலக்கியத்துக்கு ஆற்றிய அரும்பணிக்காக தமிழ்கூறும் நல்லுலகம் என்றும் அவரை நினைவுகூறும்.

கலை இலக்கியத்தில் தூய்மைவாதத்தை ஏற்று ஆளும் வர்க்கங்களுக்குத் துணைபோகும் போக்கை இவர் வெறுத் தார். தனி மனிதவாதத்திற்குப் பதிலாக சமூகப் பார்வையை வலியுறுத்தியதன் மூலம் ஒடுக்கப்பட்ட மக்களின் பக்கம் தன்னை இனங்காட்டி நின்றார்.

மக்களின் வாழ்நிலைகளை நிர்ணயிக்கும் அரசியலை உயர்வர்க்கத்தினரிடமும், வாக்குச் சேகரிப்பவர்களின் கைகளில் மட்டும் விட்டுவிட்டு அறிஞர்களும் கல்விமான் களும் ஒதுங்கும் நிலைகண்டு மனம் நொந்தார். இதனால் கலை இலக்கியத்துக்கும் அரசியலுக்கும் இருக்கும் உள் ளார்ந்த உறவை உணர்ந்து அரசியல் விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்த தன்னால் இயன்ற பணிகளைச் செய்தார். மார்க்சிய தத்துவம்—நடைமுறையுடன் இவருக் கிருந்த ஈடுபாடு இதற்கும் துணை புரிந்தது.

அவரது பத்தாவது ஆண்டு நினைவாக கைலாசபதி யின் சமூக நோக்கும் பங்களிப்பும் என்னும் இந்நூலை வெளியிடுவதில் நாம் மகிழ்ச்சியடைகிறோம். இதனை எழுதிய சி.கா. செந்திவேல் அவர்கள் கைலாசபதியின்

படிப்பகம்

www.padippakam.com



இறுதிக் காலம்வரை தொடர்பு கொண்டிருந்த பொது வுடமை அரசியல் இயக்கத்தின் முன்னணித் தோழராவார். பேராசிரியருடன் நெருங்கிப் பழகிய இவர் இந்நூலை எழுதியது சிறப்பானதாகும்.

பேராசிரியர் கைலாசபதி நிறைவாகப் பல நூல்களை வெளியிட்டுள்ள போதிலும் அவரைப்பற்றி தேசிய கலை இலக்கியப் பேரவை வெளியிடும் முதல்நூல் இதுவாகும். இந்நூலை உருவாக்கித்தந்த தோழர் சி. கா. செந்திவேல் அவர்கட்கும், எம்முடன், இணைந்து வெளியிடும் சவுத் ஏசியன் புக்ஸ் நிறுவனத்தினருக்கும், எமது வெளியீடுகளுக்கு ஆதரவு நல்கி வரும் இலக்கிய ஆர்வலர் களுக்கும் எமது நன்றிகள்.

தேசிய கலை இலக்கியப் பேரவை

யாழ்ப்பாணம்,
17-7-92

படிப்பகம்

www.padippakam.com

# நூல் பற்றி நூலாசிரியர்

இந்நூல் பேராசிரியர் கைலாசபதி பற்றிய முழுமையான ஆய்வோ மதிப்பீடோ அல்ல. அவற்றுக்கான ஆர்வ முயற்சிகளை முன்தள்ளும் நோக்கில்—இரண்டு சந்தர்ப்பங்களில் முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் சற்று விரிந்த அளவில் நூல் வடிவம் பெற்றுள்ளன என்பதை முதலில் கூறிக்கொள்ளுதல் வேண்டும்.

தேசிய கலை இலக்கியப் பேரவையினர் யாழ்ப்பாணத்தில் நடத்தி வந்த 'கைலாசபதி நினைவு ஆய்வரங்கில், ஒரு கட்டுரை சமர்ப்பிக்கும்படி கேட்டிருந்தனர். 'கைலாசபதியின் சமூக நோக்கும் அரசியலும்' என்னும் தலைப்பிலான அக்கட்டுரையை எழுதும் முயற்சியில் ஈடுபட்டிருந்தேன். இதேவேளையில்தான் பேராதனைப் பல்கலைக் கழகத் தமிழ்ச் சங்கத்தினர் 'கைலாசபதியின் சமூக நோக்கும் பங்களிப்பும்' என்னும தலைப்பில் ஒரு சொற்பொழிவு நிகழ்த்துமாறு அழைப்பு விடுத்தனர். அதனை நான் ஏற்றுக் கொண்டேன்.

பேராசிரியர் கைலாசபதி மறைவின் ஒன்பதாவது ஆண்டு நினைவாக 5-12-1991 அன்று மேற்படிச் சொற்பொழிவு நிகழ்ச்சி பேராசிரியர் சி. தில்லைநாதன் தலைமையில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இடம் பெற்றது. ஒன்றேகால் மணி நேரத்தில் ஆற்றப்பட்ட எனது சொற்பொழிவில் கைலாசபதியின் சமூக நோக்கினையும் அவரது பல்துறை சார்ந்த பங்களிப்புப் பற்றியும் எடுத்துக் கூறினேன். இச்சொற்பொழிவினை நேரிலும், ஒளிப்பதிவு

படிப்பகம்

www.padippakam.com



நாடாவிலும் செவிமடுத்த தோழர்களும் நண்பர்களும் அதனை நூல்வடிவில் கொண்டுவருவதன் அவசியத்தைச் சுட்டிக் காட்டினர். மேலும் அந்நூலினை கைலாசபதி மறைவின் பத்தாவது ஆண்டு நிறைவின்போது வெளியிட விரும்புவதாகவும் தேசிய கலை இலக்கியப் பேரவையினர் விருப்பம் தெரிவித்தனர் எனவே அச்சொற்பொழிவில் சுட்டிக் காட்டியவற்றையும், தொட்டுக் காட்டியவைகளை யும் அழுத்தியும், விரித்தும் எழுதினேன். அத்துடன் ஆய்வரங்குக் கட்டுரையையும் இணைத்தேன். அவற்றின் தொகுப்பே இந்நூலாகும். கைலாசபதியின் சமூக நோக்கை யும் பல்துறை சார்ந்த அவரது பங்களிப்பையும் அறிந்து கொள்ள முற்படும் எவருக்கும் எளிதில் படித்துக்கொள்ளத் தக்க வகையில் இந்நூல் அமைய வேண்டும் என்ற நோக்கிலே இதனை எழுத முயன்றேன்.

எனது துறை இலக்கியத்துறை சார்ந்த ஒன்றல்ல. நான் ஓர் இலக்கியவாதியுமல்ல. ஆனால் இலக்கியத்தின் மீது ஆர்வமும் அக்கறையும் கொண்ட ஒருவன். இலக்கிய ஆர்வலன் மட்டுமே. அதனால் இலக்கியத்துறையில் பெரும் பங்களிப்பினையும் சாதானையையும் வழங்கிச் சென்ற பேராசிரியர் கைலாசபதியை முழுமையான இலக்கியத்துறை சார்ந்த ஒருவரைப்போல் விளக்கி அறிமுகப்படுத்துவதில் எனக்குள்ள சிரமத்தை உணர்வேன். இருப்பினும் அரசிய லுக்கும் இலக்கியத்திற்கும் உள்ள உள்ளார்ந்த உறவின் பிணைப்பானது, கைலாசபதி போன்ற ஒருவரின் தெளிவான பங்களிப்பினை விளக்கி அறிமுகம் செய்வதற்குப் பெரும் சிரமத்தைக் கொடுக்காது என்ற துணிவினால் அம்முயற்சியை மேற்கொண்டேன். இந்நூலில் ஆங்காங்கே ஓர் அரசியலாளரின் இலக்கியப் பார்வை கொண்ட அம்சங் களே முடிவைப்புப் பெற்று நிற்பதை வாசகர்கள் உணரக் கூடும். அது நூலின் முழுமைக்கு எவ்விதத்திலும் ஊறு ஆகமாட்டாது என்பது என் கருத்து.

பேராசிரியர் கைலாசபதி ஆணித்தரமான சமூகத் தத்துவ நோக்கும் அதன் அடிப்படையிலான இலட்சியத்

படிப்பகம்

www.padippakam.com



தாகமும் கொண்டவராக வாழ்ந்து அதன் வழியில் கனதி யான சமூகப் பங்களிப்பு வழங்கிச் சென்றவர். கைலாசபதி தமது காலத்தின் இலக்கிய அரசியல் சமூகப் பிரச்சினை களின் நிகழ்காலத் தேவையின் பொருட்டே சிந்தித்தார். செயற்பட்டார். எழுதினார் தமது ஆற்றல் ஆளுமையைப் பயன்படுத்தி வரலாற்றின் சமகாலத் தேவையை நிறைவு செய்வதற்குத் தன்னாலான ஆகக்கூடிய முயற்சிகளைச் செய்தும் வந்தார். அவர் நிகழ்காலத்தைப் புறக்கணித்து விட்டு எதிர்காலத்திற்காக மட்டும் எழுதியவர் அல்ல. கடந்த காலத்தின் அனுபவங்களை நிகழ்காலத் தேவைக் காகப் பயன்படுத்த முன்நின்றவர். அதன்மூலம் எதிர் காலத்திற்கான ஒளியினை உருவாக்குவதில் மிக நம்பிக்கை யுடன் இருந்து செயற்பட்டும் வந்தவர். இவ்விடத்திலே நவீன சீன இலக்கியத்தின் முன்னோடி எனப் போற்றப்படும் லூ சுன் ஒரு சந்தர்ப்பத்தில் கூறியிருந்ததும் கவனத்திற்குரிய தொன்றாகும். ''ஒரு எழுத்தாளனால் வர்க்க சமுதாயத்தில் வாழ்ந்து கொண்டு வர்க்கங்களைக் கடந்து நிற்கமுடியாது. யுத்த காலத்தில் வாழ்ந்து கொண்டு யுத்த முனையில் இருந்து விடுபட்டுத் தனித்து நிற்கமுடியாது. இன்று வாழ்ந்துகொண்டிருக்கும் ஒருவரால் எதிர்காலத்திற்காக எழுதமுடியாது அப்படிச் செய்யமுடியும் என்பது வெறும் போலித்தனமாகும். நிஜ வாழ்க்கையில் அப்படி ஒரு மனிதன் இருக்கமுடியாது.'' மேற்குறித்த லூ சுனின் வரையறையை முழுமையாக ஏற்றுக்கொண்டவர் போல் கைலாசபதி தமது வாழ்வை வரையறைப்படுத்தியவர் என்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக்கூடியதொன்றே.

கைலாசபதி தமது காலத்தின் சமூக முரண்பாடு களையும் அவற்றின் விளைவான சமுதாயப் பிரச்சினை களையும் வர்க்கப் போராட்டத்தின் அடிப்படையில் நோக்கிச் செயல்புரிந்தார். அவற்றுக்குப் பரிகாரமாக சமூகப் புரட்சி, சமூக மாற்றம், இறுதியில் மனிதகுல விடுதலை என்ற உயர்ந்த இலட்சிய நோக்கங்களை

www.padippakam.com



வென்றெடுத்து நிலைநாட்டுவதைக் குறியாகவும் கொண்டிருந்தார். எனவே புகழ், பெயர், சுயநலம் போன்றவற்றைக் கடந்து நின்று தமது பங்களிப்பினை வழங்கும் ஒருவராக அவரால் வாழமுடிந்தது. அதனாலேயே அவர் தனது வாழ்வு பங்களிப்பு என்பனவற்றின் வட்டத்தை மேலும் மேலும் விரிவடையச்செய்து ஏனைய புத்திஜீவிகள்-கல்வியாளர்களைவிட சமூகம்—மக்கள் என்ற பெரும் பரப்பில் தம்மையும் இணைத்து ஏனையோருக்கு முன்னுதாரணம் காட்டி நிற்கும் ஓர் பேராசிரியராகவும் வாழ்ந்து மறைந்தார். பல்கலைக்கழக எல்லைகளுக்குள்ளும் படிப்பாளிகள் மட்டத்துடனும் தம்மைப் மட்டுப்படுத்தி தங்களை ஓர் படித்த உயர்குழாத்தினராகப் காட்டிக்கொள்ளப் பல புத்திஜீவிகள் முற்படும் இன்றைய சூழலில் கைலாசபதி என்ற ஆற்றல்மிக்க சமூகச் சிந்தனையாளனின் சிந்தனைகளும், செயல்களும், வாழ்வும் பங்களிப்பும் ஏனையோருக்கு ஓர் ஒளிமிக்க முன்னதாரணம் என்பதில் எவ்வித சந்தேகமும் இருக்க முடியாது.

இத்தகைய சமூகப் பெறுமதி மிக்க மனிதரான பேராசிரியர் கைலாசபதியை இன்றைய' இளைய பரம்பரையினர் மத்தியில் அறிமுகப்படுத்தி அவரது சிந்தனைகளை அறிவுபூர்வமாகவும் செயல் பூர்வமாகவும் படித்து முன்னெடுக்கும் போக்கினை வளர்ப்பது அவசியமானதோர் சமூகத் தேவையாகும். இத்தகைய முயற்சிக்கு ஓர் அறிமுக நூலாகவே இந்நூலினை எழுதி உள்ளேன். இதில் எவ்வளவிற்கு நான் வெற்றி பெற்றேன் என்பதை வாசகர்களே முடிவுசெய்தல் வேண்டும்,

இந்நூல் உருவம் பெறுவதற்கான களமாக அமைந்த நினைவுச் சொற்பொழிவை நிகழ்த்த என்னை அழைத்த பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்க நிர்வாகிகளுக்கும், நூலாக்கும்படி தோழமையுடன் ஆலோசனையும் வற்புறுத்தலும் வழங்கிய தோழர்கள்—நண்பர்களுக்கும்

www.padippakam.com



இன்றைய நெருக்கடி மிக்க சூழலில் நூலாக்கும் பொறுப்பினைக் கையேற்ற தேசிய கலை இலக்கியப் பேரவையினருக்கும் எனது நன்றிகள். நூல் எழுதும்போது அவ்வப்போது தகுந்த ஆலோசனை வழங்கிய தோழர்கள் க. தணிகாசலம், சோ. தேவராஜா ஆகியோருக்கு நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன்.

இந்நூலுக்குரிய முன்னுரையை நட்பின் உரிமையோடும் இணைந்த நோக்கின் உணர்வோடும் எழுதி வழங்கிய கைலாசபதி வழிநிற்கும் பேராசிரியர் சி. தில்லைநாதன் அவர்களுக்கு நன்றி கூறுகிறேன். இந்நூலினைத் தேசிய கலை இலக்கியப் பேரவையுடன் இணைந்து அழகுற அச்சிட்டு வெளியிடும் சவுத் ஏசியன் புக்ஸ் நிறுவனத்தினரும் உரிய அச்சக ஊழியர்களும் நன்றிக்குரியவர்கள்.

நன்றி

சி. கா. செந்திவேல்.

பருத்தித்துறை வீதி,
சிறுப்பிட்டி வடக்கு,
நீர்வேலி,
இலங்கை.
10-8-1992

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# கைலாசபதியின் சமூக நோக்கும் பங்களிப்பும்

வரலாற்று வளர்ச்சியின் போக்கிலே ஒவ்வொரு சமுதாயமும் தனது பல்துறைத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு அறிஞர்கள், சிந்தனையாளர்கள், வீரர்கள், தலைவர்கள் மற்றும் செயலூக்கம்கொண்ட அனைவரையும் உருவாக்கிக்கொள்கின்றது. அத்தகையவர்கள் தத்தமது விசேஷ ஆற்றல், ஆளுமை, செயற்றிறன் போன்றவற்றால் சமுதாய வளர்ச்சிக்கு விசைகொடுத்து, தகுந்த சமூகப் பங்களிப்பையும் வழங்கிச் செல்கிறார்கள். இத்தகைய போக்கு நாடுகளின் வெவ்வேறுபட்ட சூழல்களுக்கு உகந்தவாறு அமைகின்ற அதே வேளை முழு மனித குலத்தினதும் மொத்த வளர்ச்சிப்போக்காகவும் அமைந்து விடுகின்றது. அந்தவகையில் இருபதாம் நூற்றாண்டிலே இலங்கையில் தோன்றிய அறிஞர்கள், ஆய்வாளர்கள், சிந்தனையாளர் களில் பேராசிரியர் கனகசபாபதி கைலாசபதியும் (1933-1982) ஒருவராகின்றார். அவர் தலைசிறந்த ஆய்வறிவாளராகவும் சிந்தனையாளராகவும் திகழ்ந்து தனது தனித்துவமான முத்திரையை ஈழத்துச் சமூகப் பரப்பிலே பதித்துச் சென்றவர்.

பேராசிரியர் க. கைலாசபதி மறைந்து ஒன்பது ஆண்டு கள் கடந்துவிட்டன. இக்காலப்பகுதியில் அவரைப்பற்றியும் அவரது சமூகப் பங்களிப்புப் பற்றியும் உரிய மதிப்பீடுகளும்

www.padippakam.com



கணிப்பீடுகளும் முழுமையாக வெளிவரவில்லையாயினும் அவற்றைப் பல முனைகளில் இருந்தும் வெளிவரச் செய்வது ஓர் தவிர்க்க முடியாத சமூகத் தேவை என்பது கவனத்திற் குரியதொன்றாகும்.

# 1

இன்றைய உலகிலே ஒவ்வொரு மனிதனும் ஏதாவதொரு உலகக் கண்ணோட்டத்திற்கு உட்பட்டே வாழ முடிகின்றது. மனிதர்களின் வாழ்விலும் அவர்களது செயல்களிலும் இவ்வுலகக் கண்ணோட்டத்தின் பிரதிபலிப்பைக் காணமுடியும். விளங்கியும், விளங்காமலும்; ஏற்றுக்கொண்டாலும் ஏற்றுக்கொள்ளாவிடினும் இத்தகையதொரு நியதிக்கு அப்பாற்பட்டவராக எவரும் இருக்க முடியாது. இந்நியதியானது அறிஞர்கள். சிந்தனையாளர்கள், செயற்றிறன் கொண்டவர்களிடையே அதிக துலக்கத்துடன் பிரதிபலித்து நிற்பதைத் தெளிவுடன் கண்டு கொள்ள முடியும்.

அவ்வாறு நோக்கும்போது பத்தொன்பதாம் நூற்றாண்டிலே ஓர் புதியவகை உலகக் கண்ணோட்டம் ஐரோப்பாவிலே தோற்றம்பெற்று உலகம் பூராவும் வேகமான வளர்ச்சி கண்டுவந்தமையைக் காண முடியும். அதுவே மார்க்சிய உலகக் கண்ணோட்டமாகும். இந்த உலகக் கண்ணோட்டமானது மனித சமூக வாழ்வையும் இயற்கையோடிணைந்த அதன் தன்மைகளையும் விஞ்ஞானபூர்வ அடிப்படையிலே அணுகி ஆராய்ந்து பல உண்மைகளை உலகுக்கு வகுத்து அளித்தது. சமூக இயக்கத்தினதும் சமுதாய வளர்ச்சியினதும் கடந்த காலத்தையும் நிகழ் காலத்தையும் வர்க்கப் போராட்ட நோக்கிலிருந்து ஆராய்ந்ததுடன் எதிர்காலத்திற்கான திசைவழியையும் சுட்டிக் காட்டியது. ஏற்கனவே நிலைநிறுத்தப்பட்டு பாதுகாத்து

www.padippakam.com



வரப்பட்ட கருத்துமுதல்வாத நிலையில் உலகக் கண்ணோட்டத்திற்கு நேர் எதிரானதொன்றாக கார்ல் மார்க்ஸ், பிரடெரிக் ஏங்கல்ஸ் ஆகியோரால் இயங்கியல் பொருள்முதல்வாத உலகக் கண்ணோட்டம் முன் நிறுத்தப் பட்டது. முற்றிலும் விஞ்ஞான அடிப்படைகளைக் கொண்டு நிறுவி முன்வைக்கப்பட்ட இம்மார்க்சிய உலகக் கண்ணோட்டமானது மனித குலத்திற்குப் புதிய சமூக விஞ்ஞானமாக வும் சமுதாய மாற்றத்திற்கான அடக்கப்பட்டவர்க்கங்களின் புரட்சிகரமான தத்துவமாகவும் திகழ்ந்தது. இம்மார்க்சிய உலகக் கண்ணோட்டமானது உலக வளர்ச்சிப் போக்கில் தனது உண்மைத் தன்மையை மீண்டும் மீண்டும் நிரூபித்த தோடு செழுமையடைந்து வளர்ச்சியுற்றுச் செல்லும் மனித குல விடுதலைக்கான தத்துவமாகவும் செயற்படத் தொடங்கியது. ''அது முழுமையானதாகவும் ஒருமையான தாகவும் உள்ளது. மூடநம்பிக்கை, பிற்போக்குவாதம், முதலாளிய அடக்குமுறைக்கு உகந்த பாதுகாப்பு ஆகிய வற்றுக்கு இணங்கிச்செல்லாத ஒருங்கிணைக்கப்பட்ட உலகக் கண்ணோட்டத்தை இது மனித சமூகத்திற்கு வழங்கு கின்றது''[1] என லெனின் எடுத்து விளக்கினார். மேலும் அவர் கூறும்போது ''மார்க்சிய கோட்பாடு உண்மையாக இருப்பதனால் அது மிகவும் வலிமையானதாகும்'' என்றார்.

இம்மார்க்சிய உலகக் கண்ணோட்டத்தினையே கைலாச பதியும் தமது அடிப்படை நிலைப்பாடாக வரித்துக்கொண் டார். அதன் வாயிலாக தாம் வாழ்ந்த சமூகச் சூழலிலே தெளிவானதும் உறுதிமிக்கதுமான ஓர் சமூக நோக்கினை அவரால் உருவாக்கிக் கொள்ளவும் முடிந்தது. அவ்வாறு அவர் இத்தத்துவத்தைக் கையேற்றபோது அதனை ஓர் மேலெழுந்தவாரி நிலையிலோ, அல்லது வெறும் இலட்சிய வாதப் போக்கிலோ, அன்றி ஒருவகைக் கல்வி நாகரீக முறையிலோ அணுகி ஏற்றுக் கொள்ளவில்லை. அதே போன்று வாழ்வின் யதார்த்த நிலைமைகளில் இருந்து வெகுதூரம் விலகிநிற்கும் சிலவகைத் தத்துவ வித்தகர்கள்

படிப்பகம்

www.padippakam.com



போன்றும் கைலாசபதி மார்க்சிய உலகக் கண்ணோட்டத்தை அணுகி ஏற்றுக் கொண்டவரல்லர். அதற்குப் பதிலாக ஆழ்ந்த அறிவுப்பூர்வமாக, அதன் நடைமுறை அனுபவத்தின் உண்மைத் தன்மையினாலும் அதன் உறுதியான சமுதாய வர்க்க சார்பு நிலையாலும் அவர் ஈர்க்கப்பட்டார்.

மேலும் அத்தத்துவம் கோடானுகோடி அடக்கப்பட்டுச் சுரண்டப்படும் மக்களின் விடிவுக்கும் அதன் மூலம் மொத்த மனித குலத்தின் விடுதலைக்கும்—விமோசனத்திற்கும் வழி காட்டக் கூடியதான உயர்ந்த தத்துவம் என்ற வகையிலே தான் அதனைக் கைலாசபதி முழுமையுடன் கையேற்றுக் கொண்டார். அதனாலேயே ஈழத்துத் தமிழர் சமூகப் பரப்பிலே தமக்கு முற்பட்ட அறிஞர்கள், ஆய்வறிவாளர்கள், பேராசிரியர்களை மட்டுமல்லாது தமது சமகால அறிஞர்கள், பேராசிரியர்கள் ஆய்வறிவாளர்களையும் விடவும் தனித்துவமான நோக்கையும் போக்கையும் கொண்டவராக அவர் விளங்கினார்.

இன்று விஞ்ஞானமும்—தொழில்நுட்பமும் வெகு தூரத்திற்கு முன்னே சென்று கொண்டிருக்கின்றன. அதனால் இயற்கை, சமூகம், மனிதன் பற்றிய சிந்தனைகள், கருத்துக்கள், செயற்பாடுகள் போன்றவற்றிலும் உலக ரீதியான முன்னேற்றங்கள் வேகமாக எய்தப்பட்டும் வருகின்றன. ஆனால் நமது தமிழர் சமூகச் சூழலானது இன்றும் பழைமைவாதத் தடத்திலேயே சுற்றிச் சுழன்று கொண்டிருக்கின்றது. இப்பழமைவாதமானது இந்திய கலாசார—ஆன்மீக மரபில் இருந்து பெறப்பட்டதொன்று என்பது ஏற்கெனவே அடையாளங் காணப்பட்டதொன்றாகும். இத்தகைய பழமைவாதச் சூழலில் ஒருவர் விஞ்ஞான பூர்வமானதும் புரட்சிகரமானதுமான ஓர் சமூக நோக்கினைப் பெற்றுக்கொள்வது என்பது எளிதான தொன்றாக இருக்க முடியாது. அதிலும் குறிப்பாக தமது

www.padippakam.com



இளமைக்காலம் முதல் இறுதிக்காலம்வரை அத்தகைய சமூக நோக்கின்மீது ஈடாட்டம் கொள்ளாது உறுதியாக நிலைத்து நிற்பது என்பதுகூட மிகக் கடுமையானதோர் சோதனைமிகுந்த விடயமுமாகும். தமது இளமைக்காலத்தில் தாம் மார்க்சிய உலகக் கண்ணோட்டத்தைக் கையேற்று விட்டதாகவும், அதன்வழி நின்று ஓர் உறுதியான சமூக நோக்கினைப் பெற்றுள்ளதாகவும் பிரகடனம் செய்வது போல் தத்தமது பேச்சு, எழுத்து, வாழ்வுமுறை என்பன வற்றால் தொட்டுக்காட்டிய சில அறிவுஜீவிகள் காலப் போக்கில் அந்தச் சமூக நோக்கில் இருந்து அடிபிசகிப் போய்விட்டார்கள். அத்தகையவர்கள் தமது வசதி வாய்ப்புக் கேற்ப மார்க்சிய தத்துவத்திற்குப் புதுவகை விளக்கங்கள், வியாக்கியானங்களையும் அளிக்க முற்பட்ட சூழல்களும் நமது கண்முன்னே காணக்கூடியவைகளே. இவர்கள் அடிப்படையில் தமிழர் பழமைவாதம் உருவாக்கிய இறுக்கப் போக்குகளின் முன் எதிர்நிற்க முடியாதவர்களாகி தமது வலிமையற்ற நிலைப்பாடுகளால் ஆற்றாத்தனத்திற்குத் தம்மைப் பலியாக்கிக்கொண்டனர். இத்தகைய அறிவு ஜீவிகளின் உறுதியற்ற சமூக நோக்குத் தளம்பல்களால் மார்க்சிய உலகக் கண்ணோட்டத்தை நோக்கி வரக்கூடிய இளைய பரம்பரையினரின் பற்றார்வத்தைக்கூட முன் னெடுத்து வளர்க்கக்கூடிய சூழல்கள் தேக்கமடைவதற்கும் வழியேற்பட்டது. இவை தற்காலிகமானவையாக இருப் பினும் இவற்றின் தாக்கம் நோக்குதற்குரிய ஓர் அம்சம் என்பதும் மறுப்பதற்கில்லை.

இவ்விடத்திலேதான் கைலாசபதிகைக் கொண்ட சமூக நோக்கின் தாக்கம் தனித்துவம் கொண்டதாகவும் தளம்பலற்றதாகவும் திகழ்வதைக் காணலாம். அவர் பழமைவாதச் சூழல் மலிந்த யாழ்ப்பாண மத்தியதர வர்க்கத் தமிழர் குடும்பம் ஒன்றிலிருந்து வந்தவர். யாழ் இந்துக் கல்லூரியில் இடைநிலைக் கல்வியைத் தொடரும் மாணவனாக இருந்த காலத்திலேயே மார்க்சிய தத்துவத்தின்

படிப்பகம்

www.padippakam.com



மீது நாட்டம் செலுத்தத் தொடங்கியவர். அக்காலத்தில் வடபகுதிக்கு மார்க்சியத்தையும்—கம்யூனிசக் கருத்துக் களையும் அறிமுகம் செய்து வைத்த தோழர் மு.கார்த்தி கேசன் [2] யாழ். இந்துக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமை புரிந்துவந்தார். அவரது மார்க்சிய சித்தாந்த—செயற்பாட்டு நிலைப்பாடும், எளிமையான வாழ்க்கை முறையும் ஆசிரியத் தொழிலுக்கும் அப்பாலான மக்கள் சேவையும் அவரைச் சக ஆசிரியர்—மாணவர் மத்தியில் ஈர்ப்புக்குரிய ஒருவராக் கியது. கற்பதும் அதன் பயனாகக் கடவுளைத் தொழுவதும், அதன்மூலம் அவ்வுலக வாழ்வுக்கு அருளைத் தேடுவதும், இவ்வுலக வாழ்க்கைக்குப் பொருளைச் சேர்ப்பதும்தான் மனிதவாழ்வின் உயர் இலட்சியம் என்றிருந்த தமிழர் பழமைவாதச் சூழலிலே கார்த்திகேசனின் கம்யூனிசக் கருத்துக்களின் அறிமுகத் துடன் மார்க்சிய உலகக் கண்ணோட்டத்தை வரித்துக் கொண்ட புதிய பரம்பரை ஒன்று வடக்கில் தோன்றி வளரலாயிற்று. அத்தகையோர் மத்தியில் மாணவனாக இருந்த கைலாசபதியும் ஒருவராகி முன்னணிக்கு வருபவரா கின்றார்.

தமது இடைநிலைக் கல்விக் காலத்தில் வரித்துக் கொண்ட மார்க்சிய உலகக் கண்ணோட்டத்தையும் அதன் வழிநின்று பெற்றுக்கொண்ட சமூக நோக்கினையும் அடித் தளமாக்கிக் கொண்ட கைலாசபதி தமது உயர்நிலைக் கல்வியைத் தொடர்ந்த வேளையிலும் அதனை வளர்த்துச் சென்றார். தமது ஆற்றல், ஆளுமை, வாழ்க்கை முறை போன்றவற்றை ஒழுங்கமைத்து ஒரு படிமுறைவளர்ச்சிப் பாதையில் மார்க்சிய சமூக நோக்கினை முன்னெடுத்து வந்ததன் மூலம் தமது இறுதிக் காலம்வரை சமுதாயத் துறைகள் அனைத்திலும் தெளிவுள்ள கண்ணோட்டத்தைச் செலுத்தக்கூடிய ஒருவராகவும் திகழ்ந்தார். அவரது ஆக்கங்கள் பலவற்றிலே அடிக்கடி எடுத்தாளும் மார்க்சின் புகழ் பெற்ற வாசகம் அவரது சமூக அக்கறையின் உள்ளார்ந்த தன்மையை உணர்த்தி நிற்பதைக் காணலாம்.

www.padippakam.com



''இதுவரை தத்துவ ஞானிகள் உலகைப் பல வழிகளிலும் வியாக்கியானம் செய்து வந்துள்ளனர். எனினும் அதனை எவ்வாறு மாற்றி அமைப்பது என்பதுதான் எமது பிரச்சினை.'' [3] இத்தகையதோர் மிகப் பரந்துநின்ற உலக நோக்கின் ஊடே தமது சிந்தனையைத் தான் வாழ்ந்த சமுதாயத்தின்மீது செலுத்தி அதன் வெளிச்சத்தில் பல்வேறு பிரச்சினைகளுக்கு தாம் சார்ந்து நின்ற துறைகளின் ஊடே விடை காண முற்பட்டார். அவர் கடைப்பிடித்து நின்ற சமூக நோக்கானது விஞ்ஞான பூர்வமானதும், புறநிலை சார்ந்ததாகவும், சமுதாய சார்புடையத்தாகவும் அமைந் திருந்தமையால் அவரது சமூகப் பங்களிப்பு பெறுமதிமிக்க தாகவும், காலத்தின் தேவையாகவும் இருந்தது.

## 2

கைலாசபதி மாணவனாக இருந்த காலத்திலிருந்தே தமிழியல் துறைகள் அனைத்திலும் அதிக நாட்டமும் ஆர்வமும் கொண்டவராக இருந்து வந்தார். அதேவேளை கல்வி சமூக அரசியல் துறைகளிலும் கூடிய அக்கறையுள்ள வராகக் காணப்பட்டார். இவற்றுள் இலக்கியத்துறை யினையே தமது பிரதான ஆய்வுக்கும் ஆளுமையைச் செலுத்துவதற்கு உரியதொன்றாகத் தேர்ந்தெடுத்தும் கொண்டார். அதனால் தமிழ் இலக்கியத்துறையிலே வழிவழியாகப் பின்பற்றப்பட்டுவந்த பழைய போக்கினைத் திசை திருப்பி புதியதோர் திருப்பு முனையை ஏற்படுத்தும் பாதையில் என்றும் அழியா முத்திரையையும் பொறித்து விட்டார். அவ்வாறு அவர் இயங்கியமைக்கு அடிப்படை யாக அமைந்தது மனிதன்—சமுதாயம்—கலை—இலக்கியம் ஆகியவற்றுக்கிடையிலான தொடர்பு, வளர்ச்சி, பயன்பாடு போன்றவற்றில் பெற்றிருந்த ஆழ்ந்த அறிவுத் தெளிவும் அதனைத் தமது சமூக நோக்கின் அடிப்படையில்

www.padippakam.com



பிரயோகித்த செயல் முறையுமாகும். இதனை அவரது கூற்றின் வாயிலாகவே கண்டுகொள்வது பயனுடையதாகும். ''மனிதன் படைக்கும் ஏனைய பொருட்களைப்போல இலக்கியமும் கால தேச வர்த்தமானங்களுக்குக் கட்டுப் பட்டது. அதே வேளையில் வேறு படைப்புக்களைப் போலன்றி இலக்கியம் காலத்தை வென்று நிற்கவும் காண் கின்றோம் தமது காலத்து உள்ளியல்புகளை உறுதியாகப் பிரதிபலிக்கும் இலக்கியங்களே காலத்தைக் கடந்துநிற்கும் ஆற்றலையும் பெற்றுவிடுகின்றன. மேலெழுந்தவாரியாகப் பார்க்குமிடத்து இது பொருந்தாவுரையாகத் தோன்றக் கூடும். ஆயினும் கூர்ந்து நோக்கினால் முரணுரைபோலத் தோன்றும் மெய்யுரை என்பது புலனாகும். ஹென்றி மற்றிஸே (1869—1954) என்ற பிரசித்திபெற்ற பிரஞ்சு ஓவியர் ஒரு சந்தர்ப்பத்திலே பின்வருமாறு கூறினார்.

'கலைகள் யாவற்றிலும் அவை உருவாகிய
வரலாற்று யுகத்தின் முத்திரை பொறிக்கப்
பெற்றிருக்கும்.
ஆனால் சிறப்புமிக்க ஆக்கங்களில் அம்முத்திரை மிகவும்
ஆழமாகப் பதிக்கப்பெற்றிருக்கும்.'

''காலத்திற்குக் கட்டுப்பட்டும், காலத்தைக் கடந்தும் இயங்கும் இரு பண்புகள் கலை இலக்கியத்திற்கு இருப்ப தனாலே அவை பற்றிக் காலந்தோறும் வாதப்பிரதி வாதங்கள் நிகழ்கின்றன ''

''இலக்கியத்தின் நித்தியத்துவம்பற்றி ஒவ்வொரு தலை முறையிலும் முடிவற்ற சர்ச்சைகள் நிகழக்கூடுமாயினும் அதன் அடிப்படைப் பண்பு ஒன்று உண்டு அதுதான் இலக்கியத்திற்கும் சமுதாயத்திற்குமுள்ள பிரிக்க இயலாத பிணைப்பு ஆகும். ஆங்கிலத் திறனாய்வாளர் ஒருவர் இரத்தினச் சுருக்கமாய்க் கூறியிருப்பது நினைவுக்கு வருகிறது.

படிப்பகம்

www.padippakam.com



இலக்கியம், சமுதாயத்தின் ஓர் அமிசம். அது சமுதாயத்தின் மகோன்னதமான—ஆழம்மிக்க விஷயங்கள் பலவற்றை ஒட்டி இணைத்து ஒன்றுபடுத்தி அவற்றுக்குரிய வடிவம் கொடுத்து விளக்கமும் அளிக்கிறது. அதனை ஒரு சமுதாய நிறுவனம் என்றும் குறிப்பிடலாம். கலையாக்க மரபுகள், விழுமியங்கள் என்பவற்றின் களஞ்சியமாகவுள்ளன. அதிலே கலைஞர்களும் பொதுமக்களும் சங்கமிக்கின்றனர். அதனால் மகத்தான தொடர்பு சாதனமாகவும் அது அமைந்து விடுகின்றது. நமது விருப்பார்வம், கற்பனை, ஈடுபாடு இவற்றின் வெளிப்பாடாகவும் இருக்கிறது.[4]

இவ்வாறு இலக்கியத்திற்கும் சமுதாயத்திற்கும் இடையிலான தொடர்பை தெளிவுடன் நோக்கி நின்ற கைலாசபதி இலக்கியத்தை எவ்வாறு அணுகி ஆராய்ந்து வந்தார் என்பதையும் அதற்குரிய அடிப்படைகள் எவை என்பதையும் எடுத்து இயம்பினார். ''கடந்த இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாக நான் எழுதி வெளியிட்டிருப்பவற்றைப் பார்க்கும்பொழுது அவையெல்லாம் ஏதோ ஒருவகையில் சமுதாயத் தொடர்பமை உள்ளவனாய் இருக்கக் காண்கின்றேன். திறனாய்வுத் துறையில் முக்கிய கவனம் செலுத்தத் தொடங்கிய காலம் முதல் கலை இலக்கியம் முதலியவற்றை அவற்றுக்குரிய வரலாற்றுப் பின்னணியிலும், சமுதாயச் சூழலிலும் வைத்தே ஆராய்ந்து வந்திருக்கின்றேன். மார்க்சியத்தை தழுவிக் கொண்ட நாள் முதலாக அதன் முனைப்பான கூறுகளில் ஒன்றாகிய சமூகவியலை எனது பல்வேறு ஆய்வுகளுக்குப் பற்றுக்கோடாகக் கொண்டு வந்துள்ளேன் சமூகவியலில் உண்டாகிய ஈடுபாடே ஒப்பியல் ஆய்வுக்கு என்னை இட்டுச் சென்றது. இவற்றின் பயனாக இலக்கியத்தை அறிவியல் அடிப்படையிலே அணுகக் கற்றுக் கொண்டேன்.''[5]

www.padippakam.com



சமூகவியலின் உள்ளார்ந்த அம்சங்களை மேலைத்தேச அனுபவங்களின் அடிப்படையில் கற்றறிந்து கொண்டதன் மூலம் அவற்றை அணுகி ஆராய்ந்து தமது சமூக நோக்கிற்குப் பொருந்தக் கூடியவற்றையும் பொருந்தாதவற்றையும் தரம் பிரித்தும் கொண்டார். ''திரட்டிக் கூறுவதாயின் விஞ்ஞான பூர்வமாகவும் புறநிலையாகவும் மனிதனையும் சமுதாயத்தையும் ஆய்வதே சமூகவியலின் சாராம்சமாகும்'' [6] என்று எடுத்து விளக்கியதுடன் சமூகவியலின் இன்றைய வர்க்க நிலைப்பாட்டினையும் இனம்காட்டி நின்றார். ''அடிப்படையில் சோசலிசக் கோட்பாடுகளை ஆதாரமாகக் கொண்ட ஒன்றும், சோசலிச விரோத நெறியில் வளர்ந்த மற்றதுமான இருவகைச் சமூகவியல்கள் இன்றைய உலகில் உள்ளன எனலாம்'' [7] என்று தெளிவுபடுத்தி இச்சோசலிச சமூகவியல் வழிநின்றே தமது இலக்கிய ஆய்வுகளையும் அணுகுமுறைகளையும் நடத்திச் சென்றார்.

நமது மொழியும் இலக்கியமும் காலத்தால் முற்பட்டவை என்பதில் இருவேறு கருத்துகட்கு இடமில்லை. தமிழ்மொழியின் தொன்மையானது தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சிக்கும் அதேபோன்று இலக்கியத்தின் தொன்மையானது தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும் பரஸ்பரம் உரமூட்டி வந்துள்ளன என்பது மறுக்கவியலாத வரலாற்று உண்மையாகும். அதன் அர்த்தம் நமது மொழிக்கு ஆதியும் அந்தமும் இல்லை என்பதாகவோ அன்றி நமது இலக்கியத்திற்கு ஈடு இணை உலகில் காண முடியாது என்பதாக இருக்க முடியாது. அன்றும் இன்றும் தமிழ் 'கன்னித் தமிழாகவும்', 'பசுந்தமிழாகவும்' உள்ளது என்றால் உண்மையில் இன்று நாம்பேசும் தமிழ் அதுவாக இருக்க முடியாது என்றுகூடப் புரிந்து கொள்ள முடியாத சூழலிலேதான் தமிழறிஞர்கள், வித்துவான்கள், பேராசிரியர்கள் என்போர் பழந்தமிழ் இலக்கியங்களை ஆராய்ந்தும் வியாக்கியானம் செய்தும்

www.padippakam.com



வந்தனர். ஆய்வையும் அபிமானத்தையும் வேறுபடுத்திப் பார்க்காத இத்தகைய தமிழ் அறிஞர்களின் போக்கினைக் கூர்மையுடன் கவனித்து ''சுந்தரம்பிள்ளையில் இருந்து வரதராசனார் வரையில் புகழ்பெற்ற தமிழ் அறிஞர்கள் தமிழாய்விலும் பார்க்கத் தமிழபிமானத்தையே ஏற்புடை வைக்கு அளவுகோலாக கொண்டு இயங்கினர்'' [8] என்று எடுத்துக்கூறியதுடன் தமிழ் இலக்கிய ஆய்வுப்போக்கு எத்தகைய வரம்புகட்குள் தொடரப்பட்டு வந்தது என்பதையும் கோடிட்டுக் காட்டுகிறார். ஆயினும் ஒட்டு மொத்தமாக நோக்குமிடத்து அதிகாரமும் செல்வாக்கு முடைய தமிழராய்ச்சி அடிப்படைத் தொன்மை=பெருமை தனித்துவம்=பெருமை, மாறாமை=பெருமை, ஒப்புமை யின்மை=சிறப்பு என்ற வாய்ப்பாடாகவே இருந்து வந்திருப்பது தெளிவு [9] என்றும் கூறுகிறார்.

இவ்வாறு தமிழ்நாட்டிலும் அதனை அடியொற்றி ஈழத்திலும் பழந்தமிழ் இலக்கியத்தின்மீ தான பார்வையானது குறுகிய நிலைக்குள்ளாகி இருந்ததுடன் அதற்குக் குறிப்பிட்ட சில அறிஞர்கள், வித்துவான்கள் எனப்பட்டவர்கள் உரிமை கொண்டாடியும் வந்தனர். அவர்கள் கூறுவதையே அதிகாரப்பூர்வமானதொன்றாகச் சிரமேற்கொண்டு போற்றிப் புகழ்ந்துவந்த சூழலிலே கைலாசபதியின் மார்க்சிய சமூகவியல் நோக்கிலான புதியவகை ஆய்வும் ஆதாரப்பூர்வமான நிறுவுதல்களும் ஒரு பெரும் திருப்புமுனைக்கு வழிகாட்டி நின்றன. அவரது ஆழ்ந்த திறனாய்வு முறையும், ஒப்பியல் நோக்கும் தமிழ் இலக்கியப் பரப்பிலே புதிய பரிமாணங்களைத் தோற்றுவித்தன.

பழந்தமிழ் இலக்கியங்களை உட்புகுந்த ஆழ்ந்த அறிவாற்றலுடன் ஆராய்ந்ததன் மூலம் தமிழ் மொழியினதும், தமிழர்களினதும் தொன்மைச் சிறப்புக்களையும், இழையோடி நின்ற சமுதாய முரண்பாடுகளையும் வரலாற்றுச் சமுதாயச் சூழலின் ஊடே எடுத்துக்காட்டி

www.padippakam.com



னார். தமிழர்கள் என்போர் உலக மக்கள் தொகுதி ஒன்றின் ஒரு பிரிவினராகவும், உலக வரலாற்று வளர்ச்சிக்கு உட்பட்டும் வாழ்ந்து வந்தவர்களே அன்றி தனியே சகல செல்வச் சிறப்புக்களுடனும் மாறாத் தன்மைகளுடனும் வானத்தில் இருந்து வந்து இறங்கியவர்கள் அல்லர் என்பதை அவர்களது பழந்தமிழ் இலக்கியங்களில் இருந்தே ஆதார பூர்வமாக கைலாசபதி எடுத்துக்காட்டினார்.

மனிதகுலம் ஆதிகாலப் பொதுவுடைமைச் சமூகம், ஆண்டான் அடிமைச் சமூகம், நிலவுடைமைச் சமுதாயம், முதலாளித்துவ சமூகம் என்ற வரலாற்றுக் கட்டங்களினூடே சோசலிச சமுதாயத்தை நோக்கி வளர்ந்து கொண்டிருப்பதை மார்க்சியம் தனது வரலாற்றுப் பொருள்முதல்வாத நோக்கின் ஊடே வரையறுத்துக் கொண்டது. இத்தகைய வரலாற்றுக் கட்டங்களின் ஊடாக மனிதகுலத்தின் ஓர் அங்கமான தமிழர் சமூகம் வளர்ந்து வந்திருப்பதனைப் பழந்தமிழ் இலக்கியங்களினூடே ஊடுருவிப் பார்த்து தமது ஆய்வுகளில் கைலாசபதி முன் வைத்தார். புராதன காலத்துத் தமிழர் சமூகமானது மார்க்சியம் முன்வைத்த ஆதிகாலப் பொதுவுடைமைச் சமூகத்துடன் ஒத்திசைவான பொதுப் போக்கினைக் கொண்டிருந்தமையை அவர் தெளிவாக்கி இனம் காட்டினார். தனிச்சொத்துடைமையும், வர்க்கங்களும் அரசுகளும் தோன்றாத புராதன தமிழர் சமூக அமைப்பு எவ்வாறு இருந்தது என்பதனை இலக்கிய ஆதாரங்களுடன் கைலாசபதி எடுத்து விளக்கினார். ''புராதன மரபுவழிச் சமுதாயங்களில் மிகவும் குறிப்பிடத்தக்க பங்கீடு உணவாக இருக்கலாம். மிகவும் பழமையான பாடல்களில் இத்தகைய ஆதாரங்கள் அதற்கு முற்பட்டகால நிகழ்ச்சிகளைச் சுட்டுவனவாக இருந்தபோதிலும், பழந்தமிழ்ப் பாடல்களில் இப்பங்கீட்டுமுறை காணப்படுகின்றது. உதாரணமாக புறம் 46ஆம் செய்யுளில் ''தமது பகுத்துண்ணும்'' இளவரசர் இருவரின் முன்னோரைப்பற்றி ஒரு புலவர் பாடுகிறார்.

www.padippakam.com



''உண்டி பகுத்துண்ணும் உன்னத மரபு'' பற்றி இங்கு அவர் குறிப்பிடுவது ஒரு கடந்தகால நிகழ்ச்சியேயாகும். இன்னொரு பாடலில் ஒரு குறுநில மன்னன் தனது உணவைப் பகுத்துண்பதற்காகப் பாராட்டப்படுகிறான். இங்கும் பகுக்கும், பங்கிடுதல் என்ற சொல் உபயோகப் படுகின்றது. இதே கருத்து பிற்காலப் படைப்புகள் சிலவற்றில் ''கூட்டுண்'' கூடி உண்பது என்ற பதத்தால் விளக்கப்படுகின்றது. சிலப்பதிகாரத்தில் ''பழங்குடி'' எனக் குறிப்பிடப்படும் வேடர்கள் தமது பொது உணவை ''நடு ஊர் மன்றத்து'' கூடி உண்பதாகக் கூறப்பட்டுள்ளது. வேட்டையும், கொள்ளையும் எப்படியோ அப்படியே உணவும் பகிர்ந்தளிக்கப்பட்டது கூட்டுண் என்பது கூடி உண்பதாகும். இது உலகம் முழுவதிலும் புராதன சமூகங் களில் காணப்பட்ட வழக்கமான கூட்டுப்பங்கீட்டின் இன்னொரு பிரதிபலிப்பாகும்.''10

இவ்வாறு புராதன தமிழர் சமூகமானது காலப் போக்கில் தனிச் சொத்துடைமையின் தோற்றத்தினாலும் வர்க்கங்களின் வளர்ச்சியினாலும் எவ்வாறு சமூக மாறுதல் களுக்கு உள்ளாகி வந்துள்ளது என்பதையும் அவர் விபரிக் கின்றார் ''சங்ககாலம் என்ற வாய்பாட்டை ஒருகணம் நாம் கருதுகோளாகக் கொண்டு இருபதாம் நூற்றாண்டு வரை வரலாற்று அடிப்படையில் நோக்கினால் பல மாற்றங்கள் நிகழ்ந்து வந்திருப்பது கண்கூடு. அவற்றை எல்லாம் இங்கு விபரித்தல் இயலாது. தனியுடைமைச் சமுதாயத்தின் வளர்ச்சியை நாம் சங்க இலக்கியங்கள் என்று விபரிக்கப்படும் சான்றோர் செய்யுள்களிலே தெளிவாகக் கண்டு கொள்ளலாம். புராதன சமுதாயத்தின் மீதமிச்சங் களாக இருந்த குடிகளும், கிளைகளும் குலங்களும் குழுக்களும் வீரயுகத்திலே நடைபெற்ற மாடுபிடி, நாடுபிடி சண்டைகளின் ஊடே அழிவுற்று உறுதியான அரசுகளும் பெரு நிலப்பரப்புகளும் உதயமாகிய காலகட்டத்தைச் சான்றோர் செய்யுள்கள் நமக்குக் காட்டுகின்றன. அந்தக்

www.padippakam.com



காலகட்டத்திலிருந்து அடிமைச் சமுதாயம், நிலமானிய சமுதாயம், முதலாளித்துவ சமுதாயம் என்ற மாபெரும் வரலாற்றுக் கட்டங்களுக்கூடாக, தமிழர் சமுதாயம் வந்து இன்று சோசலிச சமுதாயத்தின் அமைப்புக்கான போராட்டத்தின் மத்தியில் இருப்பதையும் காண்கின்றோம். இது நீண்ட வரலாற்றுப் பயணமாகும்.'' 11

இவ்விதமாகப் புராதன தமிழர் சமூக அமைப்பு அழிவுக்கு உள்ளாக்கப்பட்டு அவ்விடத்திலே தனிச் சொத்துடைமை அடிப்படையிலான அரசுகள் தோற்றம் பெற்றன. நிலையான அவ்வரசுகளின் ஆரம்பத்துடன் வர்க்க வேறுபாடுகள்—ஏற்றத்தாழ்வுகள் மேன்மேலும் உறுதிப்படுத்தப்பெற்றன. ஒரு சிலரிடம் செல்வம் குவிந்திருக்கப் பலரிடம் எதுவுமே இல்லாத நிலையும் அதை மறைக்க, நியாயப்படுத்த பல்வேறு வழிமுறைகளும் வகுக்கப்பட்டன. ஊழ்வினைக் கோட்பாடு வலியுறுத்தப் பட்டு அதனடிப்படையில் ஒழுங்குகள் விதிகள் வகுக்கப் பட்டன. ''வலுக்கொள்கையின் அடிப்படையிலே தோன்றிய அரசுகளின் பிரசவ காலத்திலே வந்து சேர்ந்த சமணமும் பௌத்தமும் சொத்துரிமை, சமுதாய ஒழுங்கு, சாதிப் பாகுபாடு ஆகியவற்றை வெவ்வேறு வழிகளில் ஏற்றன. சமணத் துறவியான தொல்காப்பியன் இயற்றிய நூலிலே இவை யாவும் அங்கீகாரம் பெறுவதை நாம் காணலாம். மனிதனது அகவாழ்க்கைக்கும் புறவாழ்க்கைக்கும் 'இலக்கணம்' வகுத்த தொல்காப்பிய நூலார் சாதிப் பாகுபாட்டினை ஏற்றுக்கொண்டே (சாதியும் வர்க்கமும் இக்காலப்பகுதியில் கலக்கின்றன) தமது வரைவிலக்கணங் களைக் கூறுகிறார். கொல்லாமையைக் கையாளும் வர்க்கத் தினரான வணிகர் மற்றைய வர்க்கங்களின்மேல் ஆதிக்கம் செலுத்த முடிந்தது. பொருளாதாரத் துறையில் காணுப் பட்ட இந்தச் செல்வாக்கின் காரணமாகச் சமுதாயத்துறை யிலும் வைசியர் அல்லது வணிகரின் ஆதிக்கம் வலுத் திருந்தது. சிலப்பதிகாரம் இதனை நேரடியாகவும் மறை முகமாகவும் எடுத்துக்காட்டுகிறது.'' 12

www.padippakam.com



அன்றைய பொருளியல் அமைப்பின் தன்மைகளையும் அதன் நிர்ணயத்தினால் அரசியல், சமூக, கலாசார கட்டமைப்புகள் எவ்வாறு இயங்கிவந்தன என்பதனையும் அவற்றின் வர்க்க வேர்கள் எத்தகைய வழிகளில் ஆழப் பதிந்திருந்தன என்பதையும் கைலாசபதியின் ஆய்வுகள் ஆணித்தரமாக எடுத்து இயம்பின ''தொன்மை என்ற காரணத்திற்காகவும், வர்க்க முரண்பாடுகளை மூடி மறைத்து, பழம்பெருமைக்குள் பிரச்சினைகளை மடக்கி அடக்கிவிடுவதற்காகவும் நம் முன்னே நிறுத்தப்படும் சங்க காலம் மற்றைய வர்க்க சமுதாயங்களைப் போலவே சுரண்டலும், அடக்குமுறையும், சூறையாடலும், அதிகாரத் துவமும் நிறைந்திருந்தது என்பதை நாம் மறந்துவிட முடியாது. இருபதாம் நூற்றாண்டுக் கவிஞரும் எழுத்தாளர் களும் அதற்கு எத்தனையோ வகையில் பொன்முலாம் பூசி பூலோக சுவர்க்கமாக—இன்ப லோகமாக—விபரித்து வந்திருக்கின்றனர் ''[13]

தமிழர் சமூக வாழ்வின் ஒரு காலகட்டத்திலே இடம் பெற்ற பக்திப் பேரியக்கம் பற்றி இன்றும் நிறையப் பேசப் பட்டு வருவதைக் காணமுடியும். அக்காலத்து வளம்பெற்ற இலக்கியச் சிறப்புக்கள் பற்றியும் சமண—சைவப் போராட் டத்தில் நிகழ்ந்த அற்புதங்கள், அதிசயங்கள் பற்றியும் அதிகம் கூறப்படுவது கேட்கக்கூடியதேயாகும். ஆனால் இச்சமண—சைவப் போராட்டத்தின் பின்னால் மறைந் திருந்த வணிக—நிலவுடமை வர்க்க சக்திகளுக்கிடையிலான கொடூரம் போராட்டத்தின் அடிப்படைகளைக் கைலாசபதி ஆதாரபூர்வமாக வெளிக்கொணர்ந்து காட்டுகிறார். ''பல்லவர் காலத்திலே சமயத்துறையில் எழுந்த பக்தி இயக்கம், கலை இலக்கியங்களில் வீறார்ந்த முறையில் வெளிப்பட்டது. பக்தி இயக்கம் தனித்தன்மை வாய்ந்த வழிபாட்டு வடிவத்தையும் அதற்கியைந்த கவிதை உருவங் களையும் தோற்றுவித்தது. ஆயினும் அவ்வியக்கத்தின் பௌதிக அடிப்படையாக வணிக வர்க்கத்தினருக்கும் நிலவுடமையாளர்களுக்குமிடையில் நடந்த போராட்டமே

படிப்பகம்

www.padippakam.com



அமைந்திருந்தது. இலக்கிய மூடுதிரையைக் கிழித்துவிட்டு, பக்தி இயக்கத்தின் சமூக, பொருளாதார, தத்துவார்த்தக் காரணிகளைக் கண்டறிந்தாலன்றி அவ் இயக்கத்தின் காரணமாயும் காரியமாயும் காட்சியளிக்கும் ஆற்றல்மிக்க கவிதைகளை முழுமையாகப் புரிந்துகொள்ள இயலாது.''[14] கி. பி. 5-ஆம் நூற்றாண்டளவில் இருந்து 7-ஆம் நூற்றாண்டுவரையில் சமணம் பொருளாதார அடிப்படையில் வலிமைமிக்கதாக விளங்கிய காலகட்டத்திலேயே வணிக வர்க்கத்தினரின் ஆதிக்கநிலை வலுப்பெற்று காணப்பட்டது. இதனை முறியடிக்கும் போக்கிலேயேநிலவுடைமை வர்க்கச் சக்திகள் சைவத்தின பேரிலே சமணத்திற்கு எதிரான பேராட்டத்தை முன்னெடுத்தன. இப்போராட்டத்தில் சமணமும் அது சார்ந்த வணிகவர்க்க அதிகாரம் பிடியும் தோற்கடிக்கப்பட்டு சைவமும் பெரும் நிலவுடைமை ஆட்சியமைப்பும் தோற்றுவிக்கப்பட்டன.

இந்நிலப்பிரபுத்துவக் காலகட்டத்திலே வர்க்க வேறுபாடுகளும், அடக்குமுறைகளும் மிகத்துலக்கமாக நின்றமையை அக்கால இலக்கியங்கள் பிரதிபலித்தன. அவை நால் வருண அடிப்படையில் சாதி ஆசாரமாக வகுக்கப்பட்டு மிகக் கடுமையாகப் பின்பற்றப்பட்டன. அக்காலத்திலே சாதியத்தின் பல்வேறு கூறுகளும் வரையறுப்புகளை—நிலைநிறுத்தல்களைப் பெற்றுக்கொண்டன. கடமைகள், உரிமைகள் யாவும் தெளிவுபடுத்தப்பட்டு சாதிய அமைப்பு முழுமை பெற்றுக்கொண்டது. அதுவே இன்றுவரை தமிழர் சமூக வாழ்வில் இறுக்கமுடையதொன்றாக இருந்தும் வருகின்றது. இதனைச் சுட்டிக்காட்டும் கைலாசபதி ''இந்திய சமுதாயம் பல்வேறு சாதிகளின் வலைப்பின்னலாகவே இயங்கிவந்தது. ஏனெனில் தொடக்கத்திலே வைதீக நெறியின் அடிப்படையிலே நால்வருணப் பாகுப்பாடு நிலவியபோது அது ஓர் இந்துமத நிறுவனமாய் இருந்தது. ஆனால் காலப்போக்கில் பெருகிக்கொண்டே போன சாதி தருமமானது இந்திய நிறுவனமா

www.padippakam.com



யிருந்தது''[15] என்று கூறி அதன் சமுதாயத் தாக்கம் இந்தியா — இலங்கை ஆகிய நாடுகளில் வியாபித்து நிற்பதனையும் எடுத்துக் காட்டினார்.

இன்றும் நமது சமூக வாழ்விலே நிலைபெற்றிருக்கும் சாதியத்திற்கு எதிராக போராட வேண்டியது அவசியம் இல்லை எனக் கருதுவோர் இன்றும் பலர் உள்ளனர். அத்தகையவர்கள் தமது நிலைக்கு பழந்தமிழ் இலக்கியங் களில் சாதிமுறை இருக்கக்கூடாது என நம் முன்னோர் எடுத்துக் கூறியுள்ளனர் என வாதிட முனைவர். உண்மை யில் அன்றைய பழந்தமிழ் இலக்கியங்களில் கூறப்பட்ட வர்களின் நோக்கும் போக்கும் எவ்வாறு இருந்தன என்பதே ஆழ்ந்த ஆராய்விற்குரியதாகும்.

''சாதிப் பிரச்சினை பற்றிப் பேசுகின்ற சிலர் பழந் தமிழ் இலக்கியங்களிலே ஆங்காங்கு கூறப்பட்டுள்ள சில 'மனிதாபிமானக்' கருத்துக்களைச் சுட்டிக்காட்டி, பெரும் புலவர்கள் எல்லாம் சாதிமுறையையெதிர்த்தே வந்திருக் கின்றனர் என்று தமக்குத் தாமே ஒரு வகையான மன அமைதியைத் தேடிக்கொள்வதைக் காணலாம். சங்கச் சான்றோர் தொடக்கம் வள்ளலார்வரை ''சாதி சமய வழக்குகளை'' கண்டித்துப் பாடியவர் பலர் உள்ளனர் என்பது உண்மையே. ஆனால் அக் கண்டனத்தின் தன்மையே கூர்ந்து நோக்கத்தக்கது. சாதிமுறை கூடாது என்பதை எடுத்துக் கூறுவதற்கும் பெரும் புலமையோ பேரறிவோ தேவையில்லை. நிலைமையை மாற்றுவதற்கு ஏற்ற வழிவகைகளைக் கூறுவதிலேயே முந்தையோர் பெரிதும் வேறுபடுகின்றனர்:''[16]

நாயன்மார் காலத்துத் தேவார திருவாசகங்களில் காணப்படும் சாதிமுறையை நிராகரிக்கும் சில பாடல்களை யும் சிலர் சுட்டிக் காட்டுவது வழக்கம். இதனை நன்கு



படிப்பகம்

www.padippakam.com



ஆராய்ந்த கைலாசபதி சைவ நிலவுடைமையாளர்களுக்கும் சமண வணிக வர்க்கத்தினருக்கும் இடையிலான கடும் போராட்டத்திலே சைவத்தின் பெயரால் நிலவுடைமை ஆதிக்கத்தை நிலைநிறுத்த வேண்டிய சூழலிலே பரந்த மக்கள் பகுதியினரை அணி திரட்ட வேண்டிய தேவை நிலவுடைமையாளர்களுக்கு ஏற்பட்டது இன்றைய மொழியில் கூறுவதனால் பரந்த வெகுஜனப் போராட்டத்திற்கான ஒரு ஐக்கிய முன்னணியின் தேவையினாலேயே அன்றைய தேவாரப் பாடல்களில் சாதிமுறையை நிராகரிக்கும் வரிகள் காணப்படுகின்றன. அது ஒரு தற்காலிகப் போக்கேயாகும். இதனைக் கைலாசபதி ''ஒரு போர்க்கால இசைவு'' நடவடிக்கை எனச் சுட்டிக்காட்டியமை நோக்குதற்குரியதாகும். ஏனெனில் சைவ—சமணப் போராட்டத்தின் பின் எழுந்த அகன்ற நிலவுடைமைச் சாம்ராச்சியமான சோழர் காலத்திலே இச்சாதியமைப்பு பெரும் போக்காக நிலை நிறுத்தப்பட்டமையும் அக்கால இலக்கியங்கள் வாயிலாக கைலாசபதி எடுத்து விளக்கினார்.

மேலும் பெரும்பாலான அதீத தமிழ்ப் பற்றாளர்களால் பொற்காலம் என்று அழைக்கப்படும் காலப்பிரிவு நிலவுடைமை ஆதிக்கம் நிமிர்ந்துநின்ற சோழர் காலமே என்று கூறப்பட்டுவந்த வாய்ப்பாட்டைக் கைலாசபதி மறுத்துரைத்தார். தமிழர்களுடைய நீண்ட வரலாற்றுக் காலத்தில் ஒரு பொற்காலம் நிலவியதை ஏற்றுக்கொண்ட அவர் வர்க்க வேறுபாடும், சுரண்டலும், அடக்குமுறையும் பல்வேறு வழிகளில் இடம்பெற்று வந்த நிலப்பிரபுத்துவ காலத்திற்குரியதாக அப்பொற்காலம் இருக்க முடியாது என்பதை அக்கால இலக்கியங்களின் ஊடே நிறுவினார். அதேவேளை அதற்கு முற்பட்ட ஒரு காலப்பிரிவில் பொற்காலம் என்றழைக்கப்படுதற்குரிய அம்சங்கள் பொருந்திய சமூக வாழ்க்கை அமைந்திருந்தது என்பதையும் கைலாசபதி கோடிட்டுக் காட்டியமை முக்கியமானதொன்றாகும்.

படிப்பகம்

www.padippakam.com



அந்தவகையிலே தமிழ் இலக்கிய உலகில் என்றும் மங்கா ஒளிபரப்பி நிற்கும் நூல்களாகப் பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும், அடியும் முடியும், தமிழ் வீரயுகப் பாடல்— (TAMIL HEROIC POETRY) போன்றன நிலை நின்று வருகின்றன. இவற்றில் சான்றோர் செய்யுட்கள் என்று கூறப்படும் தமிழ் வீரயுகப் பாடல்களை மிக நுணுகி ஆராய்ந்து அதன் சிறப்புக்களையும் அவற்றின் ஊடே பழந்தமிழர் சமூக வாழ்வின் தன்மைகளையும் ஏற்ற இறக்கங்களையும் கைலாசபதி எடுத்து உரைக்கின்றார். அதிலும் சிறப்பாக பண்டைக் கிரேக்க இலக்கியப் பகுதிகளுடன் பழந்தமிழ் இலக்கியமான சான்றோர் செய்யுட்களை ஒப்பிட்டு அவற்றுக்கு இடையிலான ஒற்றுமை, வேற்றுமைகளை மட்டுமன்றி இழையோடி நிற்கும் சிறப்புக்களையும் பொதுத் தன்மைகளையும் தெளிவுபடுத்தினார். அதேவேளை தமிழர் சமூக வாழ்வில் பழந்தமிழ் இலக்கியங்களில் மூலம் கட்டியெழுப்பப்பட்டு வந்த பொய்மைத் தோற்றங்களையும் கட்டுக்கதைகளையும் கனவு உலகினையும் உடைத்து விட்டார். அவ்வுடைவினை வாயிலாகக் கொண்டு உட்புகுந்து அவர்களது நீண்ட வரலாற்று வளர்ச்சியின் பல்வேறு அம்சங்களை அடையாளம் காட்டியதுடன் அதன் வாயிலாகப் பல்வேறு ஆய்வுகளும், நிறுவுதல்களும் செழுமையுற்று வளர்வதற்குரிய திறவுகோல்களையும் வழங்கிச் சென்றார். பழந்தமிழ் இலக்கியங்களை கைலாசபதி அணுகி ஆராய்ந்த கோட்பாட்டு ரீதியான ஆய்வுமுறை அதன் வளர்ச்சிப் பாதையில் ஈழத்திலும், தமிழகத்திலும் ஆர்வ அக்கறையுடன் முன்னெடுக்கப்பட்டு வருவதானது சமூக அக்கறையுள்ள அனைவருக்கும் மன நிறைவுக்குரிய செய்தியேயாகும்.

## 3

மனிதகுல வரலாற்றில் மனித செயற்பாடுகளும் அதன் அனுபவங்களும் மகத்தானவை. கடந்த காலத்தின்

படிப்பகம்

www.padippakam.com



செழுமையான அவ்வனுபவங்களில் இருந்து நிகழ்காலத்தின் வளர்ச்சிக்குத் தேவையானவற்றைப் பெற்றுக் கொள்ளுதல் தவிர்க்க முடியாததொன்றாகும். ஏனெனில் கடந்த காலத்தின் தொடர்ச்சியே நிகழ்காலம். கடந்தகாலம் இன்றி நிகழ்காலம் இருக்க முடியாது. சமுக வரலாற்றில் கடந்த கால நிகழ்காலத் தொடர்ச்சி பற்றி ஏங்கல்ஸ் ஒரு சந்தர்ப்பத்தில் பின்வருமாறு கூறினார்: ''அடிமைத்தனம் இல்லை என்றால் கிரேக்க கலாசாரமும் ரோமன் கலாசாரமும் இல்லை. கிரேக்க கலாச்சாரமும் ரோமப் பேரரசும் இல்லை என்றால் நவீன ஐரோப்பா இல்லை. நவீன ஐரோப்பா இல்லை என்றால் நவீன சோசலிசம் இல்லை. ஆகவே அடிமைத்தனம் இல்லை என்றால் சோசலிசம் இல்லை என்று நாம் கூற முடியும்,'' தமிழர் சமுக வரலாற்றின் நீண்ட காலகட்டத்தின் ஊடே தோன்றி வளர்ந்த ஏனைய அம்சங்களைப் போன்றதே தமிழ் இலக்கியமுமாகும். பழந்தமிழ் இலக்கியங்கள் இல்லாது, விட்டால் நவீன தமிழ் இலக்கியம் இருக்க முடியாது.

ஆனால் இவ்விடத்திலே பழமைக்கும் புதுமைக்கும் உள்ள உறவையும் வளர்ச்சியையும் கூர்ந்து நோக்குதல் அவசியமாகும். பழமையானவற்றை பழமைவாத நோக்கிலும் நிலையியல் போக்கிலும் அணுகிய அவற்றை நிகழ்காலத்திற்குப் பொருத்திக் கொள்ள முற்படும் அர்த்தமற்ற முயற்சி பயனற்றதாகும். அதேபோன்று புதுமை என்ற பெயரில் யதார்த்தத்தை முற்றிலும் கவனத்திற் கொள்ளாது நவீனத்துவம் செய்ய முயல்வதும் வீண் முயற்சியாகவே இருக்கும். இதுபற்றி முருகையன் கூறும் போது ''நவீன தமிழ் இலக்கியப் பரப்பை நோக்கும் போது இரு வேறுபட்ட போக்குகள் அங்கு தெளிவாகப் புலப்படுகின்றன. ஒன்று பிடிவாதமான பழமைப் பற்று. மற்றையது நவீன ஈடுபாடு—புதுமைப்பற்று. இவ்விரு பற்றுகளும் குருட்டுத்தனமாகச் செயற்படும்போது விபரீதமான விளைவுகளே நேரும்'' [17] அத்தகைய விபரீதப் போக்கு நவீன தமிழ் இலக்கியப் பரப்பிலே தன்முனைப்பும்

படிப்பகம்

www.padippakam.com



பெறுவதைத் தடுத்து நிறுத்தி ஆரோக்கியமான வளர் திசையினைக் காட்டி நிற்கும் பாதையிலே கைலாசபதி வழிநடந்தார். அவர் பழமைக்கும் புதுமைக்கும் இடையிலான உள்ளார்ந்த தொடர்பினையும் வளர்ச்சியினையும் எவ்வாறு அணுகி நின்றார் என்பதனை அவரது கூற்றின் மூலமே கண்டுகொள்ளலாம். ''பழைய இலக்கியங்களையும் புதிய படைப்புகளையும் மாறுகொள வைத்து ஒப்பு நோக்காமல் இரண்டினுக்கும் ஊடாக இழையோடி வரும் ஒற்றுமைச் சுருதியைத் தெளிவாக்குதல் அவசியம். அப்பொழுது பழமைவிரும்பியின் கண் புதுமையைக் காணக் கூசாது. இது நடைபெறுவதற்கு இரண்டு வழி உண்டு. ஒன்று, பழைய இலக்கியங்களின் வர்க்க வேர்களைக் கண்டறிந்து அவற்றின் அரசியற் சமூக அமைப்பு முறைகளைத் தெளிவாக்கி அவற்றுக்கு பாதகமாகவோ சாதகமாகவோ பல்வேறு படைப்புக்கள் தோன்றியுள்ளமையைத் தருக்க முறையில் காட்டுதல் வேண்டும். இரண்டு : பழைய இலக்கியங்களின் குறைநிறைகளைத் தராசில் நிறுத்திக் குறைபாடுகளை எவ்வாறு எமது கால மாற்றங்களினால் நிறைவாக்க முடியும் என்பதை நிலைநாட்ட வேண்டும்.[18]

பழந்தமிழ் இலக்கியங்களை ஆழ்ந்தும் அலசியும் ஆராய்ந்த அவர் மேலைத்தேச இலக்கியத்தின் நவீன வளர்ச்சியினையும் அவற்றின் போக்குகளையும் மிக நெருக்கமாக அணுகினார். அதன் மூலம் நவீன தமிழ் இலக்கியத்தின் வளத்திற்கும் வளர்ச்சிக்கும் உரிய உரமிடும் பாரிய பணிக்குத் தம்மை அர்ப்பணித்தார். அப்பணியினைப் பரந்த அளவில் முன்னெடுப்பதற்குப் பத்தொன்பதாம் நூற்றாண்டிலிருந்து ஈழத்துத் தமிழ் இலக்கியம் தனது நவீன வளர்ச்சிப் பாதையில் எடுத்து வந்த அடியெடுத்தல்களையும் அவை இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்துடன் கண்ட மாற்றங்களையும் வரலாற்றுணர்வுடன் அணுகி ஆராய்ந்தார் இத்தகைய ஈழத்து இலக்கியமானது இருபதாம் நூற்றாண்டின் நடுக்கூறுகளிலே பெற்ற பெரு மாற்றத்தின் போக்கினை இனங்கண்டு அதன் எதிர்காலத்

படிப்பகம்

www.padippakam.com



திணைச் சமுதாயச் சார்புநிலையுடன் இணைந்து நிர்ணயிப்பதிலும் அதன் செல் நெறிகளை வகுப்பதிலும் கைலாசபதி பங்கு கொண்டு உழைத்தார்.

ஐம்பதுகளின் ஆரம்பத்துடன் இலங்கையின் பொருளாதார, அரசியல், சமூக, கலாச்சாரத் துறைகளில் பெரும் மாற்றங்களைக் கோரி நிற்கும் போக்குகள் துலக்கமடைய ஆரம்பித்தன. இவற்றின் விரிவான அம்சஙகளை மேல்வரும் பக்கங்களிலே காணமுடியும். இம்மாற்றத்தின் ஒரு பாரிய அரசியல் திருப்புமுனையாக 1953ஆம் ஆண்டு 'மாபெரும் ஹர்த்தால்' என்ற பரந்த வெகுஜனக் கிளர்ச்சி அமைந்தது. அந்த எழுச்சியானது சமுதாயத்தின் பல்வேறு தரத்தினரான மக்கள் தொகுதியினரிடையே தேசிய உணர்வலைகளைத் வேகப்படுத்துவதற்கான சூழல்களையும் உருவாக்கியது. நாடு, இனம், மொழி, மதம், கல்வி மற்றும் சமூகக் கலாசாரத் துறைகளில் தேசியத் தன்மைகளை வற்புறுத்தும் போக்குகள் முனைப்படையத் தொடங்கின. ஆனால் இத்தேசிய எழுச்சிப்போக்கின் ஊடே அதன் பிற்போக்கான கூறுகளும் உடன் வளர்ச்சியாக வளர்ந்து இன்றைய பெரும் தேசிய அகங்காரமாக உருப்பெற்ற உண்மையும் மறுக்கவியலாத ஒன்றாக உள்ள அதேவேளை அக்காலத்தில் முற்போக்கான தேசிய அம்சங்கள் முனைப்புடன் நின்ற யதார்த்தத்தையும் நிராகரிக்க முடியாது. அந்நிய கலாசாரத்தை ஆங்கில மோகத்தை நிராகரிக்கும் வற்புறுத்தல்கள் முன்னெழுந்து நின்றன. இவற்றுக்கு வலுச்சேர்ப்பதற்கான நடைமுறைகள் தோன்றி வளரலாயின. இலவசக் கல்வி, தாய்மொழிக்கல்வி, தேசியமயக் கொள்கைகள், கலாசாரத் தனித்துவம், தேசிய மொழிகளின் முக்கியத்துவம் போன்றவற்றின் ஊடே நமது சொந்தப் பாரம்பரியங்களைப் பேணிப் பாதுகாக்கவேண்டும் என்ற பரந்த உணர்வும் பேரவாவும் வளரலாயின. இவையே தேசிய அபிலாசைகளாகி, தேசிய உணர்வின் வெளிப்பாடாகவும் பிரதிபலித்தன. இவற்றின் ஓர் அம்சமாகவே தேசிய இலக்கியக் கோட்பாடும் வளரலாயிற்று.

www.padippakam.com



இத்தகையதொரு காலகட்டத்திலேயே கைலாசபதி தமிழ் இலக்கிய உலகிலே காலடி எடுத்துவைத்தார். ஏற்கெனவே அவர் வரித்துக்கொண்ட மார்ச்சிய சமூக நோக்கிற்கு இசைவானதொரு சமூகச்சூழல் உருவாகியிருந்தமையால் அவர் தமது ஆற்றலையும் ஈடுபாட்டினையும் வேகப்படுத்திக் கொள்வதற்கு வாய்ப்புகள் அதிகரித்தன. அவ்வாய்ப்பினை அவர் தக்கபடி பயன்படுத்தியும் கொண்டார்.

தேசிய இலக்கியக் கோட்பாட்டினை ஈழத்து தமிழ் இலக்கியப் பரப்பிலே நிலைநிறுத்தும் போக்கில் இலக்கிய இயக்கத்தின் முன்வரிசையில் கைலாசபதி நின்றிருந்தார் என்பதே பொருத்தமானதாகும். அந்த இலக்கிய இயக்கத்தின் அனுபவத்தின் மூலம் தேசிய இலக்கியம் பற்றிக் கைலாசபதி பின்வருமாறு கூறினார். ''தேசிய இலக்கியம் என்னும் சொற்றொடர் ஈழத்திலே குறிக்கும் பொருள் யாது? அது பல பொருள் குறிக்கும் சொற்றொடர். அப்பல பொருள்களுள் விதந்து உரைக்கத்தக்கன ஐந்து: விதேசிய எதிர்ப்பு, சுதேசிய விருப்பு, சமுதாய நோக்கு, ஜனநாயக நாட்டம், மனிதாபிமானம் என்பன. இவற்றை வெவ்வேறு அளவிலும் வகையிலும் ஆதாரமாய்க்கொண்டு படைக்கப் படும் இலக்கியங்களையே தேசிய இலக்கியம் என்னும் தொடரால் நமது எழுத்தாளர்கள் அழைப்பது நாம் பெருமைபடத்தக்கதொன்றாகும்.'' [19] இவ்வாறு தேசிய இலக்கியக் கோட்பாடு ஈழத்து தமிழ் இலக்கியப் பரப்பிலே புதிய பரிமாணங்களைத் தோற்றுவிக்கும் போக்கில் பல்வேறு சிக்கல் நிறைந்த பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து முன்னேறவேண்டியிருந்தது.

தேசிய இலக்கியக் கோட்பாட்டின் அடிப்படையில் அணிதிரண்ட எழுத்தாளர் அணியானது இலங்கை முற் போக்கு எழுத்தாளர் சங்கம் என்ற பரந்த இலக்கிய அமைப்பின் ஊடாக தனது இலக்கிய இயக்கத்தை முன்னெடுத்தது. அவ்வமைப்பானது அறுபதுகளின்

படிப்பகம்

www.padippakam.com



ஆரம்பம் வரையான சுமார் ஒரு தசாப்தத்திற்கு மேற்பட்ட காலத்தில் இறுக்கமான இலக்கிய சாதனைகளைச் சாதித்து நின்ற உண்மைகள் மறுக்கப்பட முடியாதவைகளாகும். இக்காலகட்டத்திலே கைலாசபதியின் பங்களிப்பு அவ் இலக்கிய இயக்கத்தின் வேகத்திற்குப் பெரும் விசைகொடுப் பதாகவும் அமைந்திருந்தது.

தேசிய இலக்கியத்தை அதன் சொந்தக் கால்களிலும், சுய பாரம்பரியத்திலும் முன்னெடுக்க முனைந்தவேளை, தமிழ் இலக்கியப் பரப்பிலே ஆதிக்கம் செலுத்தி வந்த பழமைவாதம் பண்டித இலக்கியவாதிகளின் கடும் எதிர்ப்பை எதிர்நோக்க வேண்டியிருந்தது. இவர்களது மரபுவழிப்பட்ட பழமைவாத வட்டத்திற்குள் சுற்றிச் சுழன்று நின்ற தமிழ் இலக்கியமானது இந்திய பிற்போக்குத் தமிழ் இலக்கிய உலகுடன் பிணைப்புற்று நின்றது. தாய் நாட்டுத் தமிழ் இலக்கியம் என்றும், தரம்மிக்க அறிஞர்களால் படைக்கப் பட்ட தெய்வீக இலக்கியம் என்றும் போற்றிப் புகழ்ந்து மரபுவழிப்பட்ட அவ்விலக்கியத்தையே இங்கும் படைத்துப் பாதுகாக்க வேண்டும் என வற்புறுத்தி வந்தனர். ராஜாஜி, கல்கி, அகிலன், மு. வ. போன்றவர்கள் இலக்கிய ஆதார புருஷர்களாகக் காட்டப்பட்டனர். அவர்கள் படைத்த இலக்கியங்கள் அமரத்துவம் கொண்டவையாகப் போற்றப் பட்டன. அதே வேளை இந்திய முற்போக்கு இலக்கியங்கள் இகழப்பட்டதுடன் அவற்றின் பரம்பலும் தடுக்கப்பட்டது.

அதேபோன்று புதுமையின் பெயரால் ஆபாச நச்சு இலக்கியப் படைப்புகள் தமிழ் இலக்கியம் என்ற பெயரில் குப்பை கூளங்களாக இங்கு இறக்குமதி செய்யப்பட்டன. இவ்வாறு இந்தியப் பிற்போக்கு இலக்கிய ஆதிக்கப்பிடி ஈழத்துத் தமிழ் இலக்கியப் பரப்பிலே இறுகி நிற்பதற்கு நமது பழமைவாதிகளும் அவர்களை அரவணைத்து நின்ற தமிழ் அரசியல்வாதிகளும் காரணமாகிநின்றனர். இப்போக் கினை எதிர்த்து, தேசிய இலக்கியவாதிகளும் முற்போக்கு

www.padippakam.com



எழுத்தாளர்களும் குரல்கொடுத்தவேளை, தாய் நாட்டுட னான இலக்கியத் தொடர்பையும் கலாசாரப் பாலத்தை யும் அறுத்து உடைக்கிறார்கள் என்ற பெரும் குற்றச்சாட் டையும் கூச்சலையும் அவர்கள் எதிர்நோக்க வேண்டியிருந் தது.

தேசிய இலக்கியக் கோட்பாடானது தனியே தமிழகத்து நசிவு இலக்கியத்தையும் அதன் வரவையும் மட்டும் எதிர்த்து நின்ற ஒன்றல்ல. மேற்குலத்தில் இருந்து இறக்குமதியாக்கப் பட்ட கீழ்த்தர இலக்கியங்களையும், மனிதநேயத்தை மறுத்துரைக்கும் நாவல், சினிமா, சஞ்சிகைகள் போன்ற வற்றையும் எதிர்த்துநிற்கும் நிலை அன்று காணப்பட்டது. மேற்கத்தியப்பாணி இலக்கியங்களின் உள்ளம்சங்களையும் அவற்றின் நச்சுத்தனங்களையும் அடையாளங்காட்டுவதில் கைலாசபதி அவ்வப்போது ஊக்கம் காட்டி வந்தார். 1965இல் எழுதிய கட்டுரை ஒன்றிலே பின்வருமாறு அவர் எடுத்துக்காட்டினார். "பணம் சேர்ப்பது பாவமில்லை. 'இல்லாதவன் உள்ளவனைக் கண்டு பொறாமைப்படுகி றான்'. 'உழைப்பால் கோடீஸ்வரனாகலாம்', எது வரினும் தயங்காத லட்சியத்துடன் இலட்சாதிபதியானவன்' என்பன போன்ற கருத்துக்களே மீண்டும் மீண்டும் அமெரிக்க கீழ்த்தர இலக்கியங்களிலும் படங்களிலும் காட்டப்படுகின் றன. இவை மனிதரை மனிதாபிமானத்தை இழக்கச் செய்யும் எண்ணங்கள் என்பது தெளிவு. ஏனெனில் மனிதாபிமானமும்—சகோதரத்துவமும்—இழந்த ஒருவன் தான் மனச்சாட்சியின் உறுத்தல் இன்றி அமெரிக்க அநாகரிகத்திற்கு ஆலவட்டம் பிடிக்கக்கூடியவனாக மாறுவான். தன் சகோதரனின் வீழ்ச்சியில் தன்னுயர்வைக் காண முன்வருவான். உழைப்பையும் விடாமுயற்சியையும் போதிக்கும் சாக்கில் உலுத்தரையும் இரத்தவெறியரையும் இலட்சியப்படுத்துகின்றன இவ்விலக்கியகள்.[20]

இத்தகைய சூழலிலே தேசிய இலக்கியக் கோட்பாட்டின் பல்முனை அம்சங்களைச் செயல்பூர்வமாக்கி முன்னெடுக்கும்

படிப்பகம்

www.padippakam.com



முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. ஆக்க இலக்கிய வகையான சிறுகதை, நாவல், கவிதை, நாடகம் போன்றவற்றிலே சமுதாயப் பிரச்சினைகளை மையமாகக் கொண்ட கலை இலக்கியப் படைப்புகள் வெளிவரத் தொடங்கின, சமூக ஒடுக்குமுறைகள் பலவற்றையும் வர்க்கநோக்கிலும், மனிதநேயப்போக்கிலும் சுட்டிக்காட்டி அவ்வொடுக்குமுறைகள் எதிர்க்கப்படவேண்டியதன் அவசியத்தையும் குறித்துக்காட்டியதுடன் ஒரு சமுதாய மாற்றத்தின் தேவையை வற்புறுத்தும் உயர்ந்த இலக்கியப் படைப்புகளின் வளர்ச்சியாகவும் அவை பரிணமித்து வந்தமையைக் காணமுடிந்தது. இத்தகைய கலை இலக்கியப்படைப்புகளுக்கும் பழமைவாத மரபுவழிப்பட்ட இலக்கியப் போக்குக்கும் இடையே பெரும் இலக்கியப் போராட்டம் இடம் பெற்றுவந்தது. தேசிய இலக்கியக் கோட்பாட்டின் அடிப்படையிலே எழுந்து மண்வாசனை இலக்கியம் எனப் போற்றபட்ட ஈழத்து நவீன இலக்கியத்தின் வளர்ச்சிப் போக்கை 'இழிசனர் இலக்கியம்' என்றும் இலக்கணங்களை மீறிய 'இலக்கியக் கழிசடைகள்' என்றும் பழமைவாத மரபுவாதிகளான இலக்கியவாதிகள் எதிர்த்தனர். அவர்களது அடிநாதமாக 'கலை கலைக்காகவே' என்ற கோட்பாடே நிலவியது. நவீன தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சிக்குக் குறுக்கே இடப்பட்ட இப்பாரிய தடை அரண்களைத் தகர்க்கும் தேவை அன்று முற்போக்கு எழுத்தாளர்களுக்குப் பெரும் பணியாக இருந்தது. அந்தப் பணியின் தலைமை நாயகராகக் கைலாசபதி திகழ்ந்தார் என்பது மிகையான கூற்றாக இருக்க முடியாது.

தமிழகத்து மரபுவழிபட்ட தமிழ் இலக்கியத்தை அடியொற்றி நின்ற ஈழத்துத் தமிழ் இலக்கியத்தை அதன் போக்கினின்றும் திசை திருப்பி நவீன தமிழ் இலக்கிய வளர்ச்சியாக அதனை நெறிப்படுத்தி வளர்ப்பதிலும் கைலாசபதி பெரும் பணியாற்றினார். அவரது விஞ்ஞான பூர்வமானதும், புறநிலையானதும், சமுதாயச் சார்பு

www.padippakam.com



கொண்டதுமான விமர்சன அணுகுமுறையானது தமிழகம் உள்ளிட்ட தமிழ் இலக்கிய உலகில் புதியதோர் சகாப் தத்தை உருவாக்கியது. விமர்சனம் என்பது போற்றிப் புகழுதல் அல்லது தூற்றி இகழுதல், அன்றி இரண்டும் கலந்த ஒருவகைக் கலவைப் பூச்சு என்ற நிலைக்குப் பதிலாக கைலாசபதி முன்வைத்த புதியவகை விமர்சன அணுகுமுறை பிற்போக்கு இலக்கியத் துறையினருக்கு அதிரடியாகவும் முற்போக்கு இலக்கியவாதிகளுக்குத் திசை வழிகாட்டியாகவும் அமைந்தது இத்தகைய விமர்சன அணுகுமுறையின் ஊடே ஈழத்துத் தமிழ் இலக்கியம் செழிப்புற்று வளர்வதாயிற்று. அத்துடன் தமிழகத்து இலக்கிய உலகிலே கைலாசபதியின் விமர்சன அணுகுமுறை யும், ஆய்வுக் கோட்பாடுகளும் பலத்த தாக்கத்தை உருவாக்கின.

ஈழத்து ஆக்க இலக்கியத்துறையில் ஈடுபட்ட சமுதாய சார்பு எழுத்தாளர்களும் அத்துறையிலே ஆர்வமுடன் ஈடு படமுனைந்த இளம் சந்ததியினரும் கைலாசபதியின் விமர்சன, ஆய்வு நோக்கின் ஊடே தரம்மிக்க இலக்கிய சக்திகளாகப் பரிமணித்தனர். ஆக்க இலக்கியத்தில் ஈடுபட்ட எழுத்தாளர்களை அவர்களின் ஆற்றல், ஆளுமை என்பனவற்றைக் கூர்ந்து இனங்கண்டு அரவணைத்து, ஊக்கப்படுத்தி வந்ததுடன் அவர்களின் ஆக்கங்களில் தனது விமர்சன அணுகுமுறையினைச் செலுத்தி நெறிப்படுத்தியும் நின்றார். சமகால தமிழ் இலக்கியப் பரப்பிலே எழுதிவந்த எழுத்தாளர்களுக்கு வழிகாட்டும் வகையில் ஆக்க இலக்கிய எழுத்தாளர்களை மூன்று பிரிவினராக் வகைப் படுத்தியும் காட்டினார்.

''ஒரு பிரிவினர் பிரச்சினைகளையும் முரண்பாடு களையும் துன்பதுயரங்களையும் எதிர்நோக்காதவராய் அவற்றுடன் சம்பந்தப்படாமல் இன்பமூட்டுவதையே எழுத் தின் தலையாய நோக்கமாய்க் கொண்டு அதற்கியையக்

படிப்பகம்

www.padippakam.com



கற்பனைச் சம்பவங்களையும் கதைகளையும் உணர்ச்சிகளையும் இலக்கியமாக்குபவர்கள்''.

இரண்டாவது பிரிவினர் ''இதற்கு மாறாக சமுதாயப் பிரச்சினைகள் இலக்கியத்தில் இடம்பெறுவதை ஏற்றுக் கொள்கின்றனர். எனினும் தமது கடமை அல்லது பொறுப்பு அவற்றைத் தத்ரூபமாகச் சித்தரித்து விடுவதே என்று கருதுகின்றனர். காலப்போக்கில் சமுதாயம் திருந்தும் என்ற நம்பிக்கை இவர்களுக்குண்டு.

மூன்றாவது பிரிவினர் ''சமுதாயத்தை நுணுக்கமாகப் பிரதிபலிப்பது மட்டுமன்றி அதனை மாற்றியமைக்கும் பணியில் பங்குபற்றுவதுடன் அப்பணி வெற்றிபெறுவதற்குரிய மாற்றங்களை இலக்கியப் பொருளாகத் துணிந்து ஏற்றுக் கொள்வதும் இன்றைய தேவையாகும் என வற்புறுத்துகின்றனர். இவ்வாதத்தை இலகுவில் ஒதுக்கிவிட முடியாது.''[21]

இவ்வாறு கோட்பாட்டு அடிப்படையிலும், நடைமுறை வழிகளிலும் ஆக்க இலக்கியத்தின் வளர்ச்சிக்கு வளமான வழிகாட்டியாக இருந்து கைலாசபதி செயல்பட்டார். ஈழத்திலும் தமிழகத்திலும் தோன்றி வளர்ந்த சமுதாயப் பார்வை மக்கள் சார்பு—வர்க்கநோக்கு கொண்ட ஆக்க இலக்கியத்துடனும் அவற்றின் படைப்பாளிகளுடனும் தம்மை மிக நெருக்கமாக்கி அவற்றின் செழுமைக்குத் தம் ஆதரவை வழங்கி நின்றார்.

தமிழகத்தின் பொதுப்படையான பிற்போக்குப் பிடியினின்றும் இலக்கியத்தை விடுவிப்பதிலும், அதேவேளை தேசிய இலக்கியம் என்பதன் ஊடே ஈழத்து நவீன இலக்கியத்தை நெறிப்படுத்துவதிலும் முழு மூச்சாக ஈடுபட்டிருந்த கைலாசபதியை அதன் தொடர்ச்சியானதும் தவிர்க்க முடியாததுமான பணியொன்று எதிர்நோக்கி நின்றது. அதுவே ஈழத்துத் தமிழ் இலக்கியத்தின் பாரம்பரிய தனித்துவத்தை மீட்டெடுத்து நிலைநிறுத்தும் பணியாகும்.

படிப்பகம்

www.padippakam.com



இப்பணிபற்றி கைலாசபதி தாம் எழுதிய 'ஈழத்து இலக்கிய முன்னோடிகள்' என்னும் நூலுக்கு எழுதிய முகவுரையிலே பின்வருமாறு கூறுகிறார். ''இவ்வாறு பல்கிப் பெருகி உலகளாவியதாய் உருப்பெற்றுவரும் தமிழ் இலக்கிய ஆய்வு விருத்தியின் பிரிக்கவியலாத அம்சமாகவே ஈழத்துத் தமிழ் இலக்கிய ஆய்வும் கடந்த சில வருடங்களாகப் பரிணமித்து வந்திருக்கிறது. ஈழத்து நவீன தமிழிலக்கிய ஆய்வில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வந்திருக்கும் நான் அதன் ஊற்றுக்களையும் மூலங்களையும் தேடியபொழுது பின்நோக்கிச்செல்ல வேண்டி இருந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டிலே அரும்பிய சில செல்நெறிகளும் கருத்தோட்டங்களும் இருபதாம் நூற்றாண்டிலே மலர்ச்சி பெற்று மேலும் செழுமையடைவதைக் காணமுடிந்தது.''[22]

ஈழத்துத் தமிழ் இலக்கியத்தின் பாரம்பரியத்தினையும் அதன் தனித்துவத்தின் அடிப்படைகளையும் பத்தொன்பதாம் நூற்றாண்டிலிருந்து வரலாற்று அடிப்படையிலும் சமுதாயச் சார்புநிலையிலும் கைலாசபதி ஆராய்ந்தார். இதன்மூலம் ஈழத்துத் தமிழர் சமூகத்தின் கட்டமைப்பிலே வளர்ச்சிபெற்று வந்த நவீன தமிழ் இலக்கியத்தின் தனித்துவத்தைத் துலக்கமாக அடையாளப்படுத்தினார், அதன் ஊடே அக்கால கட்டங்களில் நிலவிய பொருளாதார அரசியல் சமூக கலாசார அமைப்புகளின் தன்மைகளையும் அவ்வப்போது தொட்டுக்காட்டி அவற்றின் விரிவான நோக்குகளுக்கு வழி சமைத்தார்.

இத்தனித்துவத்திற்கான தேடலைப் பின்நோக்கிச் சென்று ஆராய முற்பட்டதன் விளைவே ஆறுமுகநாவலர் பற்றியும் அவரைத் தொடர்ந்துவந்த இலக்கிய முன்னோடிகள் பற்றியுமான ஆய்வுகளாகும். இப்பன்முக ஆய்வுகளின் அடிப்படை நோக்கம் ஈழத்துத் தமிழ் இலக்கியத்தின் பாரம்பரியமும் அதன் தொடர்ச்சியான படிமுறை வளர்ச்சியும் தனித்துவப் போக்குடையனவாக

படிப்பகம்

www.padippakam.com



இருந்துவந்துள்ளன என்பதனை நிறுவுவதேயாகும். இதன் மூலம் தமிழகம் உள்ளிட்ட பரந்த தமிழ் இலக்கிய உலகிலே ஈழத்துத் தமிழ் இலக்கியம் தனக்குரிய தகுதிமிக்க இடத்தை பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்பு ஏற்பட்டது. ஒருகாலத்தில் 'அக்கரை இலக்கியம்' என்றும், ஈழத்துப் படைப்புகளுக்கு 'அடிக்குறிப்பு' அவசியம் என்றும் தமிழகத்தின் இலக்கியக் 'கனவான்கள்' ஈழத்து இலக்கியத்தை தட்டிக்கழித்து வந்த போக்கினை ஒரு சவாலாக ஏற்று ஈழத்து இலக்கியவாதிகள் முனைப்புடன் செயல்பட்டவேளை அவர்களுக்கு ஆதார அடித்தளத்தினைத் தேடிச்கொடுக்கும் பணியில் கைலாசபதி தம் சக்தியினைச் செலவிட்டு அத்தனித்துவத்தை ஐயந்திரிபற நிலைநாட்டினார்.

இப்பின்னணியிலேயே ஆறுமுகநாவலர் பற்றிய ஆய்வுகளுக்குக் கைலாசபதி முக்கியத்துவம் அளித்து வந்தார். ஆனால் சாதியாசாரத்தை மிக இறுக்கமாகப் பின்பற்றி நின்ற ஆறுமுகநாவலரை மார்க்சியவாதியான கைலாசபதி ஏன் தூக்கி நிறுத்தி அவரைப் பற்றிய பன்முக ஆய்வுகளை நடாத்தினார் என்று குற்றம் காணும் ஒருவகைச் கேள்வி அண்மைக் காலங்களில் முன்வைக்கப்படுகின்றது. நாவலரது காலம் 1822—1879 ஆகும். இக்காலப்பகுதியின் ஈழத்து தமிழர் சமூகத்தின் சமூகக் கட்டமைப்பு எத்தகையது என்பதும் சாதியம் எவ்வாறு அக்காலகட்டத்தில் பேணப் பட்டது என்பதும் வரலாற்று அடிப்படையில் யாவரும் அறிந்ததே. சைவத்தையும் தமிழையும் முன்னிறுத்திப் பணிசெய்து வந்த நாவலர் சாதியத்தையும் கடுமையான தொன்றாகக் கடைப்பிடித்துவந்தார் என்பதில் எவ்வித ஐயமும் இருக்கமுடியாது. இதுப்பற்றி கைலாசபதிக்கு மயக்கமோ தயக்கமோகூட இருந்ததில்லை. ஏனெனில் நாவலரின் சமூகப் பங்களிப்பினை நன்கு ஆராய்ந்த எச்சந்தர்ப்பத்திலாவது நாவலர் பின்பற்றி வந்த சாதியா சாரத்தை நியாயப்படுத்த முன்வந்ததில்லை.

இன்றைய சமகாலச் சூழலில் ஒருவரின் சமூகச்சார் பினை, அவர் சாதியம பற்றிக் கொண்டுள்ள நோக்கு என்ற

www.padippakam.com



அளவுகோலினைக் கொண்டு மதிப்பீடு செய்வது முற்றிலும் ஏற்புடையதாகும். ஆனால் நாவலர் வாழ்ந்த பத்தொன்ப தாம் நூற்றாண்டுச் சூழலிலே சாதிய அளவுகோலைக் கொண்டு ஒருவரின் சமூகப் பங்களிப்பின் முழுமையையும் அளவிட்டுவிட முடியாது. அவ்வாறு மதிப்பிட முயன்றால் ஈழத்து இலக்கியத்தின் முன்னோடிகள் என்று கூறக்கூடிய எவரையும் சாதகமான முறையில் ஆய்வுக்கு உட்படுத்த முடியாது. மேலும் கைலாசபதி ஓர் மார்க்சிய சமூக நோக்கினை அடிப்படையாகக் கொண்டவ்ர் என்ற வகையில் ஒருவரின் பங்களிப்பினை எழுபது முப்பது என்ற வீதத்தி லேயே நோக்கி நிற்பவராக இருந்தார். அதாவது எழுபது வீதம் சாதகமாகவும் முப்பது வீதம் பாதகமாகவும் ஒருவர் இருப்பாரானால் முப்பது வீதம் பாதகமானவற்றுக்காக அவரது எழுபது வீத சாதனைகளை நிராகரிக்க முடியாது என்ற மார்க்சிய கோட்பாடுடையவராக இருந்தே கைலாசபதி நாவலரை மட்டுமன்றி ஏனையோரதும் பங்களிப்புகளையும் ஆய்வு செய்து வந்தார் என்பது நினைவு கொள்ள வேண்டியதொன்றாகும்.

இவ்விடத்திலே விதந்துரைக்கத்தக்க வேறொரு அம்சம் முக்கியமானதாகும். நாவலர் ஆய்வினைப் பன்முகப்படுத்தி ஈழத்து நவீன தமிழ் இலக்கிய வளர்ச்சியின் முன்னோடி யாக அவரை எடுத்துக் காட்டிய அதேவேளை நாவலர் பின்பற்றிப் பாதுகாக்க முனைந்த சாதியத்தை எதிர்த்த போராட்டத்தில் கைலாசபதி ஒளிவு மறைவு அற்றவராக நின்று செயல்பட்டார். 1966—1971 காலகட்டத்திலே வடக்கிலே கம்யூனிஸ்டுகள் முன்னெடுத்த சாதியத்திற்கு எதிரான மிகக் கடுமையான போராட்ட காலங்களிலே வாய்ச்சொல் வீரர்களான சில அறிவுஜீவிகள் அப்போராட் டங்களில் இருந்து தூர விலகி நின்றதுடன் அதற்குக் களங்கம் கற்பிக்கவும் முற்பட்டனர். ஆனால் கைலாசபதி ஏனையவர்களுடன் இணைந்து நின்று துணிவுடன் அப் போராட்டங்களின் முன்னோக்கிய வீறுநடைக்குக் கலை

படிப்பகம்

www.padippakam.com



இலக்கிய முனையிலே சொல்லாலும் செயலாலும் பங்களிப்பு வழங்கி நின்றார் அப்போராட்டங்களின் உச்சகட்டமான 1969ஆம் ஆண்டில் அவற்றை வழிநடத்திச் சென்ற தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் நடத்திய இரண்டாவது மாநாட்டிற்காக விசேஷ மலரில் எழுதிய கட்டுரையிலே கைலாசபதி பின்வருமாறு எழுதினார். ''பழைய இலக்கியங்களைக் காட்டி சாந்தியும் சமாதானமும் போதிப்போர் உண்மையில் மாற்றத்தை எதிர்ப்பவர்கள்; போராட்டத்தை விரும்பாதவர்கள். அவர்கள் இலக்கியத்தைத் தமது நோக்கிற்கு ஏற்ப பயன்படுத்துகிறார்கள். வள்ளுவன் முதல் வள்ளலார் வரை, சோலா முதல் ஷொலக்கோவ்வரை மனிதாபிமானம் பேசியோர் தொகை பெரிதுதான். ஆனால் மனிதனது அடிமைத் தளைகள்தான் பலவிடங்களில் இன்னும் அறுபடவில்லை. மார்க்ஸ் சொன்னார்—இதுகாலவரை தத்துவவாதிகள் உலகை விளக்கவே முயன்றனர் ஆனால் நாமோ அதனை மாற்றமுற்படுகிறோம். எவ்வளவுதான் இலட்சிய உணர்வும் இரக்க சிந்தையும் இருந்தவராயினும் பண்டைய இலக்கிய கர்த்தாக்கள் அல்லது எமக்குக் கிடைக்கும் நூல்களின் ஆசிரியர்கள் உலகை விளக்கியவரே. எல்லோரையும் உழைத்துண்ணும் நல்லவராக்கும் புரட்சியை நாடி நிற்கிறது இன்றையஉலகம். அந்த நாட்டத்தின் ஒரு சிறு பொறியே சாதிப்போராட்டம்''.[23]

எனவே கைலாசபதி நாவலர் ஆய்வினை எத்தகைய நோக்கிலும் போக்கிலும் முன்னெடுத்தார் என்பதும், அதே வேளை தமிழர் சமூக வாழ்வில் இறுகி நின்ற சாதியத்திற்கு எதிராக எவ்வாறு சொல்லாலும் செயலாலும் செயல்பட்டு நின்றார் என்பதும் புரிந்து கொள்ளக் கூடியதே. இந்த உண்மை நிலைக்கு மேலால் சாதியத்திற்கும் கைலாசபதிக்கும் முடிச்சுப் போட்டுக் காட்ட யாராவது முனைந்தால் அது ஆதாரமற்றதும் மோசமானதுமான காழ்ப்புணர்ச்சியாக மட்டுமே இருக்க முடியும்.

www.padippakam.com



பரந்த தமிழ் இலக்கிய உலகில் தனித்துவத்துடனும் செழுமையுடனும் வளர்ச்சி கண்டு வந்த ஈழத்து நவீன இலக்கியத்தின் பல்துறை வளர்ச்சியிலும் அதன் ஊடான தமிழர் கலாசார வாழ்வின் பல்முனை அம்சங்களுடனும் முப்பது ஆண்டுகளாகக் கைலாசபதி தம்மை மிக நெருக்க மாக்கி நின்றார். அவரது சமூகப் பங்களிப்பு பற்றி அவர் நினைவாக வெளிவந்த 'கைலாஸ் நினைவேடு' நூலிலே காணப்படும் மதிப்பீடு ஒன்று முற்றிலும் பொருத்தமுடைய தொன்றாகும். ''இருபதாம் நூற்றாண்டின் தமிழ் இலக்கிய வரலாற்றிலே தனக்கென ஒரு தனி இடத்தைப் பெற்றுக்கொண்டவர் பேராசிரியர் கனகசபாபதி கைலாச பதி. 1953 முதல் 1982 வரை முப்பது ஆண்டுகள் தொடர்ச்சியாக இலக்கியத்துறையில் ஈடுபட்டு உழைத்து வந்தவர் இவர். தமது எழுத்துக்கள் மூலமும் எழுத்துக்குப் புறம்பான செயற்பாடுகள் மூலமும் தற்காலத் தமிழ் இலக்கியச் செல்நெறிகளை நிர்ணயித்த முக்கியமான சிந்தனையாளர்களுள் கைலாசபதியும் ஒருவராகின்றார்''[24] இவ்வாறு நோக்கும்பொழுது கைலாசபதி என்ற மனிதன் தமிழ் இலக்கியத்துறையில் செலுத்திய ஆளுமைமிக்க சிந்தனைகளும், செயல்களும் அத்துறையின் ஆழ்ந்தகன்ற வளர்ச்சிக்கும் வளத்திற்கும் வழங்கிய பங்களிப்பின் பெறுமதியை எடுத்துக்காட்டி நிற்பதனைக் காணமுடியும்.

## 4

கலை இலக்கியத்துறையில் பெரும் பங்களிப்பு வழங்கி நின்ற அதே வேளை கைலாசபதி கல்வித் துறையிலே தமது ஆகக்கூடிய சேவைகளைச் சமூகப் பொறுப்புணர்வுடன் ஆற்றி நின்றார். அவர் பேராதனைப் பல்கலைக்கழகம்,



படிப்பகம்

www.padippakam.com



கொழும்பு வித்தியலங்காரா பல்கலைக்கழகம், யாழ்ப்பாண பல்கலைக்கழகம் ஆகியவற்றில் விரிவுரையாளராக, வெவ்வேறு துறைகளில் தலைவராக, தமிழ்ப் பேராசிரியராகப் பொறுப்புகள் பலவற்றை வகித்துச் செயற்பட்டார். அக்காலங்களில் அவரால் ஈர்க்கப்பட்ட மாணவர்கள் பல நூறு பேராவர். அவர்களில் பலர் பிற்காலத்தில் அவரது அடிச்சுவட்டைப் பின்பற்றி கலை இலக்கியத் துறையிலும் ஏனைய சமூக கல்வித் துறைகளிலும் அக்கறையும் பொறுப்பும் மிகுந்தவர்களாக வளர்வதற்கு கைலாசபதி ஓர் ஆதர்சம் மிக்க வழிகாட்டியாகத் திகழ்ந்தார். 'நான் கைலாசபதியின் மாணவன்' என்று கூறிக் கொள்வதில் ஒருவகைப் பெருமையுணர்வு ததும்பும் வகையில் பலர் பேசுவதை இன்றும் கேட்க முடியும். அந்தளவுக்கு கைலாசபதி மாணவர்களால் கவரப்பட்ட ஒரு கல்வியாளராகவும் கலை இலக்கிய முன்னோடியாகவும் திகழ்ந்தார். அத்துடன் பல்கலைக்கழக சக ஆசிரியர்களாலும் அவர் நேசிக்கப்பட்டார். அதன் அடியம்சம் அவரது ஆழ்ந்த கல்வித்துறை சார்ந்த அறிவாற்றல் மட்டுமன்றி மனித நேயம் மிகுந்த சமூகப் பார்வையின் தன்மையுமாகும்.

கைலாசபதி கல்வித்துறையின் பன்முக நிலைகளிலும் ஓய்வின்றி உழைத்து வந்த ஒரு சிறந்த கல்வியாளர் என்பதை அத்துறை சார்ந்த யாவருமே ஒப்புக் கொள்வர். ஆனால் அவர் தனியே பட்டம் பதவிகளுக்கான ஒரு கல்வியாளராக வாழ்ந்தவர் அல்லர். மனித மேம்பாட்டிற்கும், சமூக முன்னேற்றத்திற்கும் தமது ஆற்றல்கள் அனைத்தையும் பயன்படுத்தும் சமூகச் சிந்தனையும், செயற்பாடும் கொண்ட கல்வியாளராகவே வாழ்ந்து வந்தார். அதனாலேயே பல்கலைக்கழகத்திற்கு வெளியே அரசு சார்பானதும் அரசு சார்பற்றதுமான பல கல்வி கலாசார நிறுவனங்களில் அங்கம் பெற்று தமது கல்வித்துறைப் பங்களிப்பினை வழங்கி நின்றார். பாடநூல் ஆலோசனைச் சபை முதல் சமூக விஞ்ஞானிகள் சங்கம் வரையான பல்வேறு நிறுவனங்

www.padippakam.com



களில் ஆக்கமும் ஊக்கமும் கொண்ட ஒரு கல்வியாளராகச் செயற்பட்டு வந்தார்.

அதேபோன்று பல்கலைக்கழகக் கல்வியின் புதிய பல வளர்ச்சிப் படிகளுக்கு வித்திட்டுச் சென்றவர் கைலாசபதி. குறிப்பாக இன்றைய யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் அவரது பங்களிப்பு கனதியும் காத்திரமும் கொண்டதொன்றாகும். ஈழத்துத் தமிழர் சமூக வாழ்வின் குறித்த ஒரு காலகட்டத்திலே அவர்களது சிறப்புச் செல்வமான கல்வி மேம்பாட்டிற்கு ஒரு பல்கலைக்கழகம் வேண்டும் என்ற நியாயமான கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அக்கோரிக்கை கல்வித் துறை நோக்கிலும் சமூகநல அடிப்படையிலும் நியாயமான தாக இருந்த அதே வேளை அது பாராளுமன்றத் தமிழ் அரசியல் தலைமைகளின் போட்டாபோட்டிக்கு உரிய தொன்றாகவே பயன்படுத்தப்பட்டது. ஒருசாரார் இந்தப் பல்கலைக்கழகம் வேண்டும் எனக் குரல் கொடுத்தனர். அதே வேளை மறுசாராரோ தமிழ்ப் பல்கலைக்கழகம் வேண்டும் என எதிர்நிலையில் வாதாடி நின்றனர். முன்னையவர்கள் யாழ்ப்பாணத்தில் அமைய வேண்டும் என்றபோது பின்னையவர்கள் திருகோணமலையில் அமைய வேண்டும் என்றனர். இவர்களது போட்டாபோட்டிக் கோரிக்கையின் விளைவு பல்கலைக்கழகம் என்பதையே வழங்காமல் இனவாத அரசுகள் தட்டிக் கழித்து வந்த நிலையே நீடித்து வந்தது.

இத்தகைய சூழலிலேதான் 1974ஆம் ஆண்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகம் அன்றைய ஐக்கிய முன்னணி அரசினால் தோற்றுவிக்கப்பட்டது. அன்று ஏனைய பல்கலைக்கழகங்களும் வளாகங்களாகவே இருந்து வந்தன. யாழ்ப்பாண வளாகத்தின் தோற்றத்தை அன்று குறுகிய இனச்சார்பு அரசியல் சக்திகள் எதிர்த்து நின்றன. அரசியல் முனையில் நின்றது போன்றே தமிழர் கல்வித் துறையிலும் தூரநோக்கின்றி தமது நலன்களுக்கு முதன்மை

www.padippakam.com



யளித்து அன்றைய வளாகம் அமைவதை அச்சக்திகள் தடுக்க முனைந்தன. இருப்பினும் அத்தகைய எதிர்ப்புகள் மத்தியிலும் அன்று யாழ்ப்பாண வளாகம் திறக்கப்பட்டது. அதன் முதலாவது தலைவராக கைலாசபதி நியமனம் பெற்றார். அவர் அப்பதவியை நாடி ஓடி அடைந்தவர் அல்லர். அதற்குரிய தகுதிகள் இருந்தமை காரணமாக அப்பதவியை ஏற்கும்படி கல்வித்துறை அறிஞர்களும் அவரது நண்பர்களும் வற்புறுத்தியதன் பெயரில் அதனை ஓர் சமூகக் கடமையாக ஏற்றுக் கொண்டார். அன்று வளாகம் அமைவதை எதிர்த்து நின்ற குறுகிய இனவாத அரசியல் சக்திகள் அவருக்கு அச்சுறுத்தல் விடுத்து அபாயம் விளைவிக்க முயன்ற சில செயல்களில் ஈடுபட்டன. ஆயினும் தாம் ஏற்றுக் கொண்ட பொறுப்பினைத் துணிவுடன் செவ்வனே நிறைவேற்றுவதில் அவர் உறுதி யுடன் இருந்தும் வ தார்,

யாழ்ப்பாணத்தில் அமையப்போகும் பல்கலைக்கழக வளாகம் பெயரளவிலான ஒன்றாக இருப்பதற்குப் பதிலாக சமூகப் பயன்பாடு மிக்க தொன்றாக விளங்க வேண்டும் என்பதில் கைலாசபதி அதிக அக்கறை கொண்டவராக இருந்தார். வடக்கின் சூழலுக்கும், தமிழர் சமூக வாழ்வின் விசேட அம்சங்களுக்கும் ஏற்றவாறான கற்கை நெறிகளை யும் ஆய்வுத்துறைகளையும் முன்னெடுத்து அபிவிருத்தித் திட்டங்களுடன் இணைப்பதை அவர் ஒரு குறிக்கோளாகக் கொண்டிருந்தார். 1974ஆம் ஆண்டு ஆனிமாதத்தில் வெளிவந்த 'தாயகம்' சஞ்சிகையில் 'பரமன்' என்ற பெயரில் எழுதிய 'வடக்கில் ஒரு பல்கலைக்கழகம்' என்னும் தலைப்பிலான கட்டுரையில் பல்வேறு அம்சங்களைத் தொட்டுக் காட்டினார். விவசாயம், மீன்பிடி, உவர் நீர் நிலங்களை உற்பத்திக்குரியவை ஆக்குதல், சிறு கைத்தொழில் வளர்ச்சி போன்றவற்றின் பலதரப்பட்ட ஆய்வுக்கும் உற்பத்திக்கும் யாழ்—வளாகம் ஆக்கமுயற்சி களில் ஈடுபடுவதன் அவசியத்தை வற்புறுத்தியிருந்தார்.

www.padippakam.com



அக்கட்டுரையின் இறுதியில் பின்வருமாறு கூறியிருந்தமை ஆழ்ந்து நோக்குதற்குரியதொன்றாகும்.

வடபகுதியில் அமையும் வளாகம் தமிழ் மாணவர்களுக்கு ஓர் அகதிமுகாமாகவோ, பழம்பெருமை பேசுவதற்கான ஒரு நூதனசாலையாகவோ அமையக்கூடாது. தமிழ் மக்களுக்கு வெறும் கண்துடைப்பாகவோ அல்லது தத்தமது குறுகிய அரசியல் நோக்கங்களுக்குப் பயன்படும் ஒரு பெயர்ப் பலகைப் பல்கலைக்கழகமாகவோ இருக்கக் கூடாது. நாட்டிற்கும் வடபகுதிக்கும் பலன்தரும் முழுமையான எவ்வித பாகுபாடுமற்ற ஒரு பல்கலைக்கழக வளாகத்தையே மக்கள் வேண்டுகிறார்கள். மக்களது விருப்பம் நிறை வேறுமா?''[25]

கைலாசபதி அன்று துணிவுடனும் தூரநோக்குடனும் கையேற்று விருத்திசெய்ய முன்வந்த யாழ்—வளாகம் இன்று தனிப்பெரும் பல்கலைக்கழகமாக வளர்ச்சி கண்டு நிற்கின்றது, என்றால் அந்த வளர்ச்சிக்கான பெருமையில் கைலாசபதியின் பங்களிப்பு, பாரியதொன்று என்பதனை அனைவரும் ஏற்றுக்கொள்வர். அவர் தலைவராக இருந்த காலத்தில் வளாகத்தின் கல்வி வளர்ச்சி, நிர்வாகப் பிரச்சினைகள், மாணவர் கோரிக்கைகள், ஆசிரியர்களின் நலன்கள் போன்ற பல்வேறு பிரச்சினைகளையும் நேர்மையுடனும் நிதானத்துடனும் அணுகி முடிந்தளவுக்கு தீர்வு கண்டு சுயநலமின்றி வளாகத்தை வழிநடத்தி வந்தார் என்பது சக ஆசிரியர்கள் மாணவர்கள் ஊழியர்கள் வாயிலாக அறியக்கூடிய உண்மைகளாகும். 1977இல் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்தபின் அப்பதவியினைக் கைலாசபதியினால் தொடர முடியவில்லை. அதில் உள்ள விசேச அம்சம் என்னவெனில் யாழ்ப்பாணத்தில் வளாகம் தோற்றுவிக்கப்பட்டமையை எதிர்த்து நின்ற அந்த அரசியல் சக்திகள் ஆட்சிமாறியதும் வளாகத் தலைவராகத் தம்மவர் ஒருவரை நியமிக்கக்கோரி தமது அரசியல் அந்தரங்கச்

படிப்பகம்

www.padippakam.com



செல்வாக்கினைப் பயன்படுத்தி நின்றமை சிரிப்புக்குரிய செயலாகும்.

# 5

கலை இலக்கிய, கல்வித் துறைகளுக்கு அடுத்ததாகக் கைலாசபதி தமது ஆளுமையைப் பதித்துச் சென்ற மற்றொரு துறை பத்திரிகைத் துறையாகும். அவர் ஓர் சிறந்த பத்திரிகையாளர் என்பதற்கான சான்றுகள் மிக வெளிப்படையானவை. அத்துறையிலே அவர் பிரகாசித்த காலம், 1957 முதல் 1961 வரையான காலப்பகுதியாகும். 'தினகரன்' பத்திரிகையில் உதவி ஆசிரியராக இணைந்து குறுகிய காலத்திலேயே அதன் பிரதம ஆசிரியராகியும் கொண்டார். இக்காலப்பகுதியில் அவர் வெறும் பெயரளவிலான தொழில்சார் ஆசிரியராகவன்றி தனது ஆற்றல் ஆளுமைகளை வெளிப்படுத்தி குறிப்பிட்ட குறிக்கோளை எய்தும் வகையிலான வழிகளில் திட்டமிட்டு 'தினகரன்' காலத்தைப் பயன்படுத்தினார். இலங்கையின் அரசியலிலும் பத்திரிகைத் துறையிலும் அன்றைய ஏரிக்கரைப் பத்திரிகை நிறுவனம் ஆற்றிநின்ற பிற்போக்கு நிலைப்பாடுபற்றி எவரும் அறிவர். அத்தகைய நிறுவனத்தின் தமிழ் நாளிதழே தினகரன். அதிலே ஓர் மார்க்சியவாதியான கைலாசபதி ஆசிரியராக இருந்து செயல்படுவது என்பது எளிதான விடயமல்ல. ஆனால் கைலாசபதி தினகரனைத் தக்கபடி பயன்படுத்திக் கொண்டார். அவரது பத்திரிகைத் துறை ஆற்றலையும் அதன் மூலம் தினகரன் பெற்ற பிரபல்யத்தையும் அதிகரித்த விற்பனையையும் ஏரிக்கரை உரிமையாளர்களால் நிராகரிக்க முடியாமல் போனமையை அவர் வாய்ப்பானதொன்றாக்கிக் கொண்டார். ஈழத்தின் சகல பாகங்களிலும் இருந்துவந்த எழுத்தாளர்களுடன் கைலாசபதி தினகரன் மூலம் தொடர்புகளை ஏற்படுத்தி

படிப்பகம்

www.padippakam.com



வந்தார். இந்திய எழுத்தாளர்— பத்திரிகையாளர் தொடர்பும் இக்காலத்திலேயே பரந்த அளவில் ஏற்பட்டது.

அக்காலத்தில் இந்திய இடதுசாரி இயக்க எழுத்தாளர்களுடனும் ஏனைய ஜனநாயக, முற்போக்கு, தேசிய நோக்கங்கள் கொண்ட எழுத்தாளர்களுடனும் தொடர்பு கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டது. 1960-ஆம் ஆண்டு நவம்பர் 12ஆம், 14ஆம் திகதிகளில் கல்கத்தாவில் நடைபெற்ற அகில இந்தியத் தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் கலந்துகொண்ட அவர் இந்திய முன்னணித் தமிழ் எழுத்தாளர்களின் தொடர்புகளை வலுப்படுத்த சந்தர்ப்பம் ஏற்பட்டது. அதே வேளை நமது நாட்டின் இலக்கியப் போக்கினைத் தெளிவுபடுத்தவும் முடிந்தது. இதுபற்றிப் பின்னாளில் அவர் எடுத்துக் கூறும்போது ''அன்று இலங்கைத் தமிழ் இலக்கியம் குறைவாகவே இந்தியத் தமிழ் எழுத்தாளர்களுக்குத் தெரிந்திருந்தது. இன்று நிலைமை வேறு. முற்போக்கு எழுத்தாளர் சங்கப் பிரதிநிதி என்ற வகையிலும் 'தினகரன்' பிரதம ஆசிரியர் என்ற வகையிலும் எமது நாட்டு இலக்கியத்தின் நோக்கையும் போக்கையும் இயன்றவரை எடுத்து விளக்க வேண்டிய கடமை எனக்கிருந்தது. அப்பொழுது எம்மத்தியில் தேசிய இலக்கியக் கோட்பாடு வேகம் பெற்றிருந்தது. அந்தப் பின்னணியில் எனது பணியினைச் செய்து முடித்தேன்.'' [26] இவ்வாறு ஏற்பட்ட தொடர்புகளை தினகரன் காலத்திற்குப் பின்பும் வளர்த்து வந்தார்.

இலங்கையின் பல பாகங்களிலும் இருந்து வந்த பல்வகைப்பட்ட எழுத்தாளர்களையும் தினகரனில் எழுத வைத்து அவர்களது வெளிவரா ஆற்றல்களை வெளிவரச் செய்த அதே வேளை தரமான வாசகர் பெருங்கூட்டம் ஒன்றினை உருவாக்குவதில் அவர் வெற்றி பெற்றார் என்றே கூறவேண்டும். கைலாசபதியுடன் 'தினகரன்' காலத்து தொடர்பு எனப் பல எழுத்தாளர்கள், விமர்சகர்கள்

படிப்பகம்

www.padippakam.com



பெருமையாகவும் நன்றிப் பெருக்குடனும் நினைவுகூர்வதை இன்றும் கேட்க முடிகின்றது என்றால் கைலாசபதியின் பத்திரிகைத்துறையிலான ஆளுமையின் சிறப்பே அதற்கு அடிப்படை ஆகும். விமர்சகரும், எழுத்தாளருமான கே. எஸ். சிவகுமாரன் 'தினகரன்' மூலம் கைலாசபதியுடன் தனக்கு ஏற்பட்ட தொடர்பு எவ்வாறு பயன்மிக்கப் பாதையில் வளர்ச்சி கண்டு வந்தது என்பதையும், தன்னைக் கைலாஸ் எப்படி உற்சாகப்படுத்தி எழுத்து, விமர்சனத் துறையில் முன்தள்ளி வந்தார் என்பதையும் தாம் எழுதி வெளியிட்டுள்ள 'கைலாசபதியும் நானும்' என்னும் நூலிலே சுவைபட விவரித்துள்ளார். தமது கோட்பாடு, கொள்கை நிலைகளுடன் ஒத்திசைவு அற்ற நிலையில் இருந்த எழுத்தாளர்களையும் அவர்களிடையே காணப்பட்ட ஆற்றல்கள் காரணமாக அரவணைத்து முன்னோக்கி நகர்த்தி வந்ததில் உள்ள சிறப்புப் பண்பைச் சிவகுமாரனின் கூற்றுக்கள் மூலம் காண முடியும்.

அதேபோன்று கருத்து நிலையில் முற்றிலும் இசைவான நிலையில் எழுதி வந்த எழுத்தாளர்களை ஊக்கத்தின்மேல் ஊக்கமளித்து ஓயாது எழுதவைத்தும் வந்தார். அந்த நினைவை இளங்கீரன், நீர்வை பொன்னையன் போன்றோர் இன்றும் உரிமையுடன் நினைவு கூர்வதைக் கேட்க முடியும். கைலாசபதியின் தினகரன் காலத்தைப் பற்றியும் பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்களிடையே அவர் எவ்வாறு செயல்பட்டு வந்தார் என்பதையும் கைலாசபதியுடன் நெருக்கமாக நின்று வந்தவர்களில் ஒருவரும் அவரது அன்பையும் நன்மதிப்பைப் பெற்றவருமான பேராசிரியர் சி. தில்லைநாதன் கைலாசபதி ஆய்வரங்குக் கட்டுரை ஒன்றிலே விபரமாக எடுத்துக் கூறியிருக்கிறார் ''தொகுத்து நோக்குமிடத்து எழுத்தாளர் பத்திரிகையாளர்களின் ஈடு பாடுகளையும் இனங்கண்டு பட்டைதீட்டி, மானுடம் பயனுறும் வகையில் ஆற்றுப்படுத்தியமை கைலாசின் சிறப்பு என்பது தெளிவாகும். இந்நாட்டு தமிழ் எழுத் தாளர்களுக்கு ஒரு மதிப்பினையும் பிரபல்யத்தினையும்

படிப்பகம்

www.padippakam.com



ஏற்படுத்திக் கொடுத்ததும் கைலாசின் சாதனையாகும். எழுத்தாளர் பத்திரிகையாளர்களை மதிக்கவும் மதிப்பிடவும் தெரிந்திருந்த கைலாசை எழுத்தாளரும், பத்திரிகையாளரும் மதித்து மதிப்பிடுவதில் ஆச்சரியப் படுவதற்கொன்றுமில்லை''.[27]

கைலாசபதியின் பத்திரிகைத்துறைப் பங்களிப்பு தனியே 'தினகரன்' காலத்திற்குரியதொன்று மட்டுமன்றி தொடர்ச்சியானதுமாகும். அவர் தமது இறுதிக் காலம் வரை அத்துறையின் ஊடே தமது பங்களிப்பினை வழங்கி வந்தார். அரசியல் பத்திரிகைகளில் குறிப்பாக கம்யூனிஸ்ட் இயக்கப் பத்திரிகைகளில் அவர் தொடர்ச்சியாக எழுதி வந்தார். 1964ஆம் ஆண்டிற்கு முற்பட்ட தேசாபிமானி யிலும், அதற்குப்பின் 'தொழிலாளி'யிலும் பல்வேறு புனைபெயர்களில் எழுதி வந்தார். அதேபோன்று 1978ஆம் ஆண்டின்பின் வெளிவரத் தொடங்கிய 'செம்பதாகை' 'ரெட்பனர்' பத்திரிகைகளில் 'ஜனமகன்' 'உதயன்' ஆகிய பெயர்களில் கைலாசபதி தொடர்ந்து எழுதி வந்தார். அப்பத்திரிகைகளின் வளர்ச்சிபற்றி அவற்றின் ஆசிரியர் குழுக்களுடன் அடிக்கடி கலந்துரையாடல்களையும் நடத்தி வந்தார். தமது பத்திரிகைத்துறை ஆற்றல், ஆளுமை தம்முடன் மட்டும் நின்று விடுவதை அவர் விரும்பவில்லை. அதனாலேயே தமது இறுதிக்காலத்தில் இளம் பத்திரிகை யாளர்களைக் கூட்டான் முறையில் உருவாக்கி வளர்த்து எடுப்பதற்கு முயற்சிகள் எடுத்து வந்தார். அம்முயற்சி யினைச் செம்பதாகை ஆசிரியர் குழுவின் ஊடே செயல் படுத்துவதில் ஆர்வம் காட்டி நின்றார்.

ஒரு தெளிவான குறிக்கோளுடன் பத்திரிகைத்துறையில் ஆரம்பம் முதல் இறுதிவரை ஈடுபட்டு வந்த கைலாசபதி அத்துறையில் பதித்துச் சென்ற அழியாச் சுவடுகள் இன்றும் துலக்கமுடன் காணப்படுகின்றன என்றால் அவரது பத்திரிகைத்துறை ஆற்றலும் அதன் மூலமான பங்களிப்பும் எத்தகையன என்பதை நாம் உணர்ந்து கொள்ளலாம்.

படிப்பகம்

www.padippakam.com



# 6

தமிழியல் துறைகளிலே தமது முழுமையான ஆற்றல் ஆளுமையினைச் செலுத்திவந்த கைலாசபதி அரசியலிலும் ஆர்வ அக்கறை கொண்டவராக இருந்துவந்தார். அத்துறையில் அவர் கொண்டிருந்த ஈடுபாடும் உறுதிமிகக் நிலைப்பாடும் பெருமளவிற்குப் பகிரங்கமானதொன்றல்ல. ஆயினும் அவரை மிக நெருக்கமாக அவதானிப்போர் விரைவாகவே அவரது அரசியல் இயக்கச் சார்பினை அடையாளங்கண்டு கொள்ளக்கூடியவாறு செயல்பட்டும் வந்தார்.

கைலாசபதி நாற்பதுகளின் இறுதி ஆண்டுகளின் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் இளம் மாணவனாக இருந்தபோது மார்க்சியத்தின் அறிமுகம் கிடைத்தது என்பதை முன்னரே கண்டோம். அவ்வறிமுகத்தின் ஊடே அத்தத்துவம்—நடைமுறை மீதான பற்றார்வம் அவரிடம் அதிகரித்து வந்தது. ஐம்பதுகளின் ஆரம்பத்துடன் கொழும்பு றோயல் கல்லூரி மாணவனாகி உயர்நிலைக் கல்வியைத் தொடர்ந்த வேளையிலும் மார்க்சியத்தையும் அதன் நடைமுறைப் பிரயோக அனுபவங்களையும் ஏனைய துறைகளைப் போன்று பரந்த அளவில் கற்றறிவதற்கு வாய்த்த சந்தர்ப்பங்களை நன்கு பயன்படுத்திக் கொண்டார். இக்காலம்பற்றி, கைலாசபதியின் பாடசாலை நண்பனாகவும் இலக்கிய சகாவாகவும் இருந்து வந்த இ. முருகையன் இவ்வாறு கூறுவதை அவதானிக்கலாம். ''றோயல் கல்லூரிக் காலத்தில் கைலாசபதியின் வாசிப்புப் பழக்கம் மிகவும் பரந்து விரிந்தது. பலதுறை நூல்களையும் அவர் பயின்றார். எனக்கு அவர் எழுதிய இலக்கிக் கடிதங்கள் வாயிலாகவும், நேரில் சந்திக்கையில் நிகழ்ந்த உரையாடலின்போதும் அவருடைய வாசிப்புப் பின்னணி புலனாகியது.'' [28] முருகையனது கூற்றினை முற்றிலும்

www.padippakam.com



ஏற்றுக் கொள்ளமுடியும். 1952-இல் மாணவன் கைலாசபதி கொழும்பில் இருந்து முருகையனுக்கு எழுதிய கடிதம் ஒன்றிலே பின்வருமாறு எழுதியிருக்கிறார். ''நான் தற்சமயம் 'The Red Star Over China' என்ற நூலை வாசித்துக்கொண்டிருக்கிறேன். கடிதம் எழுத எழுத முன்னிருக்கும் 'செம்புத்தகம்' மனதைக் குலைக்கிறது. பாரும் எவ்வளவு பலவீனம் என்று. Edgar Snow என்ற ஆங்கிலேயர் எழுதியது. காய்தல் உவத்தல் இன்றி சில மாதங்கள் Communists உடன் வசித்து 1937இல் எழுதினார். 1944 இல் சில புதிய அம்சங்கள் புகுத்தினார். இன்று முழுச் சீனாவும் 'சிகப்பு' ஆன பின்பும் அவர் கூற்றுக் களும் மேற்கோள்களும் முடிவுகளும் தீர்க்கதரிசியின் ஞானம் போல் உண்மையாயிருக்கின்றன.''[29] சீனப் புரட்சியின் உள்ளடக்கம். அதனைக் தலைமைதாங்கி நின்ற சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் நோக்கங்கள், மாஓ சேதுங் உட்பட கட்சியின் தலைவர்கள் பற்றிய செய்திகள் யாவற்றையும் விளக்கி ஒரு தெளிவான சித்திரத்தை அந்நூல் தீட்டி யிருந்தது. அன்றும் இன்றும் அது ஒரு பிரபல்யம்மிக்க நூலாக இருந்து வருகின்றது என்பது குறிப்பிடத்தக்க தாகும். இதுபோன்றே மார்க்சிய தத்துவ நூல்கள் பலவற்றையும் இக்காலத்தில் கைலாசபதி அடிப்படை நிலைப்பாட்டிற்கான தேடலின் நோக்குடன் கற்றறிய முற்பட்டார் என்பதனைப் புரிந்து கொள்ளமுடியும்.

இவ்வாறு நாற்பதுகளின் இறுதியிலும் ஐம்பதுகளின் ஆரம்பத்திலும் நிலவி வந்த சர்வதேசிய தேசிய நிலைமைகள் மார்க்சியத்தை ஆர்வத்துடன் அணுக முற்படும் எவருக்கும் ஒரு உந்துதலைக் கொடுக்கக் கூடியவனவாய் அமைந்தன. நாற்பதுகளின் நடுக்கூறிலே பாசிசம் உலக ரீதியாகத் தோற்கடிக்கப்பட்டு இரண்டாவது உலக யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. இப்பாசிச எதிர்ப்பு யுத்தத்தில் சோவியத் மக்களும், கட்சியும் தோழர் ஸ்டாலின் தலைமை யில் அணி திரண்டு உலக மக்களுக்கு வழிகாட்டும் வீரதீரப்

படிப்பகம்

www.padippakam.com



போராட்டங்களை முன்னெடுத்தனர். உலகம் பூராகவும் கோடிக்கணக்கான மக்களும் லட்சக்கணக்கான கம்யூனிஸ்டுகளும் ஏனைய ஜனநாயக தேச பக்த சக்திகளும் வரலாறு காணாத தியாகங்களைப் புரிந்து நின்றனர். சோவியத் யூனியன் அன்று பாதுகாக்கப்பட்டதோடு கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் தெற்கு ஐரோப்பாவில் இரண்டு நாடுகளும் சோசலிச நாடுகளாயின. சீனாவின் விடுதலையுத்தம் நீண்டகாலப் போராட்டத்திற்குப் பின் தோழர் மாஓவின் தலைமையில் வெற்றி பெற்றது. அதற்கு முன்னாகவே இந்தோசீனத்தில் தோழர் ஹோசிமின் தலைமையில் வட வியட்நாம் நாடு சோசலிசத்தை வரித்துக்கொண்டது. கொரியாவின் விடுதலை யுத்தம் வெற்றியின் விளிம்பைத் தொட்டு நின்றது. இந்தியாவில் எண்ணற்ற தியாகிகளின் உயிர் அர்ப்பணிப்புகளாலும் இரத்தம் சிந்தலாலும் உருவாகிய சக்திமிக்க தேசிய இயக்கம் இந்தியாவிற்குச் சுதந்திரத்தை வழங்கும் நிர்ப்பந்தத்தைப் பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளுக்கு ஏற்படுத்தியது. இவ்வாறு அன்றைய சர்வதேசிய வளர்ச்சிப் போக்கானது பொதுவாகவே பாட்டாளி வர்க்க அரசியல் சக்திகளின் முன்னோக்கிய வீறுநடைக்குச் சாதகமானதொன்றாகக் காணப்பட்டது.

இத்தகைய சர்வதேசச் சூழலில் தேசிய ரீதியான பல மாற்றங்கள் இடம்பெற ஆரம்பித்தன. இலங்கையில் வெகுஜனத்தன்மை வாய்ந்த சக்தி மிக்க தேசிய இயக்கம் எதுவும் வளர்ந்திருக்கவில்லை. இலங்கையின் உயர் வர்க்க சக்திகள் பிரித்தானிய எசமானர்களிடம் அவர்களைக் கோபப்படுத்தாத மன்றாட்ட மனுக்களின் மூலமான அரசியல் சீர்திருத்தங்களையே கோரி நின்றன. அதே வேளை இலங்கையின் இடதுசாரி இயக்கம் முழுமையான சுதந்திரக் கோரிக்கையை முன்வைத்து பிரித்தானிய ஏகாதிபத்திய எதிர்ப்பில் முனைப்பைக் காட்டி நின்றது. இருப்பினும் இவ்விடதுசாரிகளினால் வெகுஜனத் தன்மை வாய்ந்த தேசிய இயக்கத்தைப் பரந்ததொன்றாகக் கட்டி

www.padippakam.com



யெழுப்ப முடியவில்லை. ஆனால் தொழிலாளி வர்க்கத்தை நகர்ப்புறங்களில் ஸ்தாபனரீதியில் கட்டி வளர்ப்பதிலும் அதன் ஊடே பொருளாதார அரசியல் கோரிக்கைகளை முன்வைப்பதிலும் தீவிரம் காட்டினர். இதன் வெளிப் பாடாக 1947ஆம் ஆண்டு சக்தி மிக்க பொது வேலை நிறுத்தத்தினைச் சகல இடதுசாரிகளும் இணைந்து வெற்றி கரமாக நடத்தினர் அதன் சார்பான ஊர்வலத்திலேயே கந்தசாமி என்ற அரசாங்க எழுதுவினைஞர் பொலீஸ் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார். மேலும் பலர் படுகாயங் கள் அடைந்தனர். இவ்வேலை நிறுத்தம் பிரித்தானிய ஆட்சியாளர்களைக் கதிகலங்கச் செய்தது. இதனைக் கவனத்திற் கொண்டும் இந்திய உபகண்ட எழுச்சியின் அனுபவத்தாலும் பிரித்தானிய ஏகாதிபத்தியம் தனக்கு இசைவாகச் சேவகம் செய்யக்கூடிய வர்க்கமான சிங்கள தமிழ் முஸ்லீம் உயர் வர்க்கத்தினரை உள்ளடக்கிய இலங்கையின் தரகு முதலாளித்துவ சக்திகளிடம் சுதந்திரம் என்பதனைக் கையளித்துச் சென்றனர். இவ்வாறு 1948இல் வழங்கப்பட்ட சுதந்திரத்திற்குப் பின்னான காலகட்டத் திலேயே இலங்கையின் தேசிய உணர்வுகள் முழுமை அடைந்து அரசியல் தாக்கம் மிக்க விளைவுகளை ஏற்படுத்தி வர ஆரம்பித்தன. இத்தகைய தேசியம் பற்றி சிறிது விரித்துரைப்பது அவசியமாகின்றது.

உலகில் எந்தவொரு நாட்டிலும் பிரபுத்துவத்திற்குப் பிந்திய முதலாளித்துவத்தை நோக்கிய காலகட்டத்தில் உருவாகி வளரும் தேசிய உணர்வு என்பது தவிர்க்க வியலாத ஒன்றாகும். ஒவ்வொரு நாட்டினதும் பொருளா தார அரசியல் சமூக கலாசார வளர்ச்சிப் போக்கில் நாடு இனம், மொழி, மதம், கலாசாரம், பாரம்பரியம் என்பன வற்றை உள்ளடக்கியே அத்தகைய தேசிய உணர்வுகள் தோன்றி முனைப்படைந்து புதிய பரிமாணங்கள் பல வற்றைத் தோற்றுவிக்கும். காலனியாதிக்க நாடுகளில் தேசியம் என்பது ஐரோப்பிய வகைத் தேசியத்தைவிட வித்தியாசமானதொன்றாகவே தோன்றி வளர்ந்தது.

படிப்பகம்

www.padippakam.com



அதன் பிரதான அம்சமாக இருந்தது அந்நிய ஏகாதிபத்திய எதிர்ப்பாகும். இந்நிலை காலப்போக்கில் வளர்ச்சி பெற்று அவ் எதிர்ப்புடன் பிரபுத்துவ உறவுகளையும் எதிர்க்கும் ஒன்றாகி, தேசியமானது புதிய பரிமாணம் பெற்றுக் கொண்டது. ஆனால் இன்று பல்லின மக்களைக் கொண்ட நாடுகளிலே ஏகாதிபத்திய எதிர்ப்பு, பிரபுத்துவ எதிர்ப்பு என்பனவற்றுடன் தேசிய இனங்களின் சமத்துவத்தையும் வற்புறுத்தி நிற்கும் ஒன்றையே முழுமையான தேசியம் என்று கொள்ள முடியும். ஆனால் பல்லின மக்களைக் கொண்ட அநேக நாடுகளிலே இவ்வகைத் தேசியத்தைக் காண்பது கடினமானதொன்றாகவே இருந்து வருகின்றது.

இத்தகைய தேசியத்தை பிற்போக்கான திசையில் முன்னெடுப்பதற்கும் அதேபோன்று முற்போக்கான பாதையில் வழிநடத்துவதற்கும் வர்க்க சக்திகள் இடையறாது எப்பொழுதும் முயன்று வரும். ஏகாதிபத்திய எதிர்ப்பும் சகல தேசிய இனங்களினது ஐக்கியமும் உழைக்கும் வர்க்க நலன்களும், தேசத்தின் சுதந்திரம் சுயாதிபத்தியம் என்பனவற்றைக் குறியாக வைத்து முன்னெடுக்கப்படும் தேசியம் முற்போக்கானதாகும். அது நாட்டிற்கும் மக்களுக்கும் நன்மைகள் பலவற்றைக் கொண்டு வரும் தன்மையுடையதாகும். ஆனால் ஏகாதிபத்திய அரவணைப்பும் பேரின ஆதிக்கப் போக்கும் தேசம் மக்கள் பற்றிய அக்கறையின்மையும், தேசிய இனங்களைப் புறக்கணிக்கும் போக்குமுடைய தேசிய உணர்வு பிற்போக்கானதாகும்.

இலங்கையில் சுதந்திரத்திற்கு முன்பு முழுமை பெற முடியாமல் இருந்து வந்த தேசிய உணர்வுகள் சுதந்திரத்திற்குப் பின்னான ஐம்பதுகளின் ஆரம்பத்துடன் தம்மைப் பல வழிகளிலும் வெளிப்படுத்தி நிற்க ஆரம்பித்தன. தரகு முதலாளித்துவ ஆட்சியின் மக்கள் விரோத—விதேசிய அரவணைப்புக் கொண்ட நடவடிக்கைகளுக்கு எதிரான மிகப் பெரும் போராட்ட எழுச்சியாக இடம்பெற்ற வெகுஜனக் கிளர்ச்சியே 1953ஆம் ஆண்டு இடம்பெற்ற

www.padippakam.com



மாபெரும் ஹர்த்தால் போராட்டமாகும். நாடு தழுவிய அப்போராட்டத்தில் தொழிலாளர்கள், விவசாயிகள், அரச ஊழியர்கள், ஆசிரியர்—மாணவர் உட்பட சகல இன மக்களும் ஒன்று திரண்டு நின்றனர். தொழிலாளி வர்க்கத் தலைமையின் கீழ் ஒரு பரந்த புரட்சிகர வெகுஜன எழுச்சியாக நாட்டு மக்கள் அனைவரையும் ஒன்றிணைத்த இச்செயல்முறையானது அன்றுவரையும் அதற்குப் பின்பும் இலங்கை வரலாற்றில் இடம் பெற்றதில்லை என்பதில் தான் அதன் முக்கியத்துவம் அடங்கியிருந்தது. ஆனால் அத்தகைய வெகுஜனப் புரட்சிகரப் போராட்டத்தின் படிப்பினைகளை அதற்குத் தலைமை தாங்கிய இடதுசாரிகளினால் உரிய வழிகளில் முன்னெடுக்க முடியவில்லை. ஏகாதிபத்திய எதிர்ப்பையும் தேசிய அபிலாசைகளையும் உள்ளடக்கிய முற்போக்கு தேசியத்தை முன்னெடுக்கும் வாய்ப்பினை அன்றைய இடதுசாரித் தலைமையினர் இழந்தனர். அது அவர்களது தத்துவார்த்த—நடைமுறைத் தவறுகளின் தளம்பல்களின் விளைவானதாகும்.

ஆனால் தேசிய முதலாளித்துவ சக்திகள் ஹர்த்தால் போராட்டத்தின் மூலம் பெற்ற படிப்பினைகளால் தேசிய அபிலாசைகளை வென்றெடுத்து நிலை நாட்டும் போக்கில் தமது வர்க்க இயல்புகளுக்கு ஏற்ற நிலைப்பாட்டின் ஊடே தேசியத்தை முன்னெடுத்தன. அவர்களது முன்னெடுப்பில் ஓரளவிற்கு ஏகாதிபத்திய எதிர்ப்பும், தேச நலன்களும் உள்ளடங்கி இருந்தபோதிலும் அவற்றுக்கும் மேலால் சிங்கள பௌத்த தேசியவாத அடிப்படைகளே முனைப்படைந்து செல்வதற்கான போக்குத்தான் மேலோங்கி நின்றது, இது அதன் பிற்போக்கு அம்சத்தைக் கொண்டதாக விளங்கியது. இத்தகைய தேசியம் காலப்போக்கில் முதலாளித்துவப் பாராளுமன்ற அமைப்பு முறையின் தேவைக்கேற்றவாறு பயன்படுத்தப்பட்டு இறுதியில் பெரு முதலாளித்துவ சக்திகளின் பேரினவாத வெறியாகவும் மாற்றப்பட்டது என்பது யாவரும் அறிந்த ஒன்றேயாகும்.

படிப்பகம்

www.padippakam.com



இலங்கைத் தேசியம் என்பதற்குள் ஒன்று சேர்ந்து ஏகாதிபத்தியத்துக்கும் உள்நாட்டுப் பிரபுத்துவ முதலாளித்துவ பிற்போக்கு சக்திகளுக்கும் எதிராக எழுந்து ஐக்கியப்பட்டு நிற்க வேண்டிய சிங்கள தமிழ் முஸ்லிம் மக்களின் தேசிய உணர்வுகளும் அபிலாசைகளும் நாளடைவில் அந்நியப்படுத்தப்பட்டு ஒன்றன்பின் ஒன்றாக உடைபட்டுப் பிளவுண்டு தனித்தனி தேசியங்களாகி ஒன்றையொன்று எதிர்த்து நிற்கும் இன்றைய நிலைக்கான அத்திவாரம் அன்றைய தவறான தேசியப் போக்கினால் இடப்பட்டது. இந்த நாட்டின் ஆளும் வர்க்க—இனவாத சக்திகளும் அவற்றுக்கு உதவி நின்ற அந்நிய ஏகாதிபத்திய சக்திகளுமே இந்த நிலைமைக்குப் பொறுப்பாளிகள் ஆவர். இதனை மேலும் விரித்து நோக்குவதற்கு இது உரிய சந்தர்ப்பமன்று

ஐம்பதுகளுக்குப் பின்பு வளர்ச்சி பெற்று வந்த தேசியத்தின் முற்போக்கான அம்சங்களின் உடன் நிகழ்ச்சியாகவும், பிற்போக்கான கூறுகளின் எதிர்விளைவாகவும் முற்போக்கான ஒரு தேசியக் கோட்பாடு உருவாகி வளரவே செய்தது. அது தன்னைச் சர்வதேசியத்துடன் இணைத்து வெளிப்படுத்துவதிலும் தன் முனைப்பைக் காட்டி நின்றது. இது முற்றிலும் சிங்கள பௌத்த தேசியமாக வளர்வதற்கு இருந்த தேசியத்தில் இருந்து வேறுபட்டதாகவும் காணப்பட்டது. அதனடியாக எழுந்ததுவே முற்போக்குத் தேசிய இலக்கியக் கோட்பாடாகும்.

அதற்குரிய அடிப்படைகளை வரையறுத்து ஒழுங்குபடுத்தி தமிழர் சமூக வாழ்விலே அவற்றை நிலைப்படுத்தி முன்னெடுப்பதில் முன்னணியில் நின்றவர்களில் கைலாசபதியும் ஒருவராகி தமது சமூக நோக்கின் ஊடான பங்களிப்பினை வழங்கினார். இதனை அவர் பின்வருமாறு தெளிவுபடுத்துவதை அவதானிக்க முடியும். ''அரசியல் அரங்கில் 'தேசியம்' என்னும் சொல் குறித்த விதேசிய எதிர்ப் புணர்ச்சி சுதேசிய நாட்டம் என்பனவற்றோடு சுதேசிய

படிப்பகம்

www.padippakam.com



நாட்டத்தின்' தன்மையையும் தகைமையையும் 'மண் வாசனை' என்னும் தொடர் புலப்படுத்தியது. ஆனால் அந்தளவுடன் விடயம் முடிந்து விடவில்லை. விதேசியத்தின் எதிர்நிலையான 'சுதேசியம்' எத்தகையதாய் இருத்தல் வேண்டும் என்பதிலும் தேசிய இலக்கியவாதிகளுக்கு ஆழ்ந்த அக்கறை இருந்தது'' 30 இதன் மூலம் அரசியல்—இலக்கியம்—தேசியம் இவற்றுக்கிடையிலான உள்ளார்ந்த உறவு, வளர்ச்சி, திசை என்பனவற்றை நெறிப்படுத்தி வழிகாட்டும் ஓர் தெளிவான போக்கினைக் கைலாசபதி கொண்டிருந்தார் என்பதனைக் கண்டு கொள்ளலாம்.

ஐம்பதுகளின் ஆரம்பத்துடன் தோன்றிய தேசிய உணர்வலைகளிடையே காணப்பட்ட முற்போக்கான கூறுகளில் ஒன்று ஏகாதிபத்திய எதிர்ப்பாகும். இதனை வளர்த்து முன்னெடுப்பதில் இடதுசாரி சக்திகள் குறிப்பாக, கம்யூனிஸ்ட் இயக்கத்தினர் தீவிரமாகச் செயலாற்றி நின்றனர். கொரிய ஆக்கிரமிப்புக்குப்பின் அமெரிக்க ஏகாதிபத்தியம் இந்தோசீனத்தில் வியட்நாம் ஆக்கிரமிப்பை அப்பட்டமாக விஸ்தரித்துக் கொண்டது. அதேவேளை சுதந்திரம் கிடைத்த நாடுகள் என்று கூறப்படும் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை போன்ற நாடுகளில் அமெரிக்கா 'உதவி' என்ற பெயரில் தனது பொருளாதார அரசியல் நலன்களுக்கான ஆதிக்கத் திணிப்பை மிக நாசுக்காக நடத்திக் கொண்டு வந்தது. அதனால் அமெரிக்காவின் நச்சுத்தனம் வாய்ந்த ஒவ்வொரு நடவடிக்கையையும் அம்பலப்படுத்தி எதிர்க்க வேண்டிய தேவை ஒவ்வொரு கம்யூனிஸ்டையும் முற்போக்குவாதியையும் எதிர்நோக்கி இருந்தது.

அக்கால கட்டத்திலே கைலாசபதி 'அபேதன்' புனை பெயரில் அரசியல் வார இதழான 'தொழிலாளி'யில் பல கட்டுரைகளை எழுதி வந்தார். இந்திய சுதந்திரத்தின்

கை—4

படிப்பகம்

www.padippakam.com



போலித்தன்மையையும் அமெரிக்க உதவியின் உள்நோக்கத்தையும் விரித்துரைத்த அக்கட்டுரையில் பின்வருமாறு எழுதினார். ''இந்தியா நித்திய உபவாசத்தில் இருப்பது தற்செயலான காரியம் அல்ல ஏகாதிபத்தியத்தின் பிடியில் சிக்கியுள்ள நாடுகளைத் தலைதூக்க விடாமல் பார்த்துக் கொள்வது ஏகாதிபத்தியத்தின் முதல் கடமையாயிற்றே. 'நோயாளி சாகவும் கூடாது; முற்றாகக் குணமடையவும் கூடாது; சதா வைத்தியரை நம்பி வாழவேண்டும் இதுதான் ஏகாதிபத்திய உத்தி. இந்நிலையிலேதான் உதவி என்ற மயக்க மருந்தை அடிக்கடி வழங்குகிறது அமெரிக்கா... உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர் என்பது பழைய அறிவுரை. அதன் இழிந்த நிலையை அமெரிக்க உதவியில் காணலாம்'' [31] என்று எடுத்து விளக்கிய அவர் அமெரிக்காவின் கலாசார ஊடுறுவலின் அடிப்படைகளையும் அதன் நோக்கங்களையும் துல்லியமாகத் தொட்டுக் காட்டினார்: ''கலாசார ஊடுருவல் என்றால் என்ன? தத்துவார்த்த அடிப்படையில் கூறுவதனால் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தில் உள்ள வரலாற்று மரபில் வரும் தார்மீகப் பண்புகளையும் நம்பிக்கைகளையும் திசைதிருப்பியோ, திரித்தோ மறைத்தோ தனித்தன்மையிழக்கச் செய்யும் தந்திரோபாயமாகும். இது ஏன் முக்கியம் என்றால் இத்தகைய தனிப் பண்புகள் அந்நிய முறைகளைப் பலமாக எதிர்ப்பனவாகும்.''[32] என்று எடுத்துக்காட்டி மேலும் கூறுகையில் ''அமெரிக்க கலாசார ஊடுருவலை நுணுகி ஆராய்வோமாயின் மூன்று முக்கியமான போக்குகள் புலப்படும். 1) கம்யூனிச எதிர்ப்பும் வெறுப்பும் 2) அமெரிக்க ஆதரவும்—சார்பும் 3) தேசிய அவநம்பிக்கையும்—தலைகுனிவும் இம்மூன்று உணர்வுகளையும் எண்ணற்ற நுண்ணிய முறைகளில் எத்தனையோ வகையானவர்களால் பிரசாரம் செய்கின்றனர்.''[33]

பழைய காலனித்துவ அமைப்பு முறையானது தற்காலத்திலே புதிய வடிவமெடுத்து வரும் போக்கு சுதந்திரம் பெற்ற நாடுகளிலே ஏகாதிபத்தியங்களினால் முன்தள்ளப்

படிப்பகம்

www.padippakam.com



பட்டு வந்தன. அதனையே நவகாலனித்துவம் என அரசிய லாளர் அடையாளம் கண்டனர். ஆனால் அதனை ஏற்றுக் கொள்ள மறுப்போர் இன்றும் இருந்து வருகின்றனர். இதனைத் தூரநோக்குடன் கணித்து 1976ஆம் ஆண்டில் எழுதிய கட்டுரையில் கைலாசபதி மேல்வருமாறு கூறினார். ''கொடுப்பது போன்ற, வாரி வழங்குவது போன்ற பிரமையை ஏற்படுத்துவதுதான் நவகாலனித்துவத்தின் தன்மை. எடுப்பது என்றால் கொஞ்சநஞ்சமல்ல. ஒரு நாட்டையே சுவீகரித்துக் கொள்ளும் அளவுக்கு அதை அடிமைப்படுத்துவதாகும்.''[34] அன்று ஆரம்பநிலையில் இருந்த இந்நவகாலனித்துவ அமைப்புமுறை இன்று இலங்கையில் பூரணப்படுத்தப்பட்டிருக்கிறது. அந்நிய பல்தேசிய நிறுவனங்களின் கோரப்பிடிக்குள் நமது நாட்டின் தேசிய பொருளாதாரமும் தேசிய சுதந்திரமும் சிக்க வைக்கப்பட்டு வருகின்றமையைப் பகிரங்கமாகவே காண முடியும். திறந்த பொருளாதாரக் கொள்கை, சுதந்திர சந்தை போன்ற அமைப்பு முறைகள் ஏற்கெனவே நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டுள்ளன. நூற்றுக்கு மேற்பட்ட அரச, கூட்டுத்தாபனங்கள் மக்கள் மயம் என்ற பெயரில் தனியார் மயப்படுத்தலுக்கு உள்ளாக்கப் பட்டுள்ளன. இத்தனியார் என்போர் இராட்சத பல்தேசியக் கம்பனிகளும் அவர்களது உள்ளூர் சகபாடிகளான பெரும் பண முதலைகளுமேயாகும்.

இதனைச் செயற்படுத்தும் பெரும் வேலைகள் 1977இல் யூ. என். பி. பதவிக்கு வந்த நாள்முதல் ஆரம்பிக் கப்பட்டன. அவ்வாறு அதனை வழிநடத்தி வந்தவர்கள் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் 'உலக வங்கியும்' சர்வதேச நாணய சபையுமேயாகும். இவ்வாறு இலங்கையை தமது வழியில் எடுத்துச் செல்வதன் நோக்கையும் போக்கை யும் பற்றி, கைலாசபதி 1981இல் செம்பதாகைப் பத்திரிகை யில் எழுதியிருந்தார்: ஜனமகன் என்னும் புனைபெயரில் எழுதிய அவர் அமெரிக்காவின் செயல்முறையையும் விளக்கி

படிப்பகம்

www.padippakam.com



இருந்தார். ''இன்று இந்து சமுத்திரத்தில் குறிப்பாக தென் ஆசியாவில் இலங்கை முக்கியமான பகடைக்காயாக அமெரிக்காவால் உருட்டப்படுகிறது. சோசலிச வாடையே இல்லாமல் இந்நாட்டை உருமாற்றி அமைக்கும் பரிசோதனையை உலக வங்கியின் பொருளாதார நிபுணர்கள் இலங்கையில் இப்பொழுது மேற்கொண்டு வருகிறார்கள். பாராளுமன்ற ஜனநாயகத்தின் தோற்றத்தை முற்றாக மாற்றாமலும், தென்கொரியா, தாய்லாந்துபோல ராணுவ சர்வாதிகார ஆட்சிமுறைகளைப் புகுத்தாமலும் நாசுக்காக தனியார்துறை மேலாதிக்கம் செய்யும் பொருளாதார அமைப்பையும், ஜனாதிபதி தனிச்செல்வாக்கு வகிக்கும் பாராளுமன்ற முறையையும் வைத்துக் கொண்டு இலங்கையை அமெரிக்க ஏகாதிபத்திய வட்டத்திற்குள் இறுக்கமாய்ப் பிடித்துக் கொள்வதே மேற்கூறிய பரிசோதனையின் குறிக்கோளாகும்.''[35] கைலாசபதி பத்து ஆண்டுகளுக்கு முன்பு சுட்டிக்காட்டிய மேற்குறித்த அம்சங்கள் இலங்கையில் எத்தகைய வழிகளில் வளர்ச்சி பெற்றுள்ளன என்பதை எவரும் இன்று கண்டு கொள்ள முடியும். இவ்வாறு கூர்ந்து அவதானிப்பதற்குரிய ஒரு அரசியல் நிலைப்பாட்டினை அவர் கொண்டிருந்தமையையே இங்கு நோக்குதற்குரியதாகும்.

இவ்விடத்திலே கைலாசபதியின் தெளிவான அரசியல் நிலைப்பாட்டினை விரித்து விளக்குவது அவசியமாகின்றது. ஏனெனில் கைலாசபதியை ஒரு மேற்போக்கான நிலையில் வைத்து மார்க்சியவாதி என்று பட்டும்படாமலும் கூறிச் செல்ல முனைகிறார்கள். அதே போன்று அவர் ஒரு இடதுசாரி என்று பொதுப்படக்காட்டி அவரது ஆழமான அரசியல் நிலைப்பாட்டினை மறைத்துக் காட்டவும் சிலர் முற்படுவதுண்டு. இத்தகையவர்களில் இருவகையினரை இனம் காண முடிகின்றது. ஒரு வகையினர் கைலாசபதியைப் பல்கலைக்கழக எல்லைக்குள்ளும் படிப்பாளிகள் என்போர் மத்தியிலும் மட்டுமே வைத்திருக்க விரும்புபவர்கள்.

படிப்பகம்

www.padippakam.com



அடுத்த வகையினர் தங்களது உறுதியற்ற அரசியல் நிலைப் பாட்டின் அடிச்சறுக்கல்களால் விரக்தியடைந்து நிற்கும் நிலைக்கு உள்ளானவர்கள். இத்தகையவர்கள் தங்களில் ஒருவராகக் கைலாசபதியையும் காட்டிக் கொள்ள முனை கிறார்கள். ஆனால் இத்தகையவர்கள் மேலோட்டமாகக் காட்ட முற்படுகின்ற ஒரு பெயரளவிலான மார்க்சியவாதி யாகவோ அன்றி பொதுப்படக் கூறக்கூடியதாக ஒரு இடது சாரியாகவோ மட்டும் கைலாசபதியின் அரசியல் இயக்க நிலைப்பாடு இருந்ததில்லை.

மார்க்சியவாதி என்ற சொற்றொடர் இன்று விரித்துக் கூறுவதற்குரியதொன்றாகும். மார்க்சியத்திற்கு வாயுப சாரம் செய்யும் எவரும் மார்க்சியவாதியாக மாட்டார். அல்லது அதன் அம்சங்களில் ஒன்றை இரண்டை ஏற்றுக் கொள்வதாலும் ஒருவர் மார்க்சிய்வாதி என்றாகி விடாது. மார்க்சியவாதி என்பவர் யார் என்பதற்கு லெனின் ஒரு சந்தர்ப்பத்தில் தெளிவான விளக்கமளித்தார். ''வர்க்கப் போராட்டத்தை மட்டும் ஏற்பவர்கள் மார்க்சியவாதிகள் ஆகிவிட மாட்டார்கள்...வர்க்கப் போராட்டத்தை ஏற்றுக் கொள்வதை பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை ஏற்பது வரை விரித்துச் செல்பவனே மார்க்சியவாதியாவான். மார்க்சியவாதிக்கும் சாதாரண சிறு அல்லது பெரு முதலாளிக்கும் இடையே உள்ள மிகவும் ஆழமான வேறு பாடாக இதுவே அமைகிறது. மார்க்சியம் பற்றிய உண்மை யான புரிதலையும், அதை ஏற்றுக் கொள்வதையும் பரிசோதனை செய்து அறிவதற்கான உரைகல்லும் இது தான்.''[36] இந்த வரையறையை முழுமையாக விளங்கி ஏற்றுக் கொண்டு செயற்பட்டு வந்தமையினாலேயே கைலாசபதி மார்க்சியத்தை அதன் வளர்ச்சியான லெனினிய மாகவும் சமகாலத்தில் அவற்றின் மற்றொரு வளர்ச்சியான மாஓ சேதுங் சிந்தனையாகவும் கண்டு கொண்டார். ஆதலால் மார்க்சியம் லெனினியம் மாஓ சேதுங் சிந்தனை வரையான மார்க்சியத்தின் வளர்ச்சிப் போக்கினை ஏற்றுச்

www.padippakam.com



செயற்பட்டு வந்த ஒரு மார்க்சியவாதியாகவே கைலாசபதியைக் கண்டு கொள்ள வேண்டும்.

அடுத்து அவரைப் பொதுப்பட ஓர் இடதுசாரி என்று கூறுவது சில சமயங்களில் ஒருவித மயக்கத்தை ஏற்படுத்தக் கூடும். ஏனெனில் இலங்கையில் இடதுசாரி என்ற பொதுப் பெயருக்குள் பல்வேறு தத்துவார்த்தப் பிரிவினர் அடங்குவர். ட்ரொட்ஸ்கியவாதம், சேகுவேராவாதம், நவீன திரிபுவாதம், மார்க்சிய லெனினிய மாஓ சேதுங் சிந்தனைப் பாதை போன்ற பிரிவுகள் அனைத்தையும் இவ்விடதுசாரி என்ற பொதுப் பெயர் குறித்து நிற்கும். இவற்றின் வெளிப்பாடுகளாகப் பாராளுமன்ற சந்தர்ப்பவாதம், அதிதீவிர ஒருமுனைவாதம், இனவாதம் கலந்த சோசலிசவாதம், புரட்சிகர வெகுஜன மார்க்கம் ஆகிய யாவும் இடதுசாரி என்ற பெயரிலேயே அழைக்கப்படுகின்றது. அவ்வாறு இருக்கும்போது கைலாசபதியை ஓர் இடதுசாரி என்ற பொதுப்படக் கூறி அவர் எல்லா இடதுசாரி இயக்கங்களுடனும் தொடர்பு கொண்டிருந்தார் எனச் சுட்டிக் காட்ட முனைவது அவரது உண்மையான அரசியல் இயக்க நிலைப்பாட்டினை வலிந்து மறைக்க முற்படும் ஒருவகைச் செயல் என்றே கூற வேண்டும்.

இலங்கையின் இடதுசாரி இயக்கம் அறுபதுகளின் முற்பகுதி வரை மார்க்சிய தத்துவத்தில் இரண்டு நேர் எதிர்ப் போக்குகளைக் கொண்டதாகவே இயங்கி வந்துள்ளமையை அரசியல் அக்கறை உள்ள அனைவரும் அறிவர். ஒன்று ட்ரொட்ஸ்கியம் மற்றையது மார்க்சியம் லெனினியம். முன்னையதை சமசமாஜிகளும் பின்னையதைக் கம்யூனிஸ்டுகளும் பின்பற்றி நின்றனர். இவ்விரு அரசியல் அணிகளின் தத்துவம் கொள்கை நடைமுறை யாவற்றிலும் வேறுபட்ட நோக்கும் போக்குமே இருந்து வந்தன. அதனால் ஒன்றையொன்று எதிர்த்த தத்துவப் போராட்டத்தையும் நடத்தி வந்தன இவ்விரு அணிகளில் கைலாசபதி கம்யூனிச அணியிலேயே ஆரம்பம் முதல் இறுதிவரை இணைந்து செயற்

www.padippakam.com



பட்டு வந்தார். அவர் ட்ரொட்ஸ்கியம், நவீன திரிபுவாதம் ஆகியவற்றுக்கு எதிரான தத்துவார்த்தப் போராட்ட முனையிலே உறுதியும் முனைப்பும் கொண்டவராக இருந்து வந்தமை அவரது அரசியல் நிலைப்பாட்டின் விசேட ஆளுமைமிக்க அம்சமாகும். அதற்கு அணி சேர்ப்ப தாக அமைந்த மற்றொரு அம்சம் கவனத்திற்குரியதாகும். அதாவது மார்க்சியத்தைக் கைலாசபதிக்குப் பாடசாலை மாணவப் பருவத்தில் அறிமுகஞ் செய்து வைத்த மு. கார்த்திகேசன் முதல் பெர்மிங்ஹாம் பல்கலைக் கழகத்தில் கலாநிதிப் பட்டத்திற்கான ஆய்வுக்கு வழி காட்டி நின்ற மார்க்சிய அறிஞர் பேராசிரியர் ஜோர்ஜ் தொம்சன் வரையான ஆசிரியத் தோழர்களும் பல்வேறு வித மார்க்சியப் பிறழ்வுவாதங்களுக்கு எதிராக உறுதியான போராட்டங்களை தத்துவார்த்த முனையிலே முன் னெடுத்த பெருமைக்கு உரியவர்கள் என்பதும் முக்கியமான தாகும்.

இலங்கையின் இடதுசாரி இயக்க வரலாற்றில் ட்ரொட்ஸ்கியத்தின் பாதகமான எதிர்விளைவுகள் தாக்கம் மிக்கவையாக அவ்வப்போது இருந்துவந்துள்ளமையை அரசியல் எடுத்துக்காட்டும். இதற்கு ஓர் உதாரணமாக 1982இல் இடம் பெற்ற ஜனாதிபதி தேர்தலில் ட்ரொட்ஸ்கியவாதிகள் நடந்து கொண்ட நடைமுறை ஜே. ஆர். ஜயவர்த்தனாவின் உதவி நின்றமையைச் சுட்டிக் காட்டி, கைலாசபதி ஒரு விமர்சனக் கட்டுரையை 'செம்பதாகை'யில் எழுதியிருந்தார். ''இந்த நாட்டில் தொழிலாளர் இயக்கமும் மார்க்சிய இயக்கமும் முளைவிடத் தொடங்கிய காலம் முதல் ட்ரொட்ஸ்கியவாதம் உடன் பிறந்தே கொல்லும் வியாதிபோல் இடதுசாரி இயக்கத்தின் ஏகோபித்த வளர்ச்சிக்கும் ஒற்றுமைக்கும் குந்தகம் ஏற்படுத்திக்கொண்டே வந்திருக்கிறது. ட்ரொட்ஸ்கிய வாதத்தை அதன் பிறப்பிலேயே நன்கு அறிந்த ஸ்டாலின் அது இடதுசாரி இயக்கத்திற்குள் ஊடுருவியுள்ள முதலாளித் துவக் கண்ணோட்டத்தின் வெளிப்பாடு என்று சரியாகக்

படிப்பகம்

www.padippakam.com



குறிப்பிட்டார். பிலிப் குணவர்த்தனா முதல் கொல்வின் ஆர் டி சில்வா வரை, ட்ரொட்ஸ்கியவாதிகள் இலங்கையில் நமக்குக் காட்டிவந்திருக்கும் 'சாதனை' என்ன? பேச்சில் அதிதீவிரவாதமும் நடைமுறையில் படுமோசமான சரணாகதிமாகும்.''[37] இலங்கையின் இடதுசாரி இயக்கப் பரப்பிலே ட்ரொட்ஸ்கியத்தின் தவறான போக்கினைத் தத்துவத்தாலும் நடைமுறையாலும் எதிர்த்து நிற்பதில் கைலாசபதி ஏனைய மார்க்சிய லெனினிய வாதிகளுடன் இணைந்து நின்று ஈடாட்டமற்ற அரசியல் நிலைப் பாட்டினைக் கொண்டிருந்தார்.

அறுபதுகளின் முற்கூறிலே சர்வதேசிய ரீதியாகவும் தேசிய அளவிலும் கம்யூனிச இலக்கத்தின் மத்தியில் பெரும் வாதப் பிரதிவாதம் இடம்பெற்றது. சமாதானப் பாராளு மன்றப் பாதையை முன்வைத்தவர்கள் ஒருபுறமாகவும், புரட்சிகரப்பாதையை நாடிநின்றவர்கள் மறுபுறமாகவும் அணிசேர்ந்தனர். இவ்விரு அணிகளில் கைலாசபதி நவீன திரிபுவாதப் பாதையான சமாதானப் பாராளுமன்றப் பாதையாளர்களை நிராகரித்து புரட்சிகர மார்க்சிய லெனினியத்தின் பக்கத்திலேயே தன்னை நிலைநிறுத்திக் கொண்டார். மார்க்சியம் லெனினியம் மாஓ சேதுங் சிந்தனையை ஏற்றுக் கொண்ட கம்யூனிஸ்ட் கட்சியின் பக்கத்தில் நின்றும் வந்தார். அன்று அவர் மார்க்சிய லெனினிய வாதிகளைப் பிரதிநிதித்துவம் செய்த கம்யூனிஸ்ட் கட்சியின் வார இதழாக வெளிவந்த பத்திரிகை யான 'தொழிலாளி'யின் ஆசிரியர் குழுவுடன் இணைந்து செயற்பட்டார். அக்காலத்தில் கைலாசபதியின் மிக்வும் நெருங்கிய இலக்கிய—அரசியல் தோழராக இருந்த எஸ். இளங்கீரன் தொழிலாளியின் ஆசிரியராகப் பணி புரிந்து வந்தார்.

ஆனால் கைலாசபதி அக்காலகட்டத்தில் கட்சியின் பகிரங்கப்பட்டவர்கள் போன்று நேரடியாகவும் பகிரங்க மாகவும் நவீன திரிபுவாதத்திற்கு எதிரான தத்துவார்த்தப்

படிப்பகம்

www.padippakam.com



போராட்டத்தில் ஈடுபடவில்லையாயினும் தாம் முழு மூச்சுடன் இயங்கி வந்த இலக்கியத்துறைச் சகாக்கள்—நண்பர்கள் மத்தியில் தமது அரசியல் நிலைப்பாட்டினைத் தெளிவுபடுத்தி எல்லை வகுத்துக் கொண்டவராகவும் இருந்தார். அவர் தமது அரசியல் இயக்க நிலைப்பாட்டினைத் தெளிவுடனும் உறுதியுடனும் கொண்டிருந்த அதேவேளை அதனை ஒரு அதிதீவிர நிலைப்பாடாகக் கொண்டிருக்கவில்லை என்பது கவனத்திற்குரியதாகும். இதனை அவர் தலைமைத்துவம் வகித்துவந்த முற்போக்கு எழுத்தாளர் சங்க நடவடிக்கைகளில் காணமுடிந்தது. அத்தத்துவார்த்தப் போராட்டம் இடம்பெற்று கம்யூனிச இயக்கத்தினுள் பிளவு ஏற்பட்ட காலகட்டத்தில் முற்போக்கு எழுத்தாளர் சங்கம் என்ற பரந்த ஸ்தாபனத்தின் தலைமை உறுப்பினர்களிடையே மூன்று விதப் போக்குகள் நிலவி வந்தன. ஒன்று, அவ் ஸ்தாபனத்தை முற்று முழுதாகவே சோவியத் சார்பு க்கட்சியின் தலைமைக்கு ஆதரவானதொன்றாக மாற்ற முயன்ற போக்கு. இரண்டாவது, அதனை உடைத்து ஓர் ப்கிரங்க பிளவினை எழுத்தாளர்கள் மத்தியில் உருவாக்க முயன்ற ஒரு அதிதீவிர நிலைப்பாடு. மூன்றாவது; அவ்ஸ்தாபனத்தை இயக்கவும் தேவையில்லை—பிளவு படுத்தவும் வேண்டியதில்லை என்பதாகும். இம்மூன்று போக்குகளில் கைலாசபதி மூன்றாவது போக்கினையே சார்ந்து நின்றார். இதனால் முற்போக்கு எழுத்தாளர் சங்கம் குறிப்பிட்ட காலத்திற்கு இயக்கமற்றதொன்றாக இருக்க நேரிட்டது. இருப்பினும் இக்காலப்பகுதியில் தனது இலக்கிய அரசியல் கட்டுரைகளை 'தொழிலாளி', 'வசந்தம்' போன்றவற்றில் தத்துவார்த்த அழுத்தம் கொண்டவையாக எழுதினார். அதேவேளை 'மல்லிகை' போன்ற சஞ்சிகைகளில் இலக்கியக் கட்டுரைகளை எழுதினா ராயினும் தமது அடிப்படை நிலைப்பாட்டினைச் சந்தர்ப்பவாத நிலையில் விட்டுக்கொடுத்து எழுதினா ரில்லை.

www.padippakam.com



கைலாசபதி கலை இலக்கியத்துறையிலே அன்று வரை கூட்டுப் செயல்பாட்டின் மூலம் சாதிக்கப்பட்ட சாதனை களைப் பாதுகாக்கவும், அவற்றை மேலும் செழுமைப் படுத்தி முன்னெடுக்கவும் பிரதான தேவைகளை நீண்ட காலப் நோக்கில் அணுகி ஆராயமுற்பட்டார். அதன் விளைவாகவே குறிப்பிட்ட கால இயக்கமற்ற நிலைக்குப் பின்னான முற்போக்கு எழுத்தாளர் சங்கம் இயங்கக்கூடிய தொன்றாகியது. ஆயினும் அதனைப் பழைய நிலையில் இயங்க வைப்பதில் பல்வேறு சிரமங்களும் தடைகளும் உள்ளிருந்தும் வெளியில் இருந்தும் வரலாயிற்று. கைலாசபதி யும் முன்னைய கால தலைமைத்துவப் பாத்திரம் வகிக்க முன் வரவில்லையாயினும் முடிந்தளவிற்கு அதற்குள் ஐக்கியமும் போராட்டமும் என்ற நிலைப்பாட்டினையே வகித்து வந்தார். அதே வேளை தமது அரசியல் நிலைப் பாட்டிற்கு இசைவான இலக்கிய சஞ்சிகையாக வெளிவந்த 'வசந்தம்' குறிப்பிட்ட காலத்தில் நின்றுபோகவே அதனை ஈடுசெய்யும் வகையிலும் அரசியல் இலக்கியத்தைப் பரந்த அளவில் முன்னெடுக்கும் தேவையின் அடிப்படையிலும் தேசிய கலை இலக்கியப் பேரவையும்—'தாயகம்' கலை இலக்கிய சஞ்சிகையும் தோற்றம் பெற்றன. இவற்றின் தோற்றத்திலும், வளர்ச்சியிலும் கைலாசபதி அதிக ஆர்வமும் அக்சறையும் காட்டி நின்றார். அதற்கு அடிப் படைக் காரணம் தமது அரசியல் நிலைப்பாட்டிற்கு முற்றிலும் இசைவானதொரு இலக்கிய ஸ்தாபனமும் இலக்கிய சஞ்சிகையும் தோற்றம் பெற்றமையேயாகும். இருப்பினும் ஏனைய ஸ்தாபனங்களையோ அன்றி சஞ்சிகை களையோ நிராகரித்து வந்ததும் கிடையாது என்பது கவனத்திற்குரியதாகும். அவரது அரசியல் இயக்க நிலைப்பாடு இலக்கிய முனையிலே பரந்த ஐக்கியத்திற்கான தொன்றாயமைய, அவர் தமது தத்துவார்த்த நிலையிலே சமரசத்திற்கு இடமற்ற நிலையிலே செயல்பட்டுவந்தார். கைலாசபதியின் இத்தகைய அரசியல் இயக்க நிலைப் பாட்டினை அவரது இலக்கிய சகாக்களாக, அதே வேளை

www.padippakam.com



அரசியல்—தத்துவார்த்த முனையிலே எதிர்ப்பக்கத்தில், இருந்து வந்த நேர்மையான புத்திஜீவிகள், எழுத்தாளர்கள் பகிரங்கமாகவே ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

கைலாசபதி தமது இறுதிக் காலத்தில் அரசியலில் அதிக அக்கறை செலுத்துபவராகக் காணப்பட்டார், அதற்குக் காரணம் தேசிய—பிரதேச அளவிலும், சர்வதேச ரீதியிலும் நெருக்கடிகளும், போராட்டங்களும் வேகமாக வளர்ச்சி பெற்று வந்த ஓர் அரசியல் சூழல் அன்று நிலவியது. எனவே அரசியல் அக்கறை உள்ள எவரும் தத்தமது அரசியல் நிலைப்பாட்டிற்கேற்ற கருத்தை வலியுறுத்த வேண்டிய ஒரு விதத் தேவையும் இருந்தது.

தேசிய அரசியலில் 77க்குப்பின் இடம் பெற்ற அரசியல் பொருளாதார மாற்றங்கள் பாரிய தாக்கமிடையனவாய் இருந்தன. நாட்டின் அமைப்பு முறையில் வேகமான மாற்றங்கள் திட்டமிட்டே கொண்டுவரப்பட்டன. பல கட்சிப் பாராளுமன்ற முறையை வைத்துக் கொண்டே ஒரு கட்சிச் சர்வாதிகாரம் அரசோச்சும் நிலை வளர்க்கப்பட்து. இதன் உள்நோக்கம் ஏகாதிபக்தியப் பிடியை வைத்திருப்பதற்கு உதவுவதே ஆகும். இந்த ஏகாதிபத்தியம் பல்தேசிய நிறுவனங்கள் என்ற பெயரிலே இங்கு தமது பொருளாதாரச் சுரண்டலை நடத்தவும், அரசியல் தலையீடுகளைச் செய்யவும் ஆரம்பித்தது. இது பற்றி இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி (இடது)யின் அரசியல் பத்திரிகையான 'செம்பதாகை'யில் (பிற்காலத்தில் இப்பத்திரிகையிலேயே கைலாசபதி அதிக அரசியல் விமர்சனக் கட்டுரைகளை எழுதி வந்தார்) பின்வருமாறு எழுதினார், ''இன்று நமது நாட்டைச் சூறையாடும் வெளிநாட்டு சக்திகள் பல்தேசியக் கம்பனிகள் என்ற வடிவத்திலேயே புகுந்திருக்கின்றன. ஊசி மருந்திலிருந்து உரம்வரை யாவும் வெளிநாட்டு மாபெரும் கம்பனிகளிடமே அடங்கியிருப்பதை அனைவரும் அறிவர். கொழும்பு நகரமே விரைவில் வெளிநாட்டாரின்

படிப்பகம்

www.padippakam.com



விபசார ஸ்தலமாகவும் வர்த்தக நிலையமாகவும் மாறி விடலாம்.''[38]

இவ்வாறு நாட்டையும் மக்களையும் நாசகாரப் பாதையில் யூ. என். பி. அரசு இட்டுச் சென்ற அதே வேளை ஜனநாயகம், சுதந்திரம், வாக்குரிமை போன்றவற்றின் புனிதம் பற்றியும் அவற்றைப் பாதுகாப்பது தமது முழு முதற் கடமையென்றும் கூறி வந்தது. அவ்வரசுக்கு முதலாளித்துவ ஆளும்வர்க்க நலனில் அதிக அக்கறை கொண்டு அதற்காகத் திட்டமிட்டுச் செயல்படுவதில் வல்லவரும், கடைக்கோடிப் பிற்போக்குவாதியுமான ஜே. ஆர். ஜெயவர்த்தனா ஜனாதிபதியாக இருந்து தலைமை தாங்கி வந்தார். 1981இல் இலங்கைக்குச் சர்வசனவாக்குரிமை வழங்கப்பட்ட ஐம்பதாவது ஆண்டு நிறைவினை ஜே. ஆர். அரசு விமரிசையாக நினைவு கூர்ந்தது. அதன் நோக்கம் மக்கள் முதலாளித்துவப் பாராளுமன்ற மாயையை விட்டு அப்பால் சென்றுவிடக் கூடாது என்பதேயாகும். ஆனால் இப்பாராளுமன்ற ஆட்சிமுறை எவ்வாறு நாட்டு மக்களையும் அவர்களது எதிர்காலத்தையும் நாசப்படுத்தி நிற்கின்றது என்பதனைக் கைலாசபதி பின்வருமாறு சுட்டிக் காட்டினார். ''ஜனநாயக வளர்ச்சியிலே வாக்குரிமை குறிப்பிட்ட கட்டத்தை வகிக்கிறது என்பதை எவரும் மறுக்க மாட்டார். ஆயினும் சர்வசனவாக்குரிமை முதலாளித்துவ அமைப்புக்குள்ளேயே கிடைக்கப்பெற்றது நினைந்துகொள்ள வேண்டியது. பாராளுமன்ற ஆட்சி, கட்சிகளின் செல்வாக்கு, இரு கட்சிகளின் அத்தியாவசியம் முதலிய பிரித்தானியப் பாராளுமன்றவாதக் கருத்துக்கள் இந்த நாட்டிலும் பரவியபொழுது அதனைப் பயன்படுத்தி முதலாளித்துவக் கட்சிகள் தேசியம், இனம், மொழி, மதம் முதலியவற்றைப் பகடைக்காய்களாக உருட்டி அரசியல் சொக்கட்டான் ஆடக் கற்றுக் கொண்டன.''[39]

இத்தகைய பாராளுமன்ற அரசியல் பாதையின் மூலமே இலங்கையில் இன ஒடுக்குமுறை வளர்த்தெடுக்கப்பட்டு

www.padippakam.com



தமிழ் பேசும் மக்கள் இன்றைய கொடுமை மிகுந்த நிலைமைகளுக்குள் தள்ளப்பட்டனர். இனவாதமும் பின் பேரினவாதமும் சிங்கள ஆளும் வர்க்கத்தினால் தமிழ் மக்களுக்கு எதிராக அடக்குமுறை வடிவிலே திட்டமிட்டு ஏவிவிடப்பட்டன. அதனை எதிர்த்து நிற்பதில் அன்றைய தமிழ்த் தலைமைகள் சரியான கொள்கை தந்திரோபாயம் என்பனவற்றை முன்வைக்கத் தவறி விட்டனர். அத்தலைமைகள் ஒருபுறத்தில் இன உரிமைக் குரலை எழுப்பிய அதே வேளை அதனிலும் பார்க்க, தமது வர்க்க வளர்ச்சியின் தேவைக்கே அதிக முன்னுரிமை கொடுத்து வந்தனர். அதற்காக சிங்கள பெருமுதலாளித்துவ பிரபுத்துவ சக்திகளோடு கைகோத்து நிற்பதிலும் அவர்களுக்குச் சிரமம் இருக்கவில்லை. வர்க்க ரீதியிலும் இனரீதியிலும் அடக்கப்பட்ட எந்த மனிதனும் ஜே ஆர். ஜெயவர்த்தனாவையோ அன்றி அவர் வழிவந்த எந்த யூ. என். பி. தலைவரையோ இந்நாட்டின் ஜனநாயகத் தலைவர்கள் என்று போற்றிப் புகழ முடியாது. அப்படிப் புகழ்வதாயின் அத்தகையவர் உயர் வர்க்க ரீதியில் வளர்ச்சி பெற்ற ஒருவராக மட்டும் இருக்க முடியும். அந்த வகையிலேயே தமிழர் தலைமைகள் கடந்த காலத்தில் தமது அரசியல் நிலைப்பாட்டை வகித்து வந்துள்ளனர். இதனை உன்னிப்பாகச் சுட்டிக்காட்டி 1981இல் கைலாசபதி தம்து அரசியல் விமர்சனத்திலே மேல்வருமாறு எழுதினார். ''இன்று கூட்டணியை எதிர்நோக்கும் தருக்கரீதியான கேள்வி இதுதான்: ஜனநாயக விரோதம், பாசிசம், இன ஒதுக்கல், ஏகாதிபத்திய வழிபாடு, மோசமான மதவெறி இவை போன்றவற்றை கூச்சமில்லாமல் கடைப்பிடிக்கும் அரசாங்கத்தை ஆதரிப்பதா? எதிர்ப்பதா? ஆசனங்களைப் பாதுகாப்பதா? அரசியல் உரிமைகளுக்காகப் போராட முனைவதா? நாட்டின் மூலை முடுக்கெல்லாம் பரினமித்துள்ள யூ. என். பி ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளுடன் சேர்ந்து நிற்பதா? அல்ல, தமிழரை மேலும் தனிமைப் படுத்தி தமது பதவிகளைக் காப்பாற்றுவதையே பிரதான நோக்கமாய்க் கொண்டிருப்பதா?''[40]

படிப்பகம்

www.padippakam.com



இத்தகைய தமிழர் தலைமையைத் தமிழ் மக்கள் நிராகரித்து, தமது தேசியப் போராட்டத்தை முற்போக்கான திசையில் முன்னெடுக்க வேண்டும் என்பதையே கைலாசபதி தமது வாழ்நாளில் வற்புறுத்தி நின்றார். அவர் ஈழத் தமிழர்களின் தனித்துவத்தையும் தன்னடையாளங்களையும் தமது இடையறாத இலக்கிய முன் முயற்சிகளினூடே நிலைநிறுத்திக் காட்டியவர். எனவே அவர்களின் பாரம்பரிய பிரதேசங்கள், பொருளாதாரம், கல்வி, மொழி, வேலைவாய்ப்பு போன்றவற்றிலும் அத்தகைய தனித்துவங்களும் வளர்ச்சிகளும் வென்றெடுக்கப்படுவதற்குச் சரியான போராட்டம் தேவை என்பதை ஏற்றுக் கொண்டவராக இருந்தார். அத்தகைய போராட்டம் பரந்ததொன்றாகவும். அந்நிய ஏகாதிபத்திய உள்நாட்டு பிற்போக்கு சக்திகளுக்கு எதிரானதாய்—உறுதி மிக்கதாய் இருக்க வேண்டியதன் அவசியத்தையும் எடுத்துக்கூறி வந்தார். தமிழ் பேசும் மக்கள் மீதான பாகுபாடு, புறக்கனிப்பு, அடக்குமுறை என்பனவற்றை எதிர்த்து நின்ற அதேசமயம் தமிழரின் தேசியப் போராட்டத்தின் அவசியத்தையும் அதன் திசையையும் சுட்டிக்காட்டினார். 1956இல் பல்கலைக்கழக மாணவனாக இருந்தபோது கைலாசபதி முருகையனுக்கு எழுதிய கடிதம் ஒன்றிலே இவ்வாறு எழுதினார் ''இனி ஏதாவது எழுதவேண்டியதுதான். எனினும் தமிழரின் தேசியப் போராட்டம் பற்றி எழுதவும் ஆசை. எழுத்தாளன் தனித்து வாழ முடியாது என்பது எனது அடிப்படை நம்பிக்கை. எனவே 'சும்மா' இலக்கியம் தற்சமயம் படைக்க இயலாதல்லவா?''[41] இவ்வாறு தமிழர் தேசியப் போராட்டம் பற்றி எழுத ஆவல்பட்ட கைலாசபதி அவ்வாறு தனிக் கட்டுரை எழுதவில்லையாயினும் அவ்வப்போது எழுதியவற்றிலே தமிழர் தேசியம் பற்றிய கருத்துக்களைக் கூறத் தவறவில்லை.

உதாரணமாக, 1979இன் இறுதியில் சமூக விஞ்ஞானிகள் சங்கம் 'இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைகள்' என்ற தலைப்பில் நடத்திய கருத்தரங்கில் கைலாசபதியும்

படிப்பகம்

www.padippakam.com



ஒரு கட்டுரையை வழங்கினார். 'தமிழரிடையே மொழிப் பண்பாடு பற்றிய உணர்வு' எனும் தலைப்பிலான அக்கட்டுரையின் முடிவிலே மேல்வருமாறு கைலாசபதி கூறியிருப்பது ஆழ்ந்த சிந்தனைக்குரியதாகும். ''தமிழரின் கலாசார தேசியம் இன்று முக்கியமான திருப்புமுனையில் உள்ளது. தனக்கு முன்னுள்ள இரு வழிகளில் ஏதாவதொன்றை அது தேர்ந்தெடுக்க வேண்டியுள்ளது. ஒன்று கலாசாரத் தனிமைப்பாடு, மேலாதிக்கம் ஆகியவற்றைச் சார்தல். மற்றையது, பெரும்பான்மைச் சமூகத்திற்கும் தமக்கும் பொதுப்படையான அம்சங்களை இனங்கண்டு ஜனநாயக முறையிலான வாழ்க்கை மலர உழைத்தல் இவற்றில் எதைத் தேர்வது என்பது வெளிப்படையானது. ஆனால் இதற்கு ஒடுங்கிய இன நலன்களைத் துறந்து விட்டு மனிதனை மனிதன் சுரண்டாத சமூக ஒழுங்கை நோக்கிச் செல்லும் தேசியப் போராட்டம் ஒன்றை இரு இனங்களும் இணைந்து மேற்கொள்ளல் தவிர்க்க முடியாததாகும்.''[42]

கைலாசபதி சர்வதேச அரசியல் நிகழ்வுகளை உடனுக்குடன் அறிவதிலும் அவற்றின் போக்குகளை ஆழ்ந்து அலசி நோக்குவதிலும் வல்லவராயிருந்தார். அவர் தொடர்புச் சாதனங்கள் வாயிலாக அறிபவற்றை மட்டும் வைத்து முடிவுகளுக்கு வருபவர் அல்லர். அவர் தமக்கிருந்த பல்வேறு மட்டத் தொடர்புகளையும் பிரமுகர்களையும் பயன்படுத்தி ஆதாரப்பூர்வமான தகவல்களையும் உண்மை நிலைகளையும் எடுத்துக் கொள்வார். அவரது சர்வதேசிய நிலைப்பாடு தொடர்ச்சியானதொன்றாகவும் நிதானம் மிக்கதாகவும் இருந்து வந்துள்ளது. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தலைமையிலான உலகப் பிற்போக்கு சக்திகளே உலக மக்களின் பொது எதிரி என்பதைக் கண்டு கொண்ட காலகட்டத்தில் இருந்து சோவியத் யூனியனது சோசலிச விரோத நிலையால் உருவாகிய அதன் 'சமூக ஏகாதிபத்திய' உருவம் வரையான காலம்வரை வாழ்ந்தவர்.

படிப்பகம்

www.padippakam.com



சோவியத் யூனியனது முடிவு அதன் தவறான த, வார்த்தப் போக்கின் கருவிலேயே உற்பத்தியாகி இருந் மையை ஏற்கெனவே கைலாசபதி சுட்டிக் காட்டியிருந் தார். இரண்டு மேலாதிக்க வல்லரசுகள் உலகைக் கூறு போட வேகமாகப் போட்டிபோட்டு நின்ற சூழலிலே அவற்றின் பயங்கரத்தையும் அதனால் உலக சமாதானத் திற்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலையும் கைலாசபதி அடிக்கடி எடுத்துரைத்து வந்தார்.

குறிப்பாக சோவியத் யூனியனது ஆதிக்கப் போக்கையும் அதன் செயற்பாடுகளையும் அம்பலப்படுத்துவதில் கைலாச பதி அதிக அக்கறை காட்டினார். அதற்குக் காரணமும் இருந்தது. செங்கொடியைக் காட்டிக் கொண்டே செங் கொடியை அழிக்கும் வேலையைச் செய்து வந்தபடியாலும் சோசலிசம் என்ற உயர்ந்த இலட்சியத்தை இழிவுபடுத்தி வந்ததாலும் சோவியத் யூனியனை எதிர்த்து அம்பல மாக்கும் தேவை அன்று இருந்தது. அன்று ஆப்கானிஸ்தா னுக்குள் சோசலிசத்தைப் பாதுகாக்கும் பேரில் சோவியத் யூனியன் ஆக்கிரமிப்பை நடத்தியது. இது குறித்து கைலாசபதி தீர்க்கதரிசனத்துடன் எழுதிய கட்டுரையில் பின்வருமாறு கூறியிருந்தார். ''கடந்த சில வருடங்களாக உலகின் பல பாகங்களிலே சோவியத் யூனியன் ஊடுருவல் செய்து, தனது மேலாதிக்கத்தை நிலைநாட்டி வந்துள்ளது.

சில இடங்களிலே தனதுசூத்திரப்பாவைகளான, கியூபா, கிழக்கு ஜெர்மனி, வியட்நாம் முதலிய நாடுகளின் படை களையும் யுத்த தளபாடங்களையும் பயன்படுத்தி, தனது செல்வாக்கினை ஸ்திரப்படுத்தி வந்திருக்கிறது. மிக அண்மையிலே ஆப்கானிஸ்தானில் தனது ஆதிக்கத்தை ரொம்பவும் அப்பட்டமாக எதுவித ஒளிவுமறைவுமின்றி நடத்தி வருகிறது. 'பலநாள் ஏறிய குதிரை ஒரு நாளைக்குச் சறுக்கும்' என்பது போல இப்பொழுது ஆப்கானிஸ்தானில் சோவியத் யூனியன் பரிதாபகரமான நிலையில் சிக்கிச்

www.padippakam.com



கொண்டுள்ளது.'' [43] கைலாசபதியின் கூற்றுக்கள் இன்று நிதர்சனமாகியுள்ளன. ஆப்கானிஸ்தான் தன்னை விடுவித்துக்கொண்டுள்ளது. அதேவேளை சோவியத் யூனியன் அழிவுக்குள்ளாகி அற்றுப்போய்விட்டது.

இரண்டு மேலாதிக்க வல்லரசுகளின் பிடியில் சிக்காது மூன்றாம் உலக நாடுகள் தமது தேசிய பொருளாதாரத்தையும் தேசிய சுதந்திரத்தினையும் பாதுகாக்கும் போராட்டத்தைப் பரந்த அளவில் முன்னெடுக்கும் தேவையைக் கைலாசபதி தமது சர்வதேசிய கண்ணோட்டத்தின் மூலம் வலியுறுத்தி வந்தார். அதே போன்று சோசலிசத்தைப் புரட்டி ஒழிக்கும் வகையில் செயற்பட்டுவரும் ஏகாதிபத்திய பிற்போக்குச் சக்திகளுக்கு எதிரான தமது நிலையில் சோசலிச சீனா உறுதியாக இருந்து வருவதை ஆதரித்தும் நின்றார். தமது பாதையில் கடக்கவேண்டிய பாரிய தடைகளைச் சீனா கடந்து செல்வதில் தவறுகள், குறைபாடுகள் நிகழக்கூடுமாயினும் அதன் அடிப்படையான சோசலிச மார்க்கம் உறுதியானது என்பதனை 'தமது 1978-ஆம் ஆண்டுச் சீன விஜயத்தின்போது கண்டவற்றை 'மக்கள் சீனம். காட்சியும் கருத்தும்' என்ற நூலிலே ஆங்காங்கே விபரித்திருக்கிறார். சிக்கல் மிகுந்த சர்வதேசச் சூழலில் அவற்றின் அம்சங்களை நுனித்து ஆராய்ந்து சரியையும் தவறையும்—உண்மையையும் பொய்யையும் தெளிவுபடுத்திக்காட்டி விளக்குவதில் அவரின் ஆற்றல் தனித்தன்மை கொண்டது என்றே கூறுதல் தகும்.

உதாரணமாக, மூன்றாம் உலகத்தைச் சேர்ந்த இரண்டு இஸ்லாமிய அயல்நாடுகளான ஈரானும் ஈராக்கும் தமது பிணக்கைத் தம்முள் பேசித் தீர்ப்பதையே குறியாகக் கொண்டிருக்க வேண்டுமேயன்றி இரு மேலாதிக்க வல்லரசுகளின் உள்நோக்கங்களுக்குக் களமாக அமைக்ககூடாது என்பதைத் தமது அரசியல் விமர்சனங்களிலே சுட்டிக்



படிப்பகம்

www.padippakam.com



காட்டினார். ஈரானில் இடம்பெற்று வந்த அரசியல் நிகழ்வுகளில் இரு மேலாதிக்க வல்லரசுகளும் எய்த எத்தனிக்கும் நோக்குகளை முறியடித்து முன்னே செல்ல வேண்டியதன் அவசியத்தை கைலாசபதி 'ஈரானின் அவலம்' என்ற தமது அரசியல் விமர்சனக் கட்டுரையிலே சுட்டிக் காட்டினார். ''சுருங்கச் சொன்னால் அமெரிக்க ரஷ்ய (சோவியத்) போட்டா போட்டி ஈரானை வெகுவாகப் பாதிக்கிறது. அதிதீவிரமான மதவாதியாகத் தோற்ற மளித்தாலும் அயதொல்லா கொமெனி நடைமுறையில் பல விஷயங்களில் நடுநிலைமை வகித்து வந்திருப்பது கவனிக்கக் கூடியது. நாட்டின ஸ்திரப்பாட்டில் கொமெனிக்கு மிகுந்த கவனம் உண்டு. அவர் தான் முரண்படும் சக்திகளையும் குழுக்களையும் பிரிவுகளையும் ஒருவாறு இழுத்து வைத்துக் கொண்டிருக்கிறார். பலர் நினைப்பது போல கொமெனி அராஜகவாதியல்ல. தான் தந்திரம் மிக்க அரசியல் தலைவர் என்பதை கொமெனி தக்கவாறு காட்டியிருக் கிறார். ஆனால் ஈரானின் பிரச்சினைகளை முழுமையாக எதிர்நோக்கவும் நாட்டை முன்னெடுத்துச் செல்லவும் கொமெனி மாத்திரம் போதாது. அவருடைய மதியூகமும் ராஜதந்திரமும் மாத்திரம் போதாது.''[44] கைலாசபதி எதிர்பார்த்தபடி ஈரான் மேலாதிக்க வல்லரசுகளின் பிடிக் குள் சிக்காது முடிந்தளவிற்குத் தன்னைப் பாதுகாத்து வருவதும், ஈராக் அவற்றினால் வெகுவாகப் பாதிக்கப்பட்டு இறுதியில் வளைகுடா யுத்தம் என்ற பெரும் அனர்த்தங் களையும் சந்திக்க நேர்ந்ததும் யாவரும் அறிந்தவையே. கைலாசபதியின் சர்வதேச நிகழ்வுகள் பற்றிய கண்ணோட் டம் கொண்ட பிற்காலக் கட்டுரைகள் தனி நூலாக விரைவில் வெளிவரவிருக்கின்றன. அந்நூல் அவரது ஆற்றல் மிகுந்த கணிப்புகளுக்கும் கூர்மையான அரசியல் விமர்சனங் களுக்கும் தக்க சான்றாய் அமையும் என்பது நம்பிக்கை.

கைலாசபதி தமது இறுதிக் காலம்வரை தாம் வரித்துக் கொண்ட அரசியல் நிலைப்பாட்டினைத் தளம்பல்,

www.padippakam.com



ஈடாட்டம் இன்றி முன்னெடுத்து வந்தவர். தாம் சார்ந்து நின்ற கம்யூனிச இயக்கத்திற்குள் தேசிய சர்வதேசிய ரீதியாக வாதப் பிரதிவாதங்களும் அதனால் பிளவுகளும் இடம்பெற்ற பலவீனங்கள் ஏற்பட நேர்ந்த வேளைகளிலும் விரக்தியோ சோர்வோ அடைந்தது கிடையாது. அவ் வேளைகளில் உறுதியாகவும் நேர்மையாகவும் சரியான வற்றை இனம் கண்டு அவை சிறிய நிலையிற் காணப்பட்ட போதிலும் அவையே வளர்க்கப்பட வேண்டிய அடிப்படை சக்திகள் என்பதை உணர்ந்து தமது முழு ஒத்துழைப்பை யும் வழங்கி வந்த ஒருவராக இருந்தார். மார்க்சிய லெனினிய தத்துவத்தின் பூரண ஆளுமையால் வழி நடத் தப்படும் எவரும் அவ்வாறே செயல்படுவர். அவ்வாறான தத்துவ அடிப்படைத் தெளிவும் உறுதியும் அற்றவர்கள் பிளவுகளையும் பூசல்களையும் கண்டு விரக்தியுற்று ஒதுங்கிக் கொள்வர். அந்த வகையில் பல புத்திஜீவிகளுக்கு கைலாசபதி சிறந்த முன்மாதிரியாக வாழ்ந்து காட்டினார் என்று துணிந்து கூற முடியும். அவர் தம்மை ஓர் உயர் நிலைப் புத்திஜீவியாகக் கருதி சமூகம்—மக்கள்—அரசியல் ஆகியவற்றில் இருந்து ஒருபோதும் அந்நியப்படுத்தவில்லை. தம்நிலையில் எவ்வளவுக்கு மக்கள் மத்தியில் தம்மை நெருக்கமாக்க முடியுமோ அந்த அளவுக்கு நெருக்கமாக்கி நின்றார். சமுதாய மாற்றத்திற்கான ஒவ்வொரு கருத்தை யும் செயலையும் ஊக்கப்படுத்தி அவை மக்களைச் சென்றடையும் மார்க்கத்திற்கு விசை கொடுக்கும் பணி யினைச் செய்து வந்தார். மக்களின் விடுதலைக்கான இயக்கப் போக்கில் எந்தவொரு முனையிலான வேலையும் ஸ்தாபனப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டு முன்னெடுக்கப் படுவதை அவர் எப்பொழுதும் வலியுறுத்துபவராகக் காணப்பட்டார். உதிரித்தனமான வேலைமுறை எந்த ஆற்றல் உள்ளவரையும் சீரழித்து விடும் என்பதை கைலாசபதி அடிக்கடி சுட்டிக் காட்டுவார். இதுபோன்ற அம்சங்கள்தான் அவரைப் பாட்டாளிவர்க்க அரசியல் நிலைப்பாட்டில் இறுதிவரை உறுதி குறையாமல் நிற்க வைத்தது.

www.padippakam.com



கைலாசபதி பெருமுயற்சியுடன் ஈடுபட்டிருந்த கலை இலக்கியத்துறைப் பங்களிப்புக் காரணமாகவும், கல்வித் துறைப் பதவிகள் காரணமாகவும் கட்சியின் முடிவிற்கும் அவரது விருப்பிற்கும் ஏற்றவாறு சில காலத்தில் கட்சி உறுப்புரிமை பெற்றும் சில காலத்தில் கட்சி உறுப்புரிமை இல்லாதும் இருந்து செயல்பட்டு வந்திருக்கின்றார். அவரது முழுக் காலத்திலும் தத்துவம்—நடைமுறை—வாழ்வுமுறை என்பனவற்றில் ஓர் மார்க்சிஸ்ட் லெனினிஸ்டாக—நேர்மையான கம்யூனிஸ்ட்டாக வாழ்ந்து வந்திருக்கிறார் என்பது அறிய முடிந்ததொன்றேயாகும். நவீன சீன இலக்கியத்தினதும் கலாச்சாரத்தினதும் முன்னோடி எனப் போற்றப்படும் லூ சுனை நினைவு கூர்ந்து ஒரு சந்தர்ப்பத்தில் மாஓ சேதுங் பின்வருமாறு கூறினார். ''லூசுன் கட்சியில் இல்லாத ஒரு கம்யூனிஸ்ட். அவர் சீன கலாசார இயக்கத்திற்கு மாபெரும் பங்களிப்பு வழங்கியவர். அவர் சிறிய காற்றுக்கு வளைந்து முறியும் புல் போன்றல்லாது பெரும் புயல் காற்றுக்கு ஈடு கொடுத்து நிற்கக் கூடிய பெருவிருட்சம் போன்றவர்.'' கைலாசபதியை எவரும் லூ சுனாகக் கொள்ள வேண்டியதில்லை. ஆனால் லூ சுனின் சிறப்பான அம்சங்கள் பலவற்றைக் கைலாசபதியில் கண்டு கொள்ள முடியும் என்று கூறுவது மிகையாகாது.

கைலாசபதி தமது இறப்புக்கு முந்திய வருடங்களில் இரண்டு இலக்கிய மேதைகளுக்கு நூற்றாண்டு விழாக்களை தலைமை தாங்கி நடத்தினார். இருவரும் இலக்கியத் துறையிலே கைலாசபதியின் பெருமதிப்புக்கும் போற்றுதலுக்கும் உட்பட்டவராவார். ஒருவர் சீன இலக்கியத்தின் வழிகாட்டியான லூ சுன். மற்றையவர் நவயுகக் கவியான பாரதி. லூ சுனும் பாரதியும் ஏறத்தாழ ஒரே காலத்தில் இரு பெரும் பழமை வாய்ந்த அருகருகான நாடுகளைச் சேர்ந்த இலக்கிய புருஷர்களாவர். அவர்களது இலக்கிய நோக்கிலும் போக்கிலும் வேறுபாடுகள் இருப்பினும் இலக்கியத்திற்கும் அரசியலுக்குமிடையில் உள்ளார்ந்த நெருங்கிய உறவைக்

படிப்பகம்

www.padippakam.com



கண்டிருந்ததில் அவரவர்க்குரிய தெளிவான வேறுபாட்டினைக் கொண்டிருந்தனர். அதனாலேயே இலக்கியத்திற்கும் அரசியலுக்குமிடையில் பெருமதில் எழுப்ப முனைவதை எதிர்த்து வந்த கைலாசபதி அவ்விரு இலக்கிய வழிகாட்டிகளைப் போற்றி அவர்களது நூற்றாண்டு நினைவைத் தேசிய கலை இலக்கியப் பேரவையின் ஊடே தலைமை தாங்கி நடத்தி நின்றார். இதனையொட்டி லூ சுனைப்பற்றி கருத்துச் செறிவுமிக்க கட்டுரை ஒன்றினைக் கைலாசபதி செம்பதாகையில் எழுதியிருந்தார். அதில் ஓரிடத்தில் பின்வருமாறு கூறுகிறார். ''சர்வ வியாபகமான மார்க்சிய லெனினியத்தை சீன தேசத்தின் பௌதீக நிலைமைகட்கு ஏற்ப மாஓ அவர்களும் பிறரும் அரசியல்முறையில் சீனமயப்படுத்திய அதே மகத்தான பணியையே கலை இலக்கியத் துறையில் லூசுன் செய்தார். அந்த வகையில் மாபெரும் சீனப் புரட்சியின் ஓர் அங்கமாக விளங்கினார் லூ சுன். ஏகாதிபத்திய எதிர்ப்பு—ஜனநாயக உரிமைப் போராட்டம் முதலியவற்றில் ஈடுபட்டிருக்கும் இன்றைய மூன்றாவது மண்டல நாடுகளின் எழுத்தாளருக்கு லூ சுன் சிறந்த வழிகாட்டியாவார்''[45] என்று கூறி அவரின் படைப்புக்கள் தமிழில் பரவலாக அறிமுகப்படுத்தப்படும் அவசியத்தை வற்புறுத்தியும் சென்றார்.

இலங்கையில் பாரதியின் முக்கியத்துவத்தை ஆய்வு, அறிவு, வெகுஜன வழிகளில் அறிமுகப்படுத்தி பெரும் தாக்கத்தினை உருவாக்கியவர்களில் கைலாசபதி முன்னணி பாத்திரத்தை வகித்தவர். அது தனி ஆய்வுக்கும் விரித்து நோக்குதற்குரியதொன்றாகும்.

கைலாசபதியின் இலக்கியப் பங்களிப்பிற்கான காலத்தை 1952—1982 என ஆய்வாளர்கள் கணித்துக் கொள்வர். அவரது அரசியல் இயக்க நிலைப்பாட்டின் முழுமையை நோக்குமிடத்து ஏறக்குறைய அதே காலப் பகுதியைக் குறித்துக் கொள்வது ஏற்றுக் கொள்ளத் தக்கதொன்றே யாகும். அவரது அரசியல் நிலைப்பாடு ஆரம்பம் முதல்

படிப்பகம்

www.padippakam.com



இறுதிவரை வளர்ச்சிப் படிமுறை கொண்டதாகவும்—தெளிவும் உறுதியும் சமுதாய மாற்றத்தின் மூலமான மனிதகுல விடுதலை என்ற மகத்தான இலட்சியப் பற்றார்வம் மிக்கதாகவும் இருந்து வந்ததைக் காணலாம்.

# 7

பேராசிரியர் கைலாசபதியின் சமூகப் பங்களிப்பினை மதிப்பீடு செய்யும்போது அவரது சாதனைகள்—அணுகுமுறையும் ஆய்வுத்திறனும் முடிவுகளும் நூற்றுக்கு நூறு என்ற விதத்தில் முற்றிலும் சரியானவை என்றோ தவறுகள் குறைபாடுகளுக்கு அப்பாற்பட்டவை என்றோ வாதிட வேண்டியதில்லை. இதனைக் கைலாசபதியோ அன்றி அவரைப் போன்ற சமூக விஞ்ஞானச் சிந்தனையாளர்களோ என்றும் ஏற்றுக் கொண்டதுமில்லை. உலகில் எந்தவொரு மாமேதைத் தன்மை வாய்ந்த மனிதனும் முற்றுமுழுதாகச் சரியாகவும் குறைபாடுகள் எதுவும் அற்று சாதனைகளை மட்டுமே புரிந்தார்கள் என்று கூறுவது உண்மைக்கு நேர் எதிரானதாகும்.

இதுபற்றி பேராசிரியர் சி. சிவசேகரம் கூறியிருப்பது நோக்குதற்குரியதாகும். ''ஒரு ஆய்வாளனின் தவறுகள் மூன்று காரணங்களினால் ஏற்படமுடியும். ஒன்று, போதிய தகவல்கள் கிடைக்காமையால் ஏற்படுவன. இரண்டு, அடிப்படையான உலகக் கண்ணோட்டம் காரணமாக ஏற்படக்கூடியன. மூன்று, அவருடைய சொந்த முடிவுகள் காரணமாக ஏற்படுவன. இவற்றில் கைலாசபதியைத் தவறுகாண முயல்வோர் அவருடைய தவறுக்கான அடிப்படை அவருடைய உலகக் கண்ணோட்டமாகிய மார்க்சியம் காரணமானதே எனக் காட்ட முயல்கிறார்கள். அது முற்றிலும் தவறானதோர் முயற்சியாகும், அவ்வாறே அவரது ஆற்றலிலும் தவறுகாணச்சொல்லமுடியாது. உண்மையில்

www.padippakam.com



அவரது தவறுகள் தரவுகளின் போதாமையினால் ஏற்பட்டமையாகவே இருக்க முடியும்'' இது குறித்து மற்றுமோர் அம்சத்தை இவ்விடத்திலே சுட்டிக்காட்டுதல் அவசியமாகின்றது. கைலாசபதி தமது வாழ்நாளில் தனித்து நின்ற ஒருவர் அல்லர். இலக்கியத்திலும் அரசியலிலும் ஸ்தாபன ரீதியாக இணைந்து நின்று கூட்டு முடிவுகளும் தனிநபர் பொறுப்பும் என்ற அடிப்படையில் செயல்பட்டு வந்த ஒருவர் என்பதைக் கவனத்தில் கொள்வது முக்கியமானதாகும். இதனால் அவர்மீது சுமத்தக்கூடிய குற்றச் சாட்டுகளுக்குத் தனியே கைலாசபதி மட்டும் பொறுப்பு தாரியாக மாட்டார் என்பதும் கவனத்திற்குரியதாகும். எனவே கைலாசபதியின் மீது குற்றம் குறைகாண முற்படுவோர் அவர் வாழ்ந்த சமூகச் சூழலையும் அக்காலத்து இலக்கிய அரசியல் ஸ்தாபனங்களின் செயற் பாடுகள் முடிவுகளையும் முழுமையாக மனதிற்கொண்டே நோக்குதல் வேண்டும். அதிலும் ஆழமானதொன்றாகக் காணவேண்டியது யாதெனில் கைலாசபதியின் கூறப்படும் குறைபாடுகள் அல்லது தவறுகள் அவரது சமூகப் சூழலையும் அச்காலத்து இலக்கிய அரசியல் ஸ்தாபனங்களின் செயற் பாடுகள் முடிவுகளையும் முழுமையாக மனதிற்கொண்டே நோக்குதல் வேண்டும். அதிலும் ஆழமானதொன்றாகக் காண வேண்டியது யாதெனில் கைலாசபதியின் மீது கூறப்படும் குறைபாடுகள் அல்லது தவறுகள் அவரது சமூகப் பங்களிப்பிற்கான சாதனைகளைவிட விஞ்சி நிற்கின்றவா என்பதேயாகும். எந்த வீதத்தில் அவற்றின் பரிமாணம் உள்ளது என்பதே முக்கியமானதாகும்.

கைலாசபதியின் அணுகுமுறையிலும் முடிவுகளிலும் குறையும் தவறும் காணமுனைவோரில் பல வகையினர் இருக்கிறார்கள். அவர்கள் யாவரும் தத்துமது உலகக் கண்ணோட்டத்திற்குத் தகுந்தவாறே கைலாசபதியை மதிப்பீடு செய்ய முற்படலாம். இவர்களில் சிலர் நேர்மை யாகவும், தர்க்க நியாயங்களுடனும் தமது கருத்துக்களை

www.padippakam.com



யும் வாதங்களையும் முன்வைக்க முயல்கிறார்கள். அவை வரவேற்கத்தக்கவையும் சிந்தனைக்குரியவையுமாகும். இத்தகைய ஆக்கபூர்வமான அணுகுமுறைகளை மேலும் செழுமைப்படுத்தி வளர்த்துச் செல்வதற்கு உதவக்கூடியவைகளேயாகும். ஆனால் சிலரது மதிப்பீடுகள் தர்க்க நியாயங்கள் என்ற எல்லைகளைத் தாண்டி காழ்ப்புணர்ச்சி மிக்கசேறு சகதிகளை அள்ளிவீசும் வகையினவாகக் காணப்படுகின்றது. இத்தகைய வீசுதல்களைக் கைலாசபதி தமது வாழ்நாளில் எதிர்கொண்டு அவற்றை நெஞ்சுரத்துடன் எதிர்த்தும் நின்றவர். க. நா. சு. கோஷ்டியினர் தொட்டு மு. தளையசிங்கம் வட்டத்தினர் வரை உதிரிகளான தனிநபர்கள் ஈறாக கைலாசபதியின் நிலைப்பாட்டை எதிர்த்து அலை அலையாக மோத முற்பட்டுத் தோல்விகண்டனர் என்பது இலக்கிய உலகின் இரகசியங்கள் அல்ல. இவர்கள் அனைவரும் கைலாசபதியின் மீது தொடுத்த கணைகள் கைலாசபதி என்ற தனி மனிதன் மீதானவையல்ல. அவர் இறுதிவரை ஈடாட்டம் இன்றிப் உறுதியாகப் பின்பற்றி நின்ற மார்க்சிய லெனினியக் கோட்பாட்டு ரீதியிலான இலக்கிய அரசியல் கொள்கை நிலைப்பாட்டின் மீது ஏவப்பட்ட எறிகணைகளாகவே அவற்றைக் கொள்ள முடியும். இருப்பினும் அவற்றை எதிர்த்து முறியடிப்பதில் கைலாசபதி என்றும் சளைத்தவராக இருந்தது கிடையாது என்பதை வரலாற்றுப் பதிவுகள் என்றும் எடுத்துக்காட்டும்.

தமிழ் இலக்கிய உலகிலே—ஈழத்துத் தமிழர் சமூகப் பரப்பிலே ஆழமாக வேர்பாய்ச்சி நின்றதொரு பெரு விருட்சம் பேராசிரியர் கைலாசபதி. அவ்விருட்சம் வீரியம் மிக்க விதைகளை விட்டுச் சென்றுள்ளது. அவ்விதைகள் எதிர்காலத்தில் பலநூறு விருட்சங்களைத் தோற்றுவிக்கும் என்பதில் எவ்வித ஐயமும் இருக்க முடியாது. சமூக இயக்கம் தேக்க நிலைகளையும் தற்காலிகப் பின்னடைவுகளையும் தாண்டி, தனது வளர்ச்சிப் பாதையில் முன்னேறும் போது அத்தகைய விதைகளும் தமது வளர்

www.padippakam.com



நிலையில் சென்று விருட்சங்களாக மாறி பயன்மிகு சமூகப் பங்களிப்பினை மேலும் பன்மடங்காக வழங்கி நிற்கவே செய்யும்.

கைலாசபதியின் வாழ்வுக் காலத்தையும், ஆக்கப் பணிகளையும், அவை தாக்கம்மிக்க சமூகப் பங்களிப்பாகத் திகழ்வதையும் வரிசைப்படுத்திப் பார்க்கும்போது அவரது ஆற்றலும், அறிவுத் திறனும், சிந்தனைப் பரப்பும் சீரான ஒருபடிமுறை வளர்ச்சிப் பாதையில் மேம்பட்டு வந்துள்ளமையைக் கண்டு கொள்ள முடியும். அவை அவரது இறுதிக் கால கட்டத்தில் பரந்து விரிந்து சிறந்து செழுமை மிக்கவையாகத் திகழ்ந்தமையும் கூர்ந்து நோக்குதற்குரிய தொன்றாகும்.

கைலாசபதி சமூகத்தில் இருந்து ஒதுங்கித் தனிமைப் பட்ட ஒருவராகவோ அன்றி ஒரு சராசரி மனிதராக வாழ்ந்தால் மட்டும் போதுமானது என்ற நிலையிலோ வாழ்ந்து மறைந்தவர் அல்லர். அதே வேளை சமூகத்திற்குத் தம்மை விட்டால் வேறு யாரும் இல்லையே என்ற விதமாக யாவற்றிலும் தம்மைப் புகுத்தி வரையறையற்று வாழ்ந்தவரும் அல்ல. தாம் வரித்துக்கொண்ட தத்துவத்திற்கு, சொல்லால்—வாயுபசாரத்தால் அன்றி செயலால்—நடைமுறையால் தமது ஆகக்கூடிய சேவையினை வழங்கிச் சென்றவர். அவர் தேசியத்தைப் பாட்டாளி வர்க்க சர்வ தேசியத்தின் ஊடே தரிசித்து நின்றவர். அதனாலேயே தேசியம் என்ற பெயரில் பெரும் தேசிய வெறி பேரினவாதமாக உருமாறியபோது அதனை எதிர்ப்பதில் முன்நின்றவர். மனித நேயத்தை மார்க்சிய உலகப் பார்வையின் ஊடே நிலை நிறுத்தப் போராடியவர். அவர் வர்க்கங்களைக் கடந்த மனிதாபிமானத்தை ஒருபோதும் ஏற்றுக் கொண்டவர் அல்லர். வர்க்கப் போராட்டத்தின் அடிப் படையில் வென்றெடுக்கப்படும் புதிய சமுதாய அமைப் பினால்தான் உண்மையான மனித நேயத்தையும் மனிதாபி மானத்தையும் நிலைநிறுத்தி முன்னெடுக்க முடியும் என்ற

படிப்பகம்

www.padippakam.com



நம்பிக்கையுடன் அதற்காகச் செயல்பட்டவர். தாம் வாழ்ந்த சமூகத்தின் விடுதலையை முழு மனித குலத்தினதும் விடுதலையின் ஓர் அம்சமாகவே கைலாசபதி கண்டது மாத்திரமன்றி அவ்விடுதலைப் பாதைக்குத் தம்மால் முடிந்த பங்களிப்பினை ஆகக்கூடிய அளவில் வழங்குவதிலும் முன்முயற்சி உடையவராக இருந்து வந்தார்.

பாரதியிடம் அளவு கடந்த பற்றார்வத்தைக் கொண்டிருந்த கைலாசபதி அவனது குறுகியகால வாழ்வின் இழப்பைக் கண்டதன் விளைவாக தாம் சாதிக்க வேண்டியவற்றைக் கடும் முயற்சிகளினாலும் ஓய்வு ஒழிச்சல் இன்றியும் செயலாக்கி வந்தார். பாரதி தனது முப்பத்தொன்பதாவது வயதில் இறந்தான். அவனது சமூகப் பங்களிப்பினைப் பலவகைகளிலும் சமூகப் பயன்மிக்கதாக நிலை நிறுத்தி வந்த கைலாசபதி நாற்பத்தொன்பதாவது வயதில் மறைந்தார். காலத்துக்கு முந்திய மறைவை முன் உணர்ந்தவர் போல் கைலாசபதி தமது இறுதிக்காலத்தில் ஆற்றல் அனைத்தையும் வேகப்படுத்தி அதன் ஊடே சமுதாயத்திற்குத் தம்மால் வழங்கக் கூடியவற்றை வழங்கிச் செல்லும் ஒருவராகத் திகழ்ந்தார் என்பது அவருடன் நெருக்கமாக நின்றவர்களால் நன்கு உணரப்பட்டதொன்றாகும். இச்சந்தர்ப்பத்தில் கைலாசபதி அடிக்கடி நினைவுறுத்தும் பாரதியின் பாடலொன்று நம் நினைவின் முன்னே தோன்றுகின்றது

தேடிச் சோறுநிதந் தின்று—பல
    சின்னஞ் சிறுகதைகள் பேசி—மனம்
வாடித் துன்பமிக உழன்று—பிறர்
    வாடப் பலசெயல்கள் செய்து—நரை
கூடிக் கிழப் பருவ மெய்தி—கொடுங்
    கூற்றுக் கிரையெனப்பின் மாயும்—பல
வேடிக்கை மனிதரைப் போலே—நான்
    வீழ்வே னென்று நினைத்தாயோ?

படிப்பகம்

www.padippakam.com



சமுதாயத்தில் யாவற்றையும் விட சக மனிதனைப் பற்றிய அக்கறையில் இருந்து உருவாகும் சமூக பார்வை மிகப் பெறுமதி வாய்ந்தது என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டதொன்று. சக மனிதர்களைப் பற்றிய ஆழ்ந்த அக்கறையும் பற்றுமே இறுதியில் சமுதாய மாற்றத்தின் அவசியத்தை ஒருவருக்கு உண்டாக்குகின்றது. எனவே சமுதாய மாற்றத்தை வேண்டி நிற்பவர்கள் மத்தியில் ஆற்றல் மிக்க மனிதர்கள் உருவாகி, சமூகத்தை எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் பல்வேறு துறைகளிலும் பணிபுரிந்து தமது பங்களிப்பினையும் வழங்குகிறார்கள். ஒரு சந்தர்ப்பத்தில் அறிஞர் பிளெக்கனேவ் பின்வருமாறு கூறியமை இவ்விடத்திலே பயனுடையதாகும்... "மனிதர்களை மாபெரும் சமுதாயப் பிரச்சினைகள் எதிர்கொள்கின்றன. மற்றவர்களைவிட யார் இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உதவியாக அதிகம் பணி புரிகிறார்களோ அவர்களைத்தான் மகா புருஷர்கள் என்று அழைக்கின்றோம்." உலகில் நமது நாட்டில் காலத்திற்குக் காலம் சமூகப் பிரச்சினைகள் பலவற்றுக்கு முகங்கொடுத்து விடைகாண முற்பட்ட பல்துறை சார்ந்த மேதைகளும் சிந்தனையாளர்களும் மகாபுருஷர்களும் தோன்றியிருக்கிறார்கள். எதிர்காலத்தில் மேலும் தோன்றுவார்கள். அவர்கள் இடையே பேராசிரியர் க. கைலாசபதியும் ஒருவராகி இருப்பார் என்பது ஐயத்திற்கு இடமற்றதொன்றாகும். □

படிப்பகம்

www.padippakam.com

## அடிக் குறிப்புகள்

1. லெனின்: மார்க்சியத்தின் மூன்று அடிப்படைகளும் அதன் மூன்று உட்கூறுகளும்.

2. மு. கார்த்திகேசன் (1918—1977) சிறந்த கல்வி யாளரும் ஆசிரியருமாவர்: 1943இல் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி உருவாக்கப்பட்ட பின் வட பகுதிக்கு மார்க்சியத்தையும் கம்யூனிசக் கருத்துக் களையும் அறிமுகப்படுத்தியவர். படித்தவர் முதல் பாமரர்வரை யாவராலும் நன்கு அறியப்பட்ட முன்மாதிரியான கம்யூனிஸ்ட்டாக வாழ்ந்து மறைந் தவர்.

3. கார்ல் மார்க்ஸ்: லுத்விக் பாயர்பேக் மீதான ஆய்வுரை II.

4. க. கைலாசபதி: ஈழத்து இலக்கிய முன்னோடிகள். 1986

5. க. கைலாசபதி சமூகவியலும் இலக்கியமும்— முன்னுரை.

6. மேற்படி நூல்.

7. மேற்படி நூல்.

8. க. கைலாசபதியின் முன்னுரை: மண்ணும் மனித உறவுகளும்—கோ. கேசவன்—1979

9. மேற்படி நூல்

படிப்பகம்

www.padippakam.com



10. க. கைலாசபதி: பழந்தமிழ் இலக்கியத்தில் ஊழ் பற்றிய கருத்து. 1981ஆம் ஆண்டு மதுரை மாநகரில் இடம் பெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆங்கிலக் கட்டுரை. தமிழில் மாதகல் வ. கந்தசாமி, தாயகம் 1985 மார்கழி.

11. தீக்கதிர். உலகத் தமிழ் மாநாட்டு மலர் 1980—81

12. பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும் 1966— க. கைலாசபதி.

13. சங்கம் முதல் இன்றுவரை—க. கைலாசபதி, தீக்கதிர் உலகத் தமிழ் மாநாட்டு மலர். 1980—81.

14. கோ. கேசவன் : மண்ணும் மனித உறவுகளும். முன்னுரை க. கைலாசபதி

15. க. கைலாசபதி : அடியும் முடியும்.

16. மேற்படி நூல்.

17. இ. முருகையன் : இன்றைய உலகில் இலக்கியம் 1988.

18. பழைமையும் புதுமையும்—க. கைலாசபதி. வசந்தம் 1965. மறுபதிப்பு செம்பதாகை 1983 கார்த்திகை— மார்கழி.

19. க. கைலாசபதி : இலக்கிய சிந்தனைகள் 1983

20. அபேதன் என்னும் புனை பெயரில் 1965 ஆகஸ்ட் இதழ் : தொழிலாளி.

21. இங்கிருந்து எங்கே...? க. கைலாசபதி, தாயகம், 1974 சித்திரை.

22. க. கைலாசபதி : ஈழத்து இலக்கிய முன்னோடிகள் 1986.

படிப்பகம்

www.padippakam.com



23. தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் இரண்டாவது மாநாட்டு மலர் 1969.

24. கைலாஸ் நினைவேடு—1988.

25. தாயகம்—கலை இலக்கிய இதழ் 1974 ஆனி.

26. க. கைலாசபதி : இலக்கிய சிந்தனைகள் 1983.

27. எழுத்தாளர் பத்திரிகையாளர்களிடையே கைலாசபதி, பேராசிரியர் சி. தில்லைநாதன், தாயகம், இதழ் 21.

28. எங்கள் நினைவுகளில் கைலாசபதி; இ. முருகையன், 'கைலாசபதி வாழ்வும் எழுத்தும்' 1984.

29. க. கைலாசபதி 15-6-52-இல் முருகையனுக்கு எழுதிய கடிதம்.

30. க. கைலாசபதி ; இலக்கிய சிந்தனைகள்—1983.

31. அபேதன்—புனைபெயரில் தொழிலாளி வார இதழ் 1965 ஆகஸ்ட் 15.

32. அபேதன்—தொழிலாளி இதழ் 1965 ஆகஸ்ட் 28.

33. மேற்படி இதழ்

34. தொழிலாளி 1966 அக்டோபர் 27 இதழ் அபேதன் கட்டுரை.

35. செம்பதாகை—ஜனமகன் புனைபெயரில் 1981 கார்த்திகை.

36. லெனின் தொகுப்பு நூல் 45.

37. செம்பதாகை—ஜனமகன் 1982.

38. செம்பதாகை—ஜனமகன் 1980 ஆகஸ்ட்—செப்டம்பர்.

39. செம்பதாகை—ஜனமகன் 1981 ஆனி—ஆடி இதழ்.

40. மேற்படி இதழ்.

படிப்பகம்

www.padippakam.com



41. க. கைலாசபதி 7-6-52-இல் முருகையனுக்கு எழுதிய கடிதம்.

42. இலங்கையில் இனத்துவமும் சமூக மாற்றமும்—சமூக விஞ்ஞானிகள் சங்க வெளியீடு 1985.

43. செம்பதாகை—உதயன் புனைபெயரில் 1979 ஆனி இதழ்.

44. செம்பதாகை—உதயன் 1981 ஆனி—ஆடி இதழ்.

45. செம்பதாகை—க. கைலாசபதி 1981 புரட்டாசி—ஐப்பசி இதழ்.

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

சவுத் ஏசியன் புக்ஸ்

படிப்பகம்